

கல்கி
KALKI
8.8.99
ரூ. 4.50
டிவியால் பண்பாட்டுச்
சீர்குலைவா?



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



16,காமராஜ் சாலை,பழையபெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம்,சென்னை-600063.
Tel&FAX : 2376129,Cell Ph : 9841050464
E-mail: sspeetam@md3.vsnl.net.in
& sspeetam@hotmail.com
WEB SITE: www.intamm.com / sspeetam

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்!   வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 75 மாணவர்களும் 25 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (100 பேருக்கு)	ரூ.	750/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ.	1,500/-
இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	500/-
ஒரு மாணவனுக்கு ஓரண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	75,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

பாஜக. கூட்டணிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யப் போவதாகக் கூறுகிறீர்கள். ஆனால் பா.ஜ.க.வில் சேரவில்லையே! ஏனிந்த முரண்பாடு?" என்று நடிகை ரேவதியைக் கேட்டோம்.

"இதில் முரண்பாடு ஏதுமில்லை. வாஜ்பாய் தலைமையிலான அரசு, அநியாயமாகக் கலைக்கப்பட்டு விட்டது. எனவே, மறுபடியும் வாஜ்பாய்தான் பிரதமர் ஆக வேண்டும் என்று நினைக்கிறேன். எனவேதான் அதற்காக, என்னாலானதைச் செய்ய விரும்பினேன். அதன்படி பா.ஜ.க. கூட்டணிக்காக பிரசாரம் செய்ய முடிவு செய்தேன்.

"அதே சமயம், நான் எந்த ஒரு கட்சியிலும் என்னை இணைத்துக் கொள்ள விரும்பவில்லை. எதைப் பற்றியும் எனக்கென்று சொந்தக் கருத்து உண்டு. அந்த கருத்துச் சுதந்தரம், கட்சியில் சேருவதால் பாதிக்கப்பட்டு விடும் என்று கருதுகிறேன். எனவேதான், போன தேர்தலில்கூட, சுயேச்சையாகப் போட்டியிட்டேன். இப்போதும், எந்தக் கட்சியிலும் சேரவில்லை.

"பா.ஜ.க. கூட்டணிக்காக, தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டுக்கு வெளியிலும் பிரசாரம் செய்யத் திட்டமிட்டிருக்கிறேன்!"



"கட்சியில் சேர்ந்தால் கருத்துச் சுதந்தரம் போய்விடும்!"

கேளுங்கள்!

மும்பையைச் சேர்ந்த ஒரு பொது நல அமைப்பு, ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளது. அதில் "உங்களிடம் யார் வோட்டுக் கேட்டு வந்தாலும், கீழ்க்கண்ட கேள்விகளைக் கேளுங்கள். அவர்களிடமிருந்து கிடைக்கும் பதில்களை வைத்து, அந்த வேட்பாளருக்கு, வோட்டுப் போடலாமா? வேண்டாமா? என்று முடிவு செய்யுங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கேள்விகளின் பட்டியல் இதோ:

1. உங்களுடைய கல்வித் தகுதி என்ன?
2. நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்?
3. உங்களுடைய வருமானம் எதிலிருந்து வருகிறது?
4. நீங்கள் ஒழுங்காக வருமான வரி செலுத்துகிறீர்களா?
5. கடந்த ஐந்தாண்டுகளில் எத்தனை தடவை நீங்கள் கட்சி மாறி இருக்கிறீர்கள்? ஒவ்வொரு தடவையும் என்ன காரணத்துக்காகக் கட்சி மாறினீர்கள்?
6. உங்களுடைய நற்குணங்களில் மூன்றைக் குறிப்பிடுங்கள்.
7. அரசியலில் தனிப்பட்ட முறையில் உங்கள் சாதனை என்று எவற்றைப் பெருமையுடன் குறிப்பிடுவீர்கள்?
8. உங்கள் மீது ஏதாவது கிரிமினல் குற்றச்சாட்டுகள் பதிவாகியுள்ளனவா? நீதிமன்றம் எதிலாவது வழக்கு நடந்து கொண்டிருக்கிறதா? விவரங்கள் தரவும்.
9. போலீஸ் துறையால்

கல்கி இண்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

வெளியிடப்பட்ட 'ரௌடி'கள் பட்டியலில் உங்கள் பெயர் இடம் பெற்றது உண்டா?

10. கிரிமினல் பின்னணி கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்பது குறித்து உங்கள் கருத்து என்ன?

11. தேர்தல் கமிஷன் விதிமுறைகளின் படிதான் தேர்தலில் செலவு செய்வீர்களா?

12. வெற்றி பெற்ற பின் உங்களது நடவடிக்கை, தொகுதி மக்களுக்கு அதிருப்தியளிக்கும்படி அமைந்தால், பதவியை ராஜினாமா செய்யத் தயாரா?

– இப்படியெல்லாம் கேட்க வேண்டும் தான்! ஆனால் கேட்டால், நம் ஊர் அரசியல்வாதிகள் 'பொறுமையாக பதில் சொல்வார்களா? என்றால், "பதில் சொல்லும்படி நிர்ப்பந்தியுங்கள்!" என்கிறார்கள்.

எலெக்ஷன் மீட்டர்

இந்த வார வி.ஐ.பி. திண்டிவனம் ராமமூர்த்தி:

1962 – திண்டிவனம் தொகுதி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி.

1967 – திண்டிவனம் தொகுதி . சட்டசபைத் தேர்தலில் வெற்றி.



1971 – திருநாவலூர் தொகுதி – சட்டமன்றத் தேர்தலில் தோல்வி.

1978 – தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் ஆனார்.

1984 – ராஜ்ய சபா எம்.பி.யானார்.

1989 – திண்டிவனம் தொகுதி – சட்டமன்றத் தேர்தலில் தோல்வி.

1991 – திண்டிவனம் தொகுதி லோக்சபா எம்.பி.

1996 – திண்டிவனம் தொகுதி லோக்சபாவுக்குப் போட்டியிட்டு தோல்வி

1999 – ?

தலைநகரத் தொகுதிகளின் ரிஷிமூலம்!

1952ம் வருட தேர்தலின்போது, சென்னை மாநகரம், ஒரே தொகுதியாகத் தான் இருந்தது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்டு வெற்றி பெற்றது. 57ம் ஆண்டில், வடசென்னை, தென்சென்னை என்று இரண்டு தொகுதிகள் உருவாக்கப்பட்டன. 1957 தேர்தலில் தென்சென்னையில் காங்கிரசும், வடசென்னையில் சுயேட்சையும் வெற்றி பெற்றனர். மூன்றாவதாக, 1977ல் மத்திய சென்னைத் தொகுதி உருவாக்கப்பட்டது. ஸ்தாபன காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட பா. ராமச்சந்திரன் வெற்றி பெற்றார்.

1967 தேர்தலில், தென் சென்னைத் தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்றம் சென்றவர் அறிஞர் அண்ணா. அவர் தமிழக முதலமைச்சர் பொறுப்பை ஏற்க வேண்டியிருந்ததால், தமது எம்.பி. பதவியை ராஜினாமா செய்தார். இடைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்டு ஜெயித்தவர் முரசொலி மாறன்.

வடசென்னையைப் பொறுத்தவரை அ.தி.மு.க நேரடியாக இதுவரை போட்டியிட்டதில்லை. அதன் கூட்டணிக் கட்சிகள் போட்டியிட்டு, ஜெயித்தது உண்டு. ஆனால், மத்திய, தென்சென்னை தொகுதிகளில் காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க என்று எல்லாருமே வெற்றிக் கனியைச் சுவைத்திருக்கிறார்கள்.

துணுக்கு:

சென்ற பாராளுமன்றத் தேர்தலில் பதிவான மொத்த வாக்குகள்: 37.2 கோடி.

இதில் செல்லாத வாக்குக்கள் : 68. 69 லட்சம்.

வேகமாகி வரும் தேர்தல்!

முதல் பொதுத் தேர்தலில் 1951 அக்டோபர் 5ம் தேதி முதல் கட்ட வாக்குப் பதிவு நடைபெற்றது. இறுதிக்கட்ட வாக்குப் பதிவு நான்கு மாதங்கள் பதினாறு நாட்கள் கழித்து, 1952, பிப்ரவரி 21ம் தேதி நடைபெற்றது.

1957ல் நடந்த பொதுத் தேர்தலில், முதல் கட்ட வாக்குப் பதிவு பிப்ரவரி இருபத்திநாலாம் தேதியும், இறுதிக்கட்ட வாக்குப் பதிவு ஜூன் ஒன்பதாம் தேதியும் நடைபெற்றது.

1962 பொதுத்தேர்தலின்போது, பிப்ரவரி பதினாறாம் தேதி ஆரம்பித்தது, முதல் கட்ட வாக்குப்பதிவு. இறுதிக் கட்டவாக்குப் பதிவு நடந்தது ஜூன் ஆறு.

இவற்றுடன் ஒப்பிடும்போது, இந்தத் தேர்தல் எவ்வளவோ மேல்! ●

வெயிலிலும் காற்று வாங்கலாம்!

'எரிசக்தி 99' என்ற பெயரில் ஒரு கண் காட்சி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. ரங்கராட்டினம், டில்லி அப்பளம் போன்ற கண் காட்சிகளின் ஸ்பெஷல் மூத்தி ரைகள் இல்லை என்பதாலோ என்னவோ, ரொம்பப் பேர் அங்கே தலைகாட்டவில்லை.

சூரிய ஒளி, காற்று போன்ற இயற்கைச் சக்திகளின் மூலம் மின் உற்பத்தி செய்து, அதில் இயங்கும் உபகரணங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

பிரதானமாக இடம் பெற்றிருந்த வீட்டு சாதனப் பொருட்கள் சூரிய ஒளியில் இயங் கும் குக்கர், விளக்கு ஆகிய இரண்டும்தான். சூரிய அடுப்பு, இரண்டு அடிக்கு இரண்டு அடி, கறுப்பு கலர் சூட்கேஸ் போல உள்ளது. சூரிய ஒளியின் கதிர்களை கிரகித்துக் கொள் ளவே கறுப்பு நிறம். உள்ளே சற்றே பெரிய நாலு டிபன் பாக்ஸ். அதற்கும் கறுப்புப் பூச்சு. அதில் அரிசி, பருப்பு, காய்கறி என்று எதை வேண்டுமானாலும் போட்டு, மூடி, சூரிய வெளிச்சத்தில், குக்கரின் மேல் மூடியைத் திறந்து, அதன் உட்புறம் பொறுத்தப்பட் டுள்ள கண்ணாடியில் வெளிச்சம் படுமாறு வைத்துவிட வேண்டும். அதன் பின் ஒன் றரை மணி நேரத்துக்கு ஒரு தூக்கம் போட்டு எழுந்து வந்தால் சுடச் சுட சாப்பாடு ரெடி.

நகர்ப் புறங்களில் மட்டுமில்லை கிராமப் புறங்களிலும் கூட இந்த சூரிய அடுப்பு இன்னமும் பிரபலமாகவில்லை என்று தெரிய வந்தது. அரசு மானியத்துடன் இரண்டா யிரத்துச் சொச்சம் விலையா கிறது. இந்த குக்கருடன் மின் இணைப்பு சேர்த்து, மின்சாரக் குக்கராய் பயன்படுத்தும் ஒரு மாடலும் இருக்கிறது. விலை? ஆயிரம் ரூபாய் கூடுதல்.

மொட்டை மாடியில் சோலார் பேனல்கள் (கண்ணாடி தகடு) பொருத்திவிட்டு, ஒயர் மூலம் வீட்டி னுள்ளே இருக்கும் விளக்குடன் இணைத்து விட லாம். பகலெல்லாம் சூரிய ஒளியில், விளக்கில் உள்ள செல், சார்ஜ் ஆகிவிடும். தேவையானபோது சுவிட்ச் போட்டால் பளிச்சென்று லைட் எரிகிறது. இதற்கு ஓரளவு டிமாண்டு உள்ளது. விலை இரண்டாயிரத்துச் சொச்சம்.

இன்னொரு ஸ்டாலில், மினி தார் டிரம் போல பக்கத்தில் சோலார் கண்ணாடித் தகடு. இதன் மூலம் வெந்நீர் போடலாம். ஹாஸ்டல்கள் ஆஸ்பத்திரிகளில் இதை நிர்மாணிக்கிறார் களாம். முதலீடு கொஞ்சம் அதிகம்தான் என்றாலும் கூட அதன் பின் மாதாமாதம் கரண்ட் பில் கிடையாதல்லவா! இதில் கணிசமான லாபம் கிடைக்குமாம்!

தலைக்குப் போட்டுக் கொள்ளும் கேப். அதன் உச்சியில் இரண்டு அங்குல சதுரத் துக்கு சோலார் பேனல். 'கேப்'பின் நெற்றிப் பட்டையில் சின்னதாக ஒரு ஃபேன். கொளுத்தும் வெயிலில் நடக்கும்போது ஃபேன் இயங்கி, முகத்துக்கு இதமாய்க் காற்று வீசுகிறது. விலை ரூ. 450/-

இனி உச்சி வெயிலில் போகிறபோது, வெயிலை வீணாக்காமல் காற்று வாங்கிய படியே போகலாம்!

— கௌதம்ராம்

படம் : ஸ்ரீஹரி



டீவியால் பண்பாட்டுச் சீர்குலைவா?

ஆபாசம் என்பது சினிமாவில் மட்டும்தான் என்கிற நிலை மாறிவிட்டது. நம்மைக் கேட்காமலேயே நமது வீடுகளுக்குள் புகுந்துவிட்ட சின்னத்திரைகளிலும் அது புகுந்துவிட்டது. எம்.டி.வி., வி சானல் போன்ற சானல்களில் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்கும் பெண்களின் உடை கவர்ச்சிகளையும் மீறிய ஆபாசம். அது அயல் கலாசாரம் என்று வாதாடலாம். ஆனால் அதைப் பார்த்துக் காப்பியடித்து நமது தமிழ் சானல் பெண்களும் அப்படி ஆடை அலங்காரம் செய்து கொள்வது சரியா? சின்னத்திரை நிகழ்ச்சித் தொகுப்பாளர்களிடமே இக் கேள்வியைக் கேட்டோம்!

திருமதி .ஜெயந்தி சுந்தர் (தூர்தர்ஷன்):

பொதுவா நிகழ்ச்சித் தொகுப்பு, வர்ணனை எல்லாம் ஆண் கலைஞர்களும் பண்றாங்க, பெண் கலைஞர்களும் பண்றாங்க. பெண்கள் பண்ணினாத்தான் நல்லாயிருக்கும், ஆண்கள் பண்ணினா நல்லாயிருக்காதுன்றதெல்லாம் இல்லை. புரோக்ராம்தான் முக்கியமே தவிர, ஆர்ட்டிஸ்ட் முக்கியம் இல்லை.

உதாரணத்துக்கு சன் டி.வியில் 'சன்ரைஸ் நீங்கள் கேட்ட பாடல்' நிகழ்ச்சியைச் சொல்லலாம். அதை ஒரு ஆண்தான் பண்றாரு. நிகழ்ச்சி ரொம்ப நல்லாவே இருக்கு.



• ஸ்வர்ணமால்யா



• பிரியதர்ஷினி



• ஜெயந்தி சுந்தர்

அதனாலதான் நிறையப் பேர் ரசிச்சு பாக்கறாங்க.

டி.வி. மீடியாக்குன்னு சில ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸ்லாம் இருக்கு. அதைக் கடைப்பிடிக்காததால வர்ற பிரச்னைதான் இதெல்லாம். தூர்தர்ஷன்ல இப்படி ஆபாசமான எதையும்

பார்க்க முடியாது.

சினிமால ஆபாசமா, கவர்ச்சியா உடை உடுத்தறாங்கன்னா அது வேற விஷயம். சினிமாவை இருட்டுல பாக்கறோம். டீ.வி. அப்படி இல்லை. வெளிச்சத்துல, வீட்டுல குழந்தைங்களோட உட்கார்ந்து பாக்கறோம். மாடர்னா இருக்கணும்னா, ஒரு சல்வார்கமீஸோ, டீ-சர்ட்டோ கூட போதும். அதி நவீனம்கற பேர்ல ஆடைக் குறைப்பு அவசியமே இல்லை.

பிரியதர்ஷினி (சன் டீ.வி.):

நிகழ்ச்சித் தொகுப்பாளர்களுக்கு உடை, பாவனை, பேச்சு அலங்காரமா இருக்கணுமே தவிர, ஆபாசமா இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நிறையப் பேர் அவங்களா விரும்பித்தான் கவர்ச்சியா டிரஸ் பண்றாங்க. மக்கள் விரும்பறாங்க, அதனாலதான் இப்படி டிரஸ் பண்றோம்னு மக்களை குறை சொல்ல முடியாது. பொதுவா, நிகழ்ச்சிக்கு விஷயம் தான் முக்கியம். 'விசுவின் அரட்டை அரங்கம்', 'சப்தஸ்வரங்கள்', 'பெப்ஸி உங்கள் சாய்ஸ்' நிகழ்ச்சிகள்ல என்ன ஆபாசம் இருக்கு? ஆடையைக் குறைச்சு எப்படி மக்களை ஈர்க்கலாம்னு யோசிக்காம, வேற எப்படி நிகழ்ச்சியை பெட்டரா பண்ணினா ஆரோக்யமா இருக்கும்னு யோசிச்சா தேவலை.



• மீரா

ஷர்மிளா (நிலா டீ.வி.):

ஆபாசமா உடை உடுத்தறது சரியில்லைதான். 'எம் டி.வி', 'வி. சானல்லாம் இன்டர் நேஷனல் லெவல்ல ரீச் ஆகற சானல்கள். அதுவுமில்லாம அவங்க கலாசாரம் அப்படி. நம்ம கலாசாரம் புராதனமானது. நம்ம கல்ச்சருக்குத் தகுந்த மாதிரி டிரஸ் பண்ணணும். நம்ம தமிழை சுத்தமாப் பேசணும். மாடர்னா டிரஸ் பண்றது தப்பில்லை. அது ஆபாசமா இருக்கக் கூடாது. நம்ம கல்ச்சருக்கு அது தேவையில்லை.

கீதா: (ராஜ் டீ.வி.):

ஃபேமிலில இருக்கறவங்க ஒத்துக்கிட்டா அந்த மாதிரி டிரஸ் பண்றது தப்பில்லை. எங்க ஃபேமிலில



• ஷர்மிளா



அப்படில்லாம் டிரஸ் பண்ண ஒத்துக்க மாட்டாங்க. அதனால அப்படி டிரஸ் பண்ண முடியாது. அப்படி கவர்ச்சியா டிரஸ் பண்றவங்களோட குடும்பச் சூழல், அவங்க வளர்ந்த விதம் அதுக்கு அனுமதிக்குது. இந்த ஜெனரேஷனுக்கு ஜீன்ஸ், சார்ட்ஸ்தான் பிடிக்குது. எப்ப பார்த்தாலும் ஷாரீஸ்லயும், சல்வார்லயும் வந்தா பார்க்கறவங்களுக்கு போரடிச்சுடும். ஷார்ட்ஸ், ஜீன்ஸ், டீ-ஷர்ட் இன்னும் ஆபாசம்னு நிறையப் பேர் நினைக்கிற உடைகள் எல்லாம் இப்ப ரொம்ப கேஷுவலா ஆய்டுச்சுங்கறதுதான் உண்மை!

மீரா கிருஷ்ணன் (சன் டீ.வி.):


டீ.விக்கு ஆபாசம் தேவையில்லை. டீ.வில விஷத்தைப் புகுத்தற சமாசாரம் இது. நம்ம கலாசாரத்துக்குக் கொஞ்சமும் ஒத்து வராது இந்த ஆபாசம். நம்ம இளைஞர்களோட மனசையும் கெடுக்குது. ரொம்ப அவுட்ஸ்டேன்டிங்கா பண்றோம்னு நினைச்சுக்கிட்டு, ஆபாசமா வர்றதுதான் சகிக்க முடியலை. சில பேர் ஆபாசமா டிரஸ் பண்ணினாக்கூட மோசமா தெரியாது. அதுக்கு ஐஸ்வர்யாராயை உதாரணமா சொல்லலாம். ஆனா, நிறையப்பேர் போடற டிரஸ்ஸ விட, அவங்க பேசற தமிழ்தான் ரொம்ப ரொம்ப மோசமா இருக்கு!

ஸ்வர்ணமால்யா (சன் டீ.வி):

அது அவங்கவங்களோட பெர்சனல் இன்டரஸ்ட், விருப்பு வெறுப்பைப் பொறுத்த விஷயம். தப்பா பாக்கறவங்களுக்கு தப்பாத்தான் தோணும். எல்லாமே புதுமையா இருக்கணும்கறதுக்காக ஓரளவுக்கு மேலயும் போய்டக் கூடாது. எனக்குன்னு ஒரு செல்ஃப் பவுண்டரி இருக்கு. அதைத் தாண்டிப் போக மாட்டேன். அந்த மாதிரி எல்லாருக்குமே செல்ஃப் பவுண்டரி ஒண்ணு இருக்கணும்.

இப்படில்லாம் டிரஸ் பண்ணி டீ.வில வரலைன்னாக் கூட கலாசாரம் பாதிச்சுட்டுத்தான் இருக்கு. நாட்டில், வெளியில் என்னென்ன நடக்குதோ அதுதான் டீ.வில வருது. பாம்பேல மாடர்னா, கவர்ச்சியா டிரஸ் போடுறது சகஜம். அங்கே யாரும் தப்பாப் பார்க்க மாட்டாங்க. தமிழ்நாட்ல, பொள்ளாச்சி, திருச்சி மாதிரி ரிமோட் ஏரியால மாடர்ன் டிரஸ் போட்டுட்டுப் போறது தப்பாத்தான் தெரியும்.

தொகுப்பு: **கே. பாலசுப்ரமணியன்**



''உங்க அடுத்த படத்தோட கதை என்ன?''


''சொன்னா சஸ்பென்ஸ் போயிடும்! படத்தைப் பார்த்துத் தெரிஞ்சுக்குங்க.''

''அந்தக் கொடுமையை அனுபவிக்காம இருக்கத்தானே கேட்கிறேன்!''

— பா. ஜெயக்குமார்

இலவசம்!

பக்தி புத்தகங்கள்



இலவச பக்திப் புத்தகங்கள் எங்களிடம் ஒரே தடவை-யில் ரூ.500-க்கு மேற்பட்ட ஸ்வீட்,காரம் வாங்குபவர்களுக்கு வாங்கும் தொகையை அனுசரித்து பக்திப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படும்.

கல்யாண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன் குழல், தேன் குழல், அதிரசம், திரட்டுப்பால், அப்பம், பருப்புத் தேங்காய் வக்கைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 20.
போன்: 4915662, 4914213

வாசகர்களுக்கு



• நித்யா

"வருஷா வருஷம் நாம எக்ஸாம் ரிசல்ட் பார்க்கற மாதிரி, இப்போ எலெக்ஷன் ரிசல்டையும் பார்க்க வேண்டியதா ஆயிடுச்சு பார்த்தியா?"

"ஆமா. இந்திராவாச்சு, ராஜீவாச்சு. இப்போ சோனியாவா? பரம்பரை ஆட்சிக்கு ஒரு முடிவு கிடையாது போல இருக்கு. நம்ம ஜனங்க எப்படித்தான் இதையெல்லாம் சுலபமா ஏத்துக்கிறாங்களோ தெரியலை!"

"எங்க ஏத்துக்கிட்டாங்க? இன்னும் எலெக்ஷன் ரிசல்ட் ஏதும் வந்திடலையே! அதுக்குள்ள ஜனங்களை எப்படித் தப்புச் சொல்லிட முடியும்?"

"ஆனா, அமெரிக்காவுல பாரு... அடுத்த



• வனிதா



• பிரியா



• கிருத்திகா

ாணவிகளின் குவிஸ்!

முறை கிளின்டன் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட முடியாதாமே? அங்கெல்லாம் ரண்டு தடவைக்கு மேல போட்டிபோட முடியாதாம்!" அதனால மோனிகா விஷயத்துக்கப்புறம் கிளின்டனோட செல்வாக்கு மக்கள்கிட்ட எப்படியிருக்குன்னு தெரிஞ்சுக்கற சான்ஸே இல்லாம போச்சு!"

"ஆமாம். ஆனா நெல்சன் மண்டேலா பார்த்தியா... உயர்ந்த லட்சியம். அதுக்காகவே சிறைவாசம். பதவி வந்த பிறகும் அதுலயே ஒட்டிக்கிட்டிருக்க நினைக்காத குணம்... அப்படியொரு தலைவர் நம்ம நாட்டுலேயும் இருக்க மாட்டாரான்னு ஏக்கமா இருக்கு!"

"இந்தியாவுல அதெல்லாம் பாசிபிளா என்ன? முதல்ல கிரிமினல்கள் எலெக்ஷன்ல நிக்காம இருக்கட்டும்.... அதுக்கொரு ஸ்ட்ரிக்டான சட்டம் வரட்டும். அதுவே போதும்ப்பா!"

– இப்படி கல்லூரி விட்டு வீட்டுக்குச் செல்லும்போது, அரசியலை அலசிக் கொண்டு போன எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி மாணவிகளான வனிதா, பிரியா, நித்யா, கிருத்திகா ஆகிய நால்வரிடமும், "இந்த வார வாசகர்களுக்கான எலெக்ஷன் குவிஸை நீங்களே தந்து விடுங்களேன்!" என்றோம்.

"சரி!" என்று அசத்தி விட்டார்கள் அவர்கள்!

இதே போல் வாராவாரம் மாணவ மாணவியர்தாம் குவிஸ் கேள்விகளைக் கேட்கப் போகிறார்கள்.

எல்லா கேள்விகளுக்கும் சரியான விடைகளை டிக் செய்து அனுப்பும் வாசகர் ஒருவருக்கு ரூ. 200 பரிசு! பலர் சரியான பதில் எழுதியிருந்தால் குலுக்கல் முறைதான்!

அருகிலுள்ள ஒரிஜினல் கூப்பனில்தான் டிக் செய்து அனுப்ப வேண்டும். ஜெராக்ஸ் பிரதிகள் செல்லா. கடைசி தேதி: **16.8.99**

ஆசிரியர் தீர்ப்பே இறுதி!

தொகுப்பு: **ஜி.எஸ்.எஸ்**; படங்கள்: **ஸ்ரீஹரி**

குவிஸ் கூப்பன் – 1

1. எலக்ட்ரானிக் கருவி மூலம் வாக்குப்பதிவு முதலில் நடைபெற்ற தொகுதி எந்த மாநிலத்தில் உள்ளது?

☐ கேரளா ☐ ஒரிஸா ☐ பஞ்சாப்

2. மேயர் பதவிக்குப் போட்டியிட்ட நடிகர் யார்?

☐ ராமராஜன் ☐ சரத்குமார்
☐ எஸ்.எஸ். சந்திரன்

3. எம்.ஜி.ஆருக்குப் பிறகு அ.தி.மு.க. அணி பிளவுபட்டபோது ஜானகி அணியின் தேர்தல் சின்னம் எதுவாக இருந்தது?

☐ புறா ☐ சேவல் ☐ இரட்டை இலை.

4. சுதந்தர இந்தியாவின் முதல் பொதுத் தேர்தல் எந்த ஆண்டில் நடைபெற்றது?

☐ 1948 ☐ 1950 ☐ 1952

5. ஒரே ஒரு நாள் மட்டும் முதல் மந்திரியாக இருந்தவர் யார்?

☐ வி.வி.கிரி (ஆந்திர பிரதேசம்)
☐ ஜகதாம்பிகா பால் (உத்திர பிரதேசம்)
☐ ஹர்கிஷன் பிரேம்சிங் (ஹரியானா)

6. கர்நாடகத்தில் உள்ள சிக்மகளூர் என்ற தொகுதியில் போட்டியிட்டு வென்ற முன்னாள் பிரதமர் யார்?

☐ நரசிம்மராவ் ☐ குல்சாரிலால் நந்தா
☐ இந்திரா காந்தி

7. எந்த எம்.பி.யின் வாழ்க்கை ஷேகர் கபூரால் திரைப்படமாக்கப்பட்டது?

☐ ராப்ரி தேவி ☐ எலிசபெத்
☐ பூலான் தேவி

8. தேர்தல் கமிஷனர்களாக நியமிக்கப் படுபவர்கள் பொதுவாக எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்?

☐ ஐ.ஏ.எஸ். ☐ ஐ.பி.எஸ். ☐ ஐ.எப்.எஸ்.

பெயர்: ....

முகவரி: ....

....

....

KALKI SHOPPING PAGE &

என்றும் இளமை



இன்றைய உலகில் எல்லாருமே இளமையாகவும் அழகாகவும் தோன்ற வேண்டும் என்று நினைப்பது இயற்கை. ஆனால் நிறைய பேருக்குத் தோலில் சுருக்கங்கள், நிறமாற்றம், கண்களுக்குக் கீழே கருவளையம் என ஏற்பட்டு அழகும் இளமையும் குலைகின்றன.

இந்தக் குறைகளை நீக்கி, அவர்களுடைய மேனியை அழகு படுத்துவதற்காக அல்மா ஹெல்த் கேர் க்ரூப் நிறுவனம் "மெலட்டோன் ஸ்கின் லோஷன்" என்ற தயாரிப்பை தமிழக மார்க்கெட்டில் அறிமுகப் படுத்தியுள்ளது. பல மருத்துவர்கள், அழகுக் கலை நிபுணர்களால் பரிசோதனை செய்து பரிந்துரைக்கப்பட்ட 'மெலட்டோனின்' என்னும் பொருள் இதில் உள்ளது.

இது தோலில் ஏற்படுகின்ற சுருக்கங்கள், நிறமாற்றங்கள், கண்களின் கீழ் உள்ள கருவளையங்கள் ஆகிய வற்றை நீக்குகிறது. அது மட்டுமல்லாமல் வெயிலில் அலைவதால் கறுப்பாகிவிட்ட சருமத்தின் நிறத்தை மாற்றி மறுபடியும் சிவப்பாகப் பொலிவுறச் செய்கிறது. வயதாவதின் அறிகுறிகள் சிறிதும் இல்லாமல் என்றும் இளமையான தோற்றத்தைத் தருகிறது.

'மெலட்டோன் ஸ்கின் லோஷன்' 100 மி.லி. ரூ. 495/-ம், 200 மி.லி. ரூ. 890/- மாகக் கிடைக்கின்றது. தமிழகத்தில் உள்ள அனைத்து இங்கிலீஷ் மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

ALMA HEALTH CARE GROUP

T-55/A, Elliots Beach Road,
Besant Nagar, Chennai - 600 090.
Phone : 4919298/4461977

LOYOLA INSTITUTE OF VOCATIONAL EDUCATION & ACVET

மகளிருக்காகவே **Cosmetology/Beautician** போன்ற பயிற்சிகளை மேற்கண்ட நிறுவனங்கள் இணைந்து நடத்தி வருகின்றன.

இதற்கான கல்வித் தகுதி +2. பயிற்சியின் காலம் ஒரு வருடம். கட்டணம் **Rs. 8500/-** பயிற்சிக்குப் பின் வேலை வாய்ப்பு, பொருட்கள் வாங்குதல், எழிலகம் தொடங்குதல், திட்ட அறிக்கை தயாரிப்பு மற்றும் ஆலோசனைகளையும் வழங்குகிறார்கள். இதன் மூலம் இந்திய அரசின் பெண் தொழில் முனைவோருக்கான கடன் வசதிகளைப் பெற நல்ல வாய்ப்பு உள்ளது.

மேலும் விவரங்களுக்கு

ACVET
50. Habibullah Road, T. Nagar,
Chennai - 17

ஞாபக மறதியா?

இதோ... உங்கள் பிரச்சினைக்கு தீர்வு!

கிரௌன்

வல்லாரை (பிரம்மி)



- சமீபத்திய விஞ்ஞான ஆராய்ச்சிகளில் பிரம்மி–வல்லாரையில் உள்ள நினைவாற்றலை அதிகப்படுத்தும் செயல்திறன் மிக்க அணுக்கள் இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.
- பண்டைய சித்தர் முதல் நவீன விஞ்ஞானிகள் வரையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- குறைந்த செலவில் நிறைந்த நாம்.


உங்களது மூளையின் அபார செயல்திறனுக்கு

கிரௌன் ஹெர்பல் ப்ராடக்டஸ்

78, அஷ்டபுஜம் ரோடு, சூளை, சென்னை – 600 112.
போன்: 8280155, 8240166, 5321515

NEW PRODUCTS

குழந்தைகளின் பற்கள் முத்துப் போல் பிரகாசிக்க...



பல் பாதுகாப்புக்காகப் பலவகையான பொருட்களைத் தயாரித்து தனக்கென்று தனி இடத்தைப் பெற்றுள்ளது கோல்கேட்-பாமாலிவ் (இந்தியா) லிமிடெட் நிறுவனம். தற்போது இது குழந்தைகளுக்காக 'மை ஃபர்ஸ்ட் கோல்கேட்' என்னும் புதிய டூத் பிரஷ்ஷை அறிமுகப்படுத்தியுள்ளது. குழந்தைகளின் பற்களைப் பாதுகாப்பதில் கவனமாகவும் அதே நேரத்தில் அவர்கள் விரும்பக் கூடியதாகவும் இருக்கிறது. இது பற்களில் ஏற்படுகின்ற குழிகளைத் தடுத்து காலம் முழுவதும் வலுவான பற்களைத் தருகிறது.

இதனுடைய வடிவம், வண்ணங்கள், வித்தையான தோற்றங்கள் போன்றவை பல் நிபுணர்களால் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. பற்களைக் காலையிலும் இரவிலும் தேய்க்க வேண்டும் என்பதால் குழந்தைகளுக்கு கவர்ச்சியூட்டுகிற விதமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனுடைய சிறப்பம்சம் சின்னக் கைகளுக்கு ஏற்றவாறு அகன்ற அளவுக்குக் கூடுதல் மற்றும் அழகான கைப் பிடியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இது மிருதுவாகச் செயல்பட்டு பற்களின் பளபளப்பான மேல் பாகத்தைப் பாதுகாக்கிறது. எந்த அளவு டூத் பேஸ்ட் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு பிரஷின் நடுவே அழகிய வண்ணங்களால் புள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இது பல வகையான கண்ணைக் கவரும் வண்ணங்களிலும், வாத்து, டைனாசர், முயல் போன்ற வடிவங்களிலும் கிடைக்கின்றது. இதனுடைய கைப்பிடி டூத் பிரஷ் நேராக நிற்பதற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. பற்கள் பாதுகாப்புக்கு உண்டான வழிமுறைகள் அடங்கிய அழகிய வண்ண பாக்கிங்கில் வருகிறது. இதனுடைய விலை ரூ. 15/- மட்டுமே. பல் ஈறுகள் சேதமடைவதிலிருந்து குழந்தைகளைப் பாதுகாப்பதற்காகவே இந்த பிரஷ்ஷை 'கோல்கேட் - பாமாலிவ்' (இந்தியா) லிமிடெட் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.



• பந்தம் அகன்று நம் திருநாடு...

தேசியமென்பது மக்களையும் அவர்களது வாழ்க்கையையும் கலைகளையும் உள்ளடக்கியது. தேசநலன் என்பது கலைகளின் வளத்தை, பாதுகாப்பை, வளர்ச்சியை உள்ளடக்கியது என்று திடமாக நம்பியவர் கல்கி.


அவர் பெரிதும் மதித்துப் போற்றிய கலைஞர்களுள் ஒருவரான ருக்மிணி தேவி ஸ்தாபித்த கலாக்ஷேத்ரா அரங்கில் அவருடைய இந்தக் கலைக் கோட்பாடு முழுமையாக வெளிப்படும்வண்ணம் ஒரு நிகழ்ச்சி அமைத்து, அதில் கலைத்துறை வித்தகர்கள் ஒன்றுகூடி பங்கேற்றதென்பது ஒரு வரலாற்று நிகழ்வு என்று கூடச் சொல்லலாம்.

கல்கி குடும்பத்தார் முயற்சியில் கல்கி நூற்றாண்டு விழா குழுவும் கல்கி நினைவு அறக்கட்டளையும் ஏற்பாடு செய்த நிகழ்ச்சிதான்; ஆனால் அதன் வெற்றிக்குக் காரணம், பங்கேற்றவர்கள் மட்டுமின்றி பார்வையாளர்களும் தங்களை அந்தக் குடும்பத்தில் ஒருவராகப் பொருத்திக் கொண்டிருப்பதுதான்.

இந்த அற்புத நிகழ்வுக்குக் உந்து சக்தி, கல்கியின் பேனாவில் சதா ஊறித் ததும்பி, அவர் வாழ்விலும் விகசித்த மனிதநேயம் அன்றி வேறென்ன!



• லீலைகள் செய்வானே...



• லால்குடி

சென்னைக்குக் கிழக்கே இத்தனாவது மைலில் என்று அடையாளம் காட்ட வேண்டிய தூரம்தான் கலாக்ஷேத்ரா. இருந்தாலும் ஜூலை 24-ஆம் தேதி மாலை மக்கள் பஸ்ஸிலும்



• சௌம்யா

கல்கி குடும்பத்துச் கலை



• மாலைப் பொழுதினிலே...

காரிலும் தேரிலுமாக வந்து குழுமியிருந்தார்கள்.

'மக்கள்' என்று சொல்லி விட்டால் சரியாகப் போய்விடுமா? அது ஒரு சங்கமம். சங்கமம் என்ற சொல்லுக்கு நிஜமான அர்த்தம் தரத்தக்க சங்கமம்.

கர்நாடக இசை வித்பன்னர்கள் இருந்தார்கள். ஓடுகிற ரக சினிமாக்காரர்களும் இருந்தார்கள். ஓடாத ரக சினிமாக்காரர்களும் ஆங்காங்கே தென்பட, இங்கே ஒரு பக்கமாக எழுத்தாள ஜாம்பவான்கள். அப்புறம் கவிஞர்கள். அது யார், அனிதா ரத்னமா? அவர் பின்னால் ஒரு நடனப் படையே அல்லவா குழுமியிருக்கிறது? இங்கே பார்த்தால் மாலன். கொஞ்சம் தள்ளி, உட்கார இடம் கிடைக்காமல் தரையில் அமர்ந்து கூர்ந்து ரசிக்கிற அந்த முகம்...? கார்கிலுக்குப் போய் வந்த 'ஞாநி' அல்லவா? ஸ்குரு டிரைவர் போல கூட்டத்தில் திருகிக் கொண்டு நுழைந்து அதோ முன்னே போகிறவர் அசோகமித்திரனல்லவா!

எம்.எஸ். இருந்தார். செம்மங்குடி வீற்றிருந்தார். கணவர் ஈச்வரனுடன் டி.கே. பட்டம்மாள் சிரித்தபடியிருந்தார். திருமதி கல்கி தள்ளாத வயதைப் பொருட்படுத்தாமல் வந்தமர்ந்திருந்தார்.

எத்தனை கலைஞர்கள்! எத்தனை எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள்! மாணவர்கள்! எல்லாருக்கும் மேல் கல்கி ரசிகர்கள்!

கலாக்ஷேத்ராவின் அந்தப் புராதன பாணி அரங்கம் (என்ன மிரட்டும் அழகு!) அன்று ஒட்டுமொத்தத் தமிழ்க்

• நிகழ்ச்சிக்கு முன் பூஜை....





• அருண் பிரகாஷ்

விழா!



• கிருஷ்ணவேணி லக்ஷ்மணன் நட்டுவாங்கம்; சாய்சங்கர் தலைமையில் கலாக்ஷேத்ரா இசைக்குழு

கலைஞர்களின் சுவாசத்தால் நிரம்பியிருந்தது.

அத்தனை பேரும் அன்று அமரர் கல்கியின் வரிகளை சுவாசித்துக் கொண்டிருந்தார்கள்...

கல்கியின் பேத்தி கௌரி ராம்நாராயணுக்கு ஒரு 'விபரீத' ஆசை வந்திருக்கிறது. அமரர் கல்கியின் இசைப் பாடல் வரிகளையே செங்கல்லாக வைத்து அவருக்கொரு கலைக் கோபுரம் கட்டுகிற ஆசை. அதுவே 'காற்றினிலே வரும் கீதம்' என்ற தலைப்பில் அவர் எழுதி இயக்க, அரங்கேறவிருக்கிறது.

கோபுரம் கட்டுவதென்றால் சாதாரண சிற்பிகள் போதுமா? இளமை வேண்டும். திறமை வேண்டும். வெறி வேண்டும். கரைந்து போகிற கலையுள்ளமும் வேண்டுமல்லவா?

நம்பத்தான் முடியவில்லை. விஜய் சிவா, சஞ்சய் சுப்பிரமணியன், எஸ்.பி. ராம், டி.எம். கிருஷ்ணா, பாம்பே ஜெயஸ்ரீ, அனுராதா கிருஷ்ணமூர்த்தி, சௌம்யா, சங்கீதா சிவகுமார் என எட்டு இளம் நட்சத்திரங்கள் அங்கே இணைந்திருந்தார்கள். வயலினுக்கு ஸ்ரீராம்குமார், மிருதங்கத்திற்கு அருண்பிரகாஷ்.

அட! வெறும் பாட்டுக் கச்சேரி இல்லை... ஜல்ஜல் என்று தேவலோகத்திலிருந்து இறங்கி வந்தது போல மேடையில் உதித்து நடனமாட ஆரம்பித்த கலாக்ஷேத்ரா மாணவ மாணவிகள்.

சரிதான் பாட்டு + பரதம்...

ம்ஹூம்! அது யார் மேடையில் அமரர் கல்கியா? மறுபடி உயிருடன்? பக்கத்தில்... அட, திருமதி கல்கியின் பால்ய வெர்ஷனாக, ஐயோ யார் அது?!

கல்கியின் மனைவி பாத்திரம் தேய்க்கிறார். பக்கத்தில் உட்கார்ந்து இவர் பாரதி பாடல்களைப் பாடுகிறார்... நாடகமா?

நாட்டியமும் இசையும் கலந்த நாடகம்தான் என்று முடிவு கட்டுவதற்குள் கல்கியாக நடித்த திருப்பூர் கிருஷ்ணன் (தியாகத்தில் பெரிய தியாகம் எது என்று கிருஷ்ணனைக் கேளுங்கள். ஒரே காட்சியில் கல்கியாக நடிப்பதற்காகத் தாம் பிறந்ததிலிருந்து(!) போற்றிப் பாதுகாத்து வரும் அந்தக் கருகரு தாடியையே தியாகம் பண்ணியிருந்தார்! கல்யாணத்துக்குக் கூட எடுக்கலை சார்!)

கலைக்கு எத்தனையோ வடிவங்கள். 'காற்றினிலே வரும் கீதம்' – எந்தப் பிடிக்குள்ளும் அடங்காத ஒரு நூதனம். நிகழ்ச்சி நெடுக நூதனம்தான். இரட்டை இறை வணக்கமாக முதலில் கலாக்ஷேத்ரா பாணியில் ஒரு சிறு பூஜை, தீபாராதனை. தொடர்ந்து பத்து வயதுச் சிறுமி கௌரி நடராஜன் கல்கிக்குப் பிடித்த பாரதி பாடலை (ஓம் சக்தி) பாட, வரவேற்பும் வந்தனமும் ஒருசேரக் கூறும் நூதன உரை!


தலைமையுரை ஆற்ற வந்த லால்குடி ஜெயராமனோ நிகழ்ச்சிக்கு முன்னரே நெகிழ்ச்சியிலிருக்கிறார் – நிறைந்து தளும்பும் அரங்கில் அவர் கல்கியின் சிறப்புகளை வரிசைப்படுத்திவிட்டு அவருடைய 'மாலைப் பொழுதினிலே' பாடலையும்



• சஞ்சய்



• அனுராதா கிருஷ்ணமூர்த்தி



• விஜய் சிவா

வரிவரியாக அனுபவித்துச் சொல்ல... கல்கியின் பாடல்களில் மிளிரும் நேர்மையான, ஒப்பனைகளற்ற கருத்தழகு அவருடைய ஆத்ம சுத்திக்குச் சான்று என்று விவரிக்கும் போது கண்கலங்குகிறார்!

அமரர் கல்கியின் பாடல்கள் மூலமாக அவரது கவிதை உள்ளத்தைப் புரிந்துகொள்ளும் முயற்சிதானே 'காற்றினிலே வரும் கீதம்' நிகழ்ச்சி... அந்த முயற்சிக்கு அழகாக சுருதி சேர்த்துக் கொடுத்து விடுகிறது வாலகுடியின் உரை.

அதன் பின்னர்தான் திருமதி கல்கி இருட்டில் பாத்திரம் தேய்க்க கணவரைத் துணைக்கு அழைக்கும் காட்சி! திருப்பூர் கிருஷ்ணனும் தொலைக்காட்சி அறிவிப்பாளர் அனுராதா கண்ணனும் நடிகர்களாகத் தோன்றி கல்கியின் பாரதி பற்றையும் இசைப் பற்றையும் அளவாக, அழகாகக் கோடி காட்டி விட்டு, சடாரென்று நிகழ்ச்சியின் இணைப்புரையாளர்களாக உருமாறுகிறார்கள்.

பாரதி பற்றி கல்கி புனைந்த 'தெய்வத் தமிழ் நாட்டினிலே' பாடல் எம்.எஸ். 'கங்கையெனப் பொங்கிவரும்'குரலில் பாட கிராம்போன் ரெகார்டாக வெளிவந்தது. அதே பாடலை அன்றைய நிகழ்ச்சியில் சௌம்யா பாட, எதிரே எம்.எஸ். உட்கார்ந்து கேட்க, நமக்கு சிலிர்க்கிறது. அடடா! சௌம்யாவுக்கு எப்படியிருக்கும்?



• சிவகணேசன்

வியந்து முடிவுக்கு வருவதற்குள் கல்கியின் 'தியாக பூமி' பாடல்கள் ஒலிக்கின்றன. 'தேச சேவை செய்ய வாரீர்' என்று மேடையில் உள்ள கலைஞர்கள் ஆரம்பிக்க, எதிரொலித்துப் பாடியபடி நடன உடையில் கலாக்ஷேத்ரா மாணவர் குழு - தலையில் கதர்க் குல்லாய் கையில் காங்கிரஸ் கொடியுடன்- அரங்கை வகிடெடுக்கும் மையப் பாதை வழியே மெள்ள நடந்து வந்து மேடையேறி அமர்கிறது.



• எஸ். பி. ராம்.

'பந்தம் அகன்று நம் திருநாடு உயர்ந்திட வேண்டாமோ?' (இதுவும் தியாக பூமி) என்று இசைக் கேள்வி எழுகிறது.

அன்றும் இன்றும் என்றும் அர்த்தமுள்ள வரிகளல்லவா... இளைய தலைமுறையினர்



• அனுராதா கண்ணன்



• திருப்பூர் கிருஷ்ணன்

பாடக் கேட்க, காட்சியழகும் கவிதையழகும் இசையழகும் சேர்ந்து நம்மைப் புரட்டித்தான் போடுகின்றன.

'கல்கி மூன்று விதமான பாடல்களை எழுதியிருக்கிறார்' என இணைப்புரை தொடர்கிறது : தேசிய கீதங்கள், பக்திப் பாடல்கள், காதல் கீதங்கள். முருகன் அவருக்கு இஷ்ட தெய்வம் அல்லவா! புழக்கத்திலிருக்கும் இரு ஹிந்தி சினிமா மெட்டுகளில் (ஒரே ராகம் வேறு!) இரண்டு முருகன் பாடல்களைப் புனைந்திருக்கிறார்.

'கன்னலின் இனிய தண்தமிழ் அளிப்பவனை' வேண்டிப் பாடுகிறார் அனுராதா கிருஷ்ணமூர்த்தி.

அதையடுத்து மீண்டும் பாடப்படும் காபி ராகம்தான் எவ்வளவு வேறுபட்ட அழகுடன் ஒலிக்கிறது! 'பூங்குயில் பட்டம்மாளின்' சிஷ்ய பரம்பரையைச் சேர்ந்த விஜய் சிவா 'பூங்குயில் கூவும் பூஞ்சோலை'க்குள் நம்மை அழைத்துப் போய் முருகனின் பொன்முகத்துப் புன்னகையைக் காட்டுகிறார்.




• பாம்பே ஜெயஸ்ரீ

இப்படி மீண்டும் மீண்டும் என்னைப் பாடினால் ஓடியே வந்து விடுவேன் என்பது போல் மேடையிலேயே வந்து உதிக்கிறார் முருகன்! 'மாலைப் பொழுதினிலே' பாடலுக்கு முருகனாக ராஜேஷும் நாயகியாக கனிதாவும் ஆடுகிறார்கள். அபிநயமும் நிருத்தமும் கலந்த அழகுடன் அது ஜொலிக்க, கலாக்ஷேத்ரா இயக்குனர் ராஜாராம் ஸ்வரக் கோர்வைகள் இயற்றித் தந்திருக்கிறார். குரு கிருஷ்ணவேணி லக்ஷ்மணன்

(தொடர்ச்சி-29ம் பக்கம்)


அதிசயங்களை
வீட்டுக்குள் வைத்துக்
கொள்ள முடியாதுதான்!
ஆனால்,
பொக்கிஷங்களை
வைத்துக் கொள்ளலாமே!
அமரர் கல்கி நூற்றாண்டு மலர்
+ இலவசமாக
எம்.எஸ்ஸின் தேன்குரல் கேஸட்!
விலை ரூ. 60/-
தபாலில் அனுப்ப இயலாது. பிரதிகளுக்கு உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.





1999 ஆகஸ்ட் 8
பிரமாதி ஆடி 23
மலர் : 58
இதழ் : 2

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

நாகாலாந்து ஊழல்!

பயங்கரமான ஊழல் ஒன்று நாகாலாந்தில் பகிரங்கமாக நடந்தேறியிருக்கிறது.

நான்கு ஆண்டுகளாக நாகாலாந்து லாட்டரிச் சீட்டு விற்ற பணத்தில் சல்லிக் காசு கூட அரசுக்கு வந்து சேரவில்லை! இவ்வகையில் நாகாலாந்து அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு 38,297 கோடி ரூபாய்!

இதைச் சுட்டிக் காட்டி, அரசைத் தட்டிக் கேட்டிருக்கிறார் பிரதம கணக்காயர் (CAG).


நாகாலாந்து முதல்வர் ஜமீர் தமது அரசுக்கும் இந்த ஊழலுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று மறுத்திருப்பதோடு, பத்திரிகைகளிடம் முன்கூட்டியே செய்தியை வெளியிட்டதற்காக பிரதம கணக்காயரைக் கண்டித்திருக்கிறார்!

நடந்திருப்பது இதுதான்:

அக்டோபர் 1993 தொடங்கி நவம்பர் 1997 முடிய விற்கப்பட்ட நாகாலாந்து லாட்டரிச் சீட்டுகளுக்கான வருமானம் சல்லிக்காசுகூட அரசு கஜானாவுக்கு வரவில்லை. இந்தக் கால கட்டத்தில் 83,254 குலுக்கல்கள் நடந்திருக்கின்றன; 38,297 கோடி ரூபாய் பெறுமானத்துக்கு டிக்கெட்டுகள் விற்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் ஒரு காசுகூட அரசு பெறவில்லை!

இது எப்படி சாத்தியம் என்று விளக்க முன்வராமல், நாகாலாந்து முதல்வர் கணக்காயரை மட்டும் குறை கூறுகிறார்.

லாட்டரியை நடத்தும் எம்.எஸ். அஸோஸியேட்ஸ் நிறுவனமும் நாகாலாந்து அரசின் ஊழல்



அதிகாரிகளும் லாட்டரிச் சீட்டு வருமானத்தைப் பங்கு போட்டுக் கொண்டு விட்டனர் என்கிறது சி.ஏ.ஜி. அறிக்கை.

பரிசுகள் ஏதும் இந்தக் காலகட்டத்தில் தரப்படவில்லை. பொது மக்களும் யாருக்குமே பரிசு விழவில்லையே என்று அலசி ஆராயாமல் லாட்டரி மோகத்தில் மேலும் மேலும் சீட்டுகளை வாங்கிக் கொண்டே போயிருக்கிறார்கள்.

இந்தியா முழுவதிலுமாக, அதிர்ஷ்டத்தை நம்பிச் சூதாடத் துணிந்த கணக்கற்றோர் ஏமாற்றப் பட்டிருக்கிறார்கள்.

சூதாட்டத்தில் ஈடுபடுவது என்பதுகூட தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் செயல்தான். அத்தகைய சூதாட்டங்களை அரசே நடத்துவது பெரிய அநீதி. அரசு கஜானாவுக்கு வருமானம் வேண்டும் என்று லாட்டரிக்குக் காரணம் வேறு கூறப்படுகிறது.

மக்களைச் சூதாடிகளாக ஆக்குவதுடன் அரசையும் சுரண்டுகிற இரட்டைப் பாவம் பிற மாநிலங்களிலும் பரவியுள்ளதா என உடனடியாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பது நல்லது.


திருநெல்வேலித் துயரம்!

திருநெல்வேலி சம்பவங்களை ஆராய நீதிபதி மோகன் தலைமையில் ஒரு கமிஷன் அமைக்க ஒப்புக் கொண்டிருப்பது முதல்வரின் சிறந்த முடிவு.

தேர்தல் நெருங்குகிற நேரத்தில் எதிரணியினரின் கடுமையான விமர்சனத்திலிருந்து தமக்குக் காப்பு தேடிக் கொண்டிருக்கிறார் கருணாநிதி. மூப்பனாருடன் உரையாடியபின் எடுக்கப்பட்டதாக இம் முடிவு அறிவிக்கப்பட்டிருப்பது அரசியல் முதிர்ச்சியின் அடையாளமாகத் தெரிகிறது.

எனினும் நெல்லைச் சம்பவங்கள் நிகழ அனுமதித்ததில் அந்த அரசியல் முதிர்ச்சி தென்படவில்லையே!

புதிய தமிழகம் கட்சி குறித்தோ அதன் உணர்வு ரீதியான அரசியல் போக்கு குறித்தோ



தமிழக முதல்வர் அறியாதிருக்க முடியாது. அக்கட்சியினரும் அவர்களது தலைவரும் ஈடுபடுகிற ஓர் ஊர்வலத்தில் தகராறுகள் வெடிக்கக் கூடும் என்று எதிர்பார்த்திருக்க வேண்டும். காவல் துறை இன்னும் கவனமாகவும் எச்சரிக்கையுடனும் செயல்பட்டிருக்கலாம்.

கலெக்டர் தமது அலுவலகத்தை விட்டு வெளியே வந்து மனுவைப் பெற்றுக் கொள்ளும்படிகூட ஏற்பாடு செய்திருக்கலாம்.

மாறாக அலுவலகம் அருகாமை வரை எல்லோருமே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கிருந்து நடந்து அலுவலகம் உள்ளே செல்லும்படி தலைவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். காரில் செல்லாமல் நடந்து போவது தங்கள் கௌரவத்துக்கு இழுக்கு என்பதாகக் கருதிய தலைவர்கள் மறுத்துப் போராட, சூழ்ந்திருந்த கூட்டம் உணர்ச்சிவசப்பட, விளைந்தது விபரீதம்!

த.மா.கா. தொடங்கிய நாள்முதலாக எத்தனையோ கூட்டங்கள், ஊர்வலங்கள் அமைதியாக நடந்துள்ளன. ஆனால் அக்கட்சி புதிய தமிழகத்துடன் கூட்டணி கொண்டதும் நடக்கிற முதல் பேரணியின் கதி அதோகதியாகியிருக்கிறது!

சம்பவத்தில் உயிரிழந்தோர் சடலங்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. சோதனைகள் முடிந்தபின் அவற்றைத் திரும்பப் பெறக் கூடாது என்று இறந்தவர்களின் குடும்பத்தார் அச்சுறுத்தப்படுவதும் தமிழக அரசின் மருத்துவர்கள் பிரேதப் பரிசோதனை செய்தால் போதாது, வெளி மாநிலத்து டாக்டர்கள் வரவேண்டும் என்று முரண்டு பிடிப்பதும் மனிதாபிமான மற்ற ரசாபாசமான பிடிவாதங்கள்.

இறந்தவர்களின் சடலங்களை உடனே பெற்று இறுதிச் சடங்கு செய்வதையே துயருற்றோர் விரும்புவார்கள். இதற்குக் குறுக்கே நிற்கும் யாருமே மக்களின் ஆதரவையோ அனுதாபத்தையோ பெறுவது துர்லபம்.

கலவரத்தில் இறந்த பதினேழு பேருக்கும் இரு வயதுக் குழந்தைக்கும் மாஞ்சோலை எஸ்டேட் பிரச்னையோடு என்ன தொடர்பு? அநியாயமாய் அப்பாவி உயிர்கள் பலியானதோடு சரி!

'மாஞ்சோலை'யை அரசியலாக்கி வாக்குகள் பெற முயன்றவர்கள் முன்னேறுவதற்குப் பதில் பின்னோக்கிச் சரிந்திருக்கிறார்கள். ○

● மாநாடு ஸ்பெஷலிஸ்டுகளான தி.மு.க.வில் இருந்தவர்களல்லவா ம.தி.மு.க.வினர். அதனால் காஞ்சியில் நடந்த மாநாட்டு முகப்பு, மேடை, பந்தல் எல்லாம் இலக்கண சுத்தம். குதிரைகள் பூட்டிய தேரில் கிருஷ்ணராக கலைஞர். அர்ஜுனன் வை.கோ! மாநாட்டு முகப்பில் அசத்தியது பேனர். கோயில், மசூதி, சர்ச், குருத்துவரா போன்ற முகப்புகள்.

● தலைவர்கள் ஊர்வலத்தைப் பார்வையிடும் மேடையின் முன்பக்கத்தில், 'தமிழினக் காவலன் வை.கோவின் புஜபல பராக்கிரமத்தைக் காண வரும் ரத கஜ துரக பதாதிகளே... வருக' என்று எழுதி வைத்திருந்தார்கள். மடிப்புக் கலையாத சீருடையில் தொண்டரணியினர் வலது, இடது என்று நடை போட்டு, பார்வையிடும் மேடைக்கு முன்னால் உறுதிமொழி எடுத்துக் கொண்டு விரைந்தது கச்சிதம். விவசாய அணி வந்தபோது, பச்சைத் துண்டுகள் மேடையில் வீசப்பட, அத்வானி உட்பட எல்லோருக்கும் பச்சைப் பரிவட்டம் கட்டி விட்டார் வைகோ.

● பா.ஜ.க. செயலாளர் வெங்கையா நாயுடு அட்டகாசமான பேச்சாளர். கூட்டத்தினரின் நாடி பிடித்துப் பேசக்கூடியவர். வேர்த்து விறுவிறுக்க அவர் பேசியது மாநாட்டுப் பந்தலில் அதிர்வுகளை உண்டாக்கியது. காங்கிரஸ் பல்வேறு துண்டுகளாக உடைந்து பரிதாபமாக நிற்கும் நிலையை விரிவாக விவரித்தார் நாயுடு. காங்கிரஸைப் போலவே திராவிட இயக்கமும் பிளவுபட்டு நிற்பது நாயுடுகாருக்குத் தெரியாதா என்ன!



• பச்சைப் பரிவட்டத்துடன்...

● டாக்டர் ராமதாஸ் மனத்தில் பட்டதைப் பேசக்கூடியவர். அன்றும் அப்படித்தான். "தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்கு பாராளுமன்றத் தொகுதிகளை வாரி வழங்கியதால்தான், காங்கிரஸ் கட்சி மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்குவதில் சிறிதும் அக்கறை காட்டவில்லை என்று கலைஞர் மேடையிலிருக்கும்போதே சொன்னார் டாக்டர்.

● கலைஞர் மாநாட்டுக்கு வந்தது ஒரு உணர்ச்சிபூர்வமான சங்கமமாக அமைந்து விட்டது. கலைஞருடன் வழக்கமான அமைச்சர்கள், சைதை கிட்டு ஆகியோரும் வந்திருந்தார்கள். இது தவிர காஞ்சி மற்றும் சுற்று வட்டாரத்திலிருந்து ஏகப்பட்ட கழக உடன்பிறப்புகளும் கலைஞர் பேச்சைக் கேட்க வந்திருந்தார்கள். "என்னைக் கோபாலபுரம் வீட்டில் வந்து சந்தித்து விட்டுத் திரும்பும்போது வைகோ 'தனிக்குடித்தனம் சென்ற மகன் தந்தையைப் பார்க்க வந்தது போல்' என்று பத்திரிகையாளர்களிடம் சொன்னார். இப்போது தனிக்குடித்தனம் நடத்தும் மகனைப் பார்க்க தந்தை நான் வந்திருக்கிறேன்'' என்று சென்டிமென்டலாக நெஞ்சைத் தொட்டார் கலைஞர். "ஒரு தந்தை இரண்டு மகன்களிடம் வீடு 'நிறைய' ஒரு பொருளை



• ஊர்வலம்...

மகன் ஏற்றி வைத்த அகல் விளக்கு!

...என்று சொன்னார். ஒரு மகன் காய்ந்த புல்லுக்கட்டுக்களைக் கொண்டு நிரப்பினான். மற்றொரு மகன் நடுக்கூடத்தில் அகல் விளக்கை ஏற்றி வைத்திருந்தான். அது போல இங்கு மாநில சுயாட்சி விளக்கை ஏற்றி வைத்திருக்கிறார் வைகோ" என்ற போது பந்தலே அதிரும்வண்ணம் கரகோஷம்.

● "வைகோவை தலைவர் எங்கேயோ தூக்கி வைத்து விட்டார்'' என்றார் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தி.மு.க. தொண்டர் ஒருவர். ''கலைஞர் ...கள் ...ங்கு வந்து மாநாட்டில் ...ப்பேசியது. இரு கட்சிகளின் தொண்டர்கள் அளவில் ஊடுருவி, தேர்தல் சமயத்தில் இணைந்து பணியாற்ற மிகவும் உதவியாக இருக்கும்'' என்றார் மாநாட்டுப் பந்தலில் நாம் சந்தித்த சேப்பாக்கம் தொகுதி தி.மு.க. செயலாளர் ஜெகதீசன். "எங்களுடைய தனிக்குடித்தனத்தை கலைஞரே அங்கீகரித்து விட்டார்" என்று பெருமைபடச் சொன்னார்கள் ம.தி.மு.க. கண்மணிகள்.

● மாநாட்டின் இரண்டாம் நாள் முழுக்க, ம.தி.மு.க. பிரமுகர்களின் பேச்சுக் கச்சேரிதான். தடாவில் கைதாகி வெளியே வந்த புதுக்கோட்டை பாவாணனின் பிரிவினை வாதம் தொனிக்கிற பேச்சை வை.கோ. மறுத்துப் பதில் பேசியது குறிப்பிடத் தக்கது. "தன் மடி



• 'தந்தையும் மகனும்...'



யில் இந்திராகாந்தி உயிரை விட்டதாக சோனியா சொல்கிறார். சோனியா மடியில் உயிரை விட்டது இந்திரா காந்தி மட்டுமல்ல; காங்கிரஸும்தான்'' என்று மாணவரணிச் செயலாளர் சபாபதி மோகன் சொன்ன போது பலத்த கைதட்டல்.

● மாநில சுயாட்சி மாநாடல்லவா. அது பற்றிய ஒரு பிரகடனத்தையும் ம.தி.மு.க. சார்பாக வெளியிட்டு, அதை ஒரு சிறு கையேடாக அச்சிட்டுக் கொடுத்தது உருப்படியான பணி.

— ப்ரியன்

படங்கள் : சௌந்தர்ராஜன்

கலைஞரும் காண வேண்டிய ஒரு சமத்துவபுரம்.





• மதியழகன் - சுந்தராம்பாள் தம்பதி...

'சமத்துவபுரம்' என்கிற திட்டத்தைக் கலைஞர் எதற்காகத் தொடங்கினார்?

கிராமங்கள் என்றால் ஒவ்வொரு ஜாதி யாரும் ஒவ்வொரு தெரு; தலித்துகள் என் பவர்கள் ஊரை விட்டுத் தள்ளியிருக்கிற காலனிகள் என்று வாழுகிற அவலநிலை மாற வேண்டும்; ஜாதி வித்தியாசமின்றி எல்லா ஜாதியினரும் ஒரே தெருவில் கலந்து வாழ வேண்டும்; பழக வேண்டும். இதுதான் வளர்ந்த ஒரு சமுதாயத்தின் உயர்ந்த நாகரிக மாக இருக்க முடியும்!

ஆனால், இதெல்லாம் இயற்கையாகவே நடப்பதற்கு இன்னும் பல காலமாகலாம் என்பதால், அதை விரைவு படுத்த வேண்டும் என்கிற எண்ணம் கலைஞருக்கு. அதற்காகத் தான் அரசே சமத்துவபுரங்களை உருவாக்கி, அதில் எல்லா ஜாதியினரையும் அருகருகே குடியமர்த்திக் கொண்டிருக்கிறது. 'தமிழ கமே சமத்துவபுரமாக மாற வேண்டும்' என்று எல்லா இடங்களிலும் பேசிக் கொண்டிருக்கிறார் கலைஞர்.

''கலைஞரின் இந்தக் கனவை நாங்கள் ஏற்கெனவே நனவாக்கி விட்டோம். எங்கள் கிராமத்தில் எந்தவிதமான ஜாதி வித்தியாச மும் இல்லாமல், ஒரே தெருவில் பல ஜாதி யினரும் கலந்து வாழ்கிறோம்; பழகுகிறோம்; தலித்துகள் உள்பட அனைவரும் ஒருவர் வீட்டில் ஒருவர் இயல்பாகச் சாப்பிடு

• புஷ்பராணி





• எம். நடராஜன்



• முத்து. அழகேசன்

கிறோம்! வந்து பாருங்கள்!'' என்று நமக்குக் கடிதம் எழுதியிருந்தார் மாகரல் என்னும் கிராமத்தைச் சேர்ந்த முத்து. அழகேசன்.

ஆச்சரியத்தோடு போய்ப் பார்த்தோம்!

காஞ்சிபுரத்திலிருந்து உத்திரமேரூர் செல்லும் பாதையில் பதினைந்தாவது கி.மீட்டரில் இருக்கிறது மாகரல். திருமாகறலீஸ்வரர் கோயிலின் (ஞானசம்பந்தர் பாடிய தலம்!) கோபுர தரிசனத்தோடு கிராமத்துக்குள் நுழைந்தோம்.

''வாங்க. உச்சிக்கால பூஜை முடியறதுக்குள்ள கோயிலுக்குப் போயிட்டு வந்திடலாம்!'' என்று நம்மை அழைத்துச் சென்றார் முத்து. அழகேசன்.

உச்சிக்கால பூஜைக்காக நாம் காத்திருந்த நேரத்தில் வந்து சேர்ந்தார், கிராம பஞ்சாயத்துத் தலைவர் எம். நடராஜன்.

''நான் பத்துப் பன்னெண்டு வயசுப் பையனா இருந்தபோது, இந்தக் கோயிலுக்குள்ள நான் வர முடியாதுங்க. ஏன்னா நான் தலித். ஐயருமாருங்களை நேர்லகூட நாங்க பார்க்கக் கூடாதுன்னு ஒரு அவலம் - அந்தக் காலத்துல. கல்யாணம் காட்சின்னு நாள் குறிக்கணும்னா, முதலியார், நாய்க்கர் போன்ற யார்கிட்டயாவது சொல்லுவோம். அவங்கதான் ஐயர்கிட்டப் போய் நாள் குறிச்சுக்கிட்டு வந்து எங்ககிட்ட சொல்லுவாங்க. ஆனா இப்பப் பாருங்க. நானும் எல்லோரோடும் சமமா வந்து சாமி தரிசனம் பண்றேன்!'' என்றார் பஞ்சாயத்துத் தலைவர்.

''என் வீடுகூட இதோ... கோயிலுக்குப் பக்கத்துலதான் பாருங்க... பார்த்திங்களா என் வீட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு மீனவர் குடும்பம். எதிரில் தச்சு வேலை செய்யும் ஒருவர் குடும்பம். அப்புறம் ஒரு நாயுடு குடும்பம், முதலியார் குடும்பம்!'' என்று காட்டினார் பஞ்சாயத்து தலைவர்.

''பார்க்கவே சந்தோஷமா இருக்கு. ஆனாலும் ஒருத்தர் வீட்டுக்குள்ள ஒருத்தர் போய் புழங்கறீங்களா? ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடறீங்களா?'' என்றோம்.

''பின்னே... இங்கெல்லாம் ஒரு வித்தியாசமும் இல்லீங்க. இத்தனை எதுக்குங்க? பக்கத்துத் தெருவுல ஒரு முதலியார் வீட்டுல எங்க தலித்



• ஏகாம்பரம்

பெண்தான் மருமகளா இருக்கு. வாங்க போய்ப் பார்க்கலாம்..." என்று அழைத்துச் சென்றார்.

மதியழகன் - சுந்தராம்பாள் தம்பதி வீடு. மதியழகன் முதலியார். சுந்தராம்பாள் தலித் பெண். காதல் திருமணம் இவர்களுடையது.

"ஒரு தலித் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள உங்கள் வீட்டில் எப்படி சம்மதிச்சாங்க?" - மதியழகனிடம் கேட்டோம்.

"முதல்ல கொஞ்சம் எதிர்ப்பு இருந்தது உண்மைதான். ஆனாலும் நான் உறுதியா இருந்து இவளைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு சொன்னதும் சம்மதிச்சிட்டாங்க!"

"உங்களுக்குள்ள எப்படி காதல் வந்தது?"

"வயல் வேலை செய்யறதுக்காக இவ வருவா. அப்பத்தான் எங்க காதல் அரும்பிச்சு!" என்றார் இன்னமும் மாறாத வெட்கத்துடன்.

"காதல் சரி. இவர், உங்களைக் கைவிட மாட்டார்னு எப்படி முழுசா நம்புனீங்க?" என்று சுந்தராம்பாளிடம் கேட்டோம்.

"எல்லாம் ஒரு நம்பிக்கையிலதான்..." என்றார் கணவர் பின்னால் மறைந்தபடியே!

"கல்யாணத்துக்கப்புறம் சம்பந்திகளுக்குள்ள போக்குவரத்தெல்லாம் எப்படி?"

"அதெல்லாம் ஒரு பிரச்சனையுமில்லை. எல்லோரையும் போல சம்பந்திகளாகத்தான் இருக்காங்க. ஜாதிகளெல்லாம் குறுக்கே வரவில்லை!" என்றார் மதியழகன்.

"அது சரி. கலப்புக் கல்யாணம் செய்து, இரண்டு குழந்தைகளுக்கும் பெற்றோராயிட்டீங்க. அரசாங்கத்துல ஏதும் மெடல் கிடல் குடுத்தாங்களா?"

"அதுக்கெல்லாம் நாங்க ஏதும் விண்ணப்பம் செய்யலீங்க. அரசாங்கமே பார்த்துக் குடுத்தா அது கௌரவம். நாங்களாகவே போய், 'கலப்புக் கல்யாணம் பண்ணிக்கிட்டோம்; விருது குடுங்க'ன்னு கேட்கறது கௌரவமாப்படலீங்க!" என்றார் மதியழகன்.

"இதே தெருவில் ஒரு தலித் வீட்டுக்கு முதலியார்ப் பெண் மருமகளாப் போயிருக்கு. அவுங்களையும் பார்க்கலாம், வாங்க!" என்று அழைத்துச் சென்றனர்.

சுரேஷ் ராஜன் - விமலா என்கிற அந்த

ஜோடிக்கும் இரண்டு குழந்தைகள். குழந்தைகளின் படிப்பு கருதி அவர்கள் காஞ்சிபுரம் அருகில் குடிபெயர்ந்து சென்று விட்டார்கள். சுரேஷ் ராஜனின் தாயார் புஷ்பராணி மட்டும்தான் வீட்டில் இருந்தார்.

"நாங்க தலித்துகளா இருந்தாலும் அந்த எண்ணமே வராதபடிக்குத்தான் சம்பந்தி வீட்டுல நடந்துக்கறாங்க. எல்லோர் வீட்டுக் கல்யாணமும் போலத்தான் எங்க வீட்டுக் கல்யாணமும் நடந்தது!" என்ற புஷ்பராணி, "எங்க சம்பந்தி இங்கிருக்கிற நடுநிலைப் பள்ளியிலதான் ஹெட்மாஸ்டரா இருக்கார். அவரையும் போய்ப் பாருங்க!" என்றார்.

•

பள்ளிக்குச் சென்று தலைமையாசிரியர் புலவர் எஸ். ஏகாம்பரத்தைச் சந்தித்தோம்.

"உங்கள் பெண்ணை ஒரு தலித் பையன் காதலிப்பது தெரிந்ததும் உங்கள் ரியாக்ஷன் எப்படியிருந்தது?"

"என்னங்க இப்படிக் கேட்டுட்டீங்க! 'ஜாதிகள் இல்லையடி பாப்பா'ன்னு பாரதி பாடலைச் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர் நான். சொல்லிக் கொடுக்கிற நானே ஜாதி வித்தியாசம் பார்க்கலாமா?" என்றார் இயல்பாய்.

"என் பொண்ணும் மருமகனும் ரொம்ப சந்தோஷமா இருக்காங்க. குழந்தைங்க ரண்டும் பயங்கர சுட்டியா இருக்கறதைப் பார்க்கறபோது எனக்கும் சந்தோஷமாத்தான் இருக்கு. ஒரு வித்தியாசமும் இல்லை. மாப்பிள்ளை மேல எனக்கு ஒரேயொரு சின்ன வருத்தம்தான் இருக்கு. அது அவரோட அதீத அரசியல் ஈடுபாடுதான். அரசியலெல்லாம் நமக்கெதுக்குன்னு சொன்னா கேட்க மாட்டேங்கறார். மத்தபடி அவர் ரொம்ப நல்லவர்!" என்று பெருமையோடு சொன்னார் ஏகாம்பரம்.

இந்த இரு ஜோடிகள் மட்டுமல்ல; சில ஆண்டுகளுக்கு முன்பு பிராமணர் - தலித் கலப்புத் திருமணமும் இங்கே நடந்ததாம். வேலை காரணமாக அவர்கள் வெளியூருக்குச் சென்று செட்டில் ஆகி விட்டார்களாம்!

உண்மையிலேயே மாகரல் மக்கள் மாபெரும் மக்கள்தான்! நாம் மட்டுமல்ல; முதல்வர் கலைஞரும் ஒரு நடை போய்ப் பார்த்துவிட்டு வர வேண்டிய அளவுக்கு உயர்ந்து நிற்கிறார்கள் இந்த மக்கள்!

— இளங்கோவன்

படங்கள்: வெங்கடேஷ்

செல்ஃபோன் ஊழல்:


'செல்ஃபோன் கம்பெனிகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டதன் மூலம், அரசுக்கு 50,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதற்குக் காரணமாகி விட்டார் பிரதமர் வாஜ்பாய்' என்று ஜெ. உள்பட எல்லா எதிர்க்கட்சியினரும் குற்றம் சாட்டுகிறார்கள். உண்மை என்ன?

1992-ல் தொடங்கப்பட்ட தாராளமயமாக்குதலின் விளைவுதான் தனியார் செல்ஃபோன் கம்பெனிகள். முதலில் டில்லி, மும்பை, கல்கத்தா, சென்னை ஆகிய நான்கு பெரிய நகரங்களில் செல்ஃபோன் கம்பெனிகள் ஆரம்பிப்பதற்காக அரசு டெண்டர் அறிவித்தது. ஒரு நகருக்கு இரண்டு கம்பெனிகள் வீதம் டெண்டரில் தேர்ந்தெடுக்க விரும்பியது அரசு. அதன்படியும் செய்தது. இதில் தேர்ந்தெடுக்கப்படாத கம்பெனிகள், அரசு வழங்கிய லைசன்ஸ் முறையில் முறைகேடு நடந்து விட்டதாக நீதி மன்றம் சென்றன. இரண்டு ஆண்டுகளாக நடந்த இந்த வழக்கில் முறைகேடு எதுவுமில்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதன் பிறகே செல்ஃபோன் கம்பெனிகளுக்கும் அரசுக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின்படி சென்னை நகரில், முதல் ஆண்டு மாதம் ஒரு கோடி ரூபாயும் இரண்டாம் ஆண்டு 2 கோடி ரூபாயும் மூன்றாம் ஆண்டு 3 கோடி ரூபாயும் நான்காம் ஆண்டு நான்கு கோடி ரூபாயும் அரசுக்குச் செலுத்த வேண்டும். மற்ற மூன்று நகரங்களிலும் உள்ள கம்பெனிகள் முதலாண்டு ஒன்றரைக் கோடியும் இரண்டாம் மூன்றாம் ஆண்டுகளில் முறையே மூன்று கோடி ரூபாயும் ஆறு கோடி ரூபாயும் அரசுக்குச் செலுத்த வேண்டும்; நான்காம் ஆண்டில் ஒரு சந்தாதாரருக்கு ஆண்டுக்கு 5,000 ரூபாய் வீதம் செலுத்த வேண்டும்! இடையில் டெலிபோன் கட்டணம் உயர்ந்தபோது, ஒரு சந்தாதாரருக்கு 5,000 ரூபாய் என்று செலுத்த வேண்டிய தொகை 6,023 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது!

இது முதல் கட்டம். பிறகு மற்ற நகரங்களுக்கும் செல்ஃபோன் வசதிகள் விரிவுபடுத்தப்பட்டபோது, அவற்றுக்கும் தீர்மானிக்கப்பட்ட கட்டணங்களை அரசுக்குச் செலுத்த வேண்டும் என்பது இரண்டாவது கட்டம்.

இதன்படி செல்லுலர் கம்பெனிகள் ஆர்வத்தோடு தமது பணிகளைத் தொடங்கின. இந்தியா என்பது அதிக ஜனத்தொகை கொண்ட நாடு என்பதால், ஏராளமான மக்கள் செல்ஃபோன்களை வாங்குவார்கள் என்று கம்பெனிகள் எதிர்



பார்த்தன. அதனாலேயே அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகைகளை அதிகமாகவே குறிப்பிட்டு ஒப்பந்தம் செய்து கொண்டு விட்டார்கள்.

ஆனால், கம்பெனிகள் நினைத்த மாதிரி எதுவும் நடக்கவில்லை! செல்ஃபோன்களை வாங்குவதற்கு யாரும் முண்டியடித்துக் கொண்டு முன்வரவில்லை. வாங்கிய சந்தாதாரர்களும் வெகு சிக்கனமாகவே பயன்படுத்தினார்கள். ஒவ்வொரு சந்தாதாரரும் மாதத்துக்கு 300 நிமிடங்களாவது செல்ஃபோனில் பேசுவார் என்று கம்பெனிகள் எதிர்பார்த்ததற்கு மாறாக, அவர்கள் நூறு முதல் 110 நிமிடங்கள் கூடப் பேசாத நிலை!

செல்ஃபோன் வசதிகளை நிறுவுவதற்காகக் கம்பெனிகள் செலவழித்த முதலீட்டுத் தொகை, விளம்பரங்களுக்கான செலவுகள் எல்லாவற்றையும் கணக்கிட்டு, வருமானத்தையும் கணக்கிட்டபோது, கம்பெனிகளுக்கு

பிரதமர் குற்றவாளியா?

ஏகப்பட்ட நஷ்டம்! அதாவது, எதிர்பார்த்த வருமானத்தில் பாதி கூட வராத ஒரு நிலை! இதனால் பல கம்பெனிகள் இந்த நஷ்டத்தோடு ஆளை விட்டால் போதும் என்று பின் வாங்கத் தொடங்க ஆரம்பித்தன.

இந்த நிலையில்தான் செல்ஃபோன் கம்பெனிகள், தங்கள் நிலையை அரசிடம் முறையிட்டன. அதன் விளைவாகத்தான் 94-ம் வருட டெலிகாம் கொள்கையை அரசு மறுபரிசீலனை செய்து, புதிய டெலிகாம் கொள்கையை இந்த ஆண்டு அறிவித்தது. இதுதான் இப்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறது!

இது பற்றி மேலும் விவரங்களைத் தெரிந்து கொள்வதற்காக 'ஸ்கைசெல்' செல்ஃபோன் நிறுவனத்தின் உயர் அதிகாரியான ஆர். வெங்கட்ராமனிடம் புதிய டெலிகாம் கொள்கை பற்றிச் சில கேள்விகளைக் கேட்டோம்.

"புதிய டெலிகாம் கொள்கைப்படி வருமானத்தில் ஒரு பகுதியைத்தான் அரசுக்குச் செலுத்த வேண்டும். அதனால், பழைய ஒப்பந்தப்படி கம்பெனிகள் அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் என்ன ஆவது? இது கம்பெனிகளுக்குச் சலுகை காட்டுவதாக ஆகிறது. இதில் முறைகேடு இருக்கிறது என்று குற்றம் காட்டுகிறார்களே?"

"புதிய கொள்கைப்படி அனைத்துக் கம்பெனிகளும் வருமானத்தின் அடிப்படையில் அரசுக்குக் கட்டணம் செலுத்தலாம் என்பது உண்மைதான். அதனாலேயே பழைய ஒப்பந்தப்படி செலுத்த வேண்டிய 1400 கோடி ரூபாய் தொகையைச் செலுத்தாமல் இருக்க முடியாது. அதையும் செலுத்தித்தான் ஆக வேண்டும். எங்களுக்கு இப்போது கஷ்டம் என்பதால் அதை இரண்டு தவணைகளாகக் கட்டப் போகிறோம். அதுவும் சும்மா அல்ல; 20 சதம் வட்டியோடு கட்டப் போகிறோம்!"

"அப்புறம் எப்படி ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நஷ்டத்துக்கு அரசு காரணமாகி விட்டது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன?"

"இதெல்லாம் ஆரம்பத்தில், இந்திய மக்களின் வாங்கும் சக்தியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், வெறும் ஜனத் தொகையை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டு செல் கம்பெனிகள் போட்ட மனக் கணக்கின் அடிப்படையில் சொல்வது. அதாவது செல் கம்பெனிகள் எதிர்பார்த்த வருமானம் கிடைத்திருந்தால், இப்படி ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் அரசுக்கும் வருமானமாகக் கிடைத்திருக்கும். ஆனால் நடக்கவில்லை. இப்படி நடக்காத ஒன்றைத்தான் எதிர்க்கட்சிகள் குறிப்பிடுகின்றன. அதாவது, 'பஸ்ஸ'க்குப் பின்னால் ஓடி இரண்டு ரூபாய் மிச்சப்படுத்தியதை விட, டாக்சிக்குப் பின்னால் ஓடியிருந்தால் ஐம்பது ரூபாய் மிச்சப்படுத்தியிருக்கலாமே? ஏன் ஓடவில்லை?' என்று கேட்கிற கேள்வியைப் போன்றதுதான் இதுவும்!"

"முன்னாள் டெலிகாம் அமைச்சர் ஜக்மோகன் செல் கம்பெனிகளிடம் மிகவும் கெடுபிடியாக நடந்து கொண்டாரா?"

"உண்மை நிலை நஷ்டமாக இருந்தாலும் ஒப்பந்தப்படி கம்பெனிகள் நடந்து கொண்டுதான் ஆக வேண்டும் என்று ஓர் அமைச்சர் என்கிற முறையில் அவர் கூறினார். உண்மை நிலையை நாங்கள் அரசிடம் முறையிட்ட போது பிரதமர் உண்மையை உணர்ந்திருப்பார். அவ்வளவே!"

"புதிய ஒப்பந்தப்படி ஒப்பந்தக் காலம் பத்திலிருந்து இருபதாண்டுகளாக உயர்த்தப்பட்டதற்கு என்ன காரணம்?"

"ஆரம்ப ஆண்டுகளில் வருமானம் குறைவாகத்தான் இருக்கும். முதலீடும் அதிகமாக இருக்கும் என்கிற நிலையில் ஒப்பந்தக் காலம் அதிகமானதாக இருந்தால் தானே கம்பெனிகள் நஷ்டமடையாமல் இருக்க முடியும்! இதிலும் தவறு ஏதும் நடந்து விடவில்லை. இங்கிலாந்தில் 25 வருடம்; இலங்கையில் 20 வருடம்; சிங்கப்பூரில் 17; தாய்லாந்தில் 20! இது மட்டுமல்ல; அங்கு இந்தியாவை விடக் கட்டணத் தொகையும் குறைவு. இதையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டுதான். இங்கும் ஒப்பந்தக்காலம் உயர்த்தப்பட்டிருக்கிறது!"

— சாருகேசி

ஓம் காமதேனுவே நம:



கோபூஜை செய்வோம்!
சகல ஐஸ்வர்யமும் பெறுவோம்!!

பேரன்புள்ள ஆன்மீக அன்பர்களுக்கு, வணக்கம்!

'ஆன்மீகம்' மாத இதழின் வாசகர்கள், 'ஆன்மீக அன்னதான அறக்கட்டளை'க்கு நன்கொடை அளித்துவரும் அன்பர்கள், மற்றும் பல ஆன்மீக அன்பர்களின் விருப்பத்திற்கிணங்க மிகச் சிறந்த முறையில் கோபூஜை நடத்த மிகவும் பிரசித்தி பெற்ற சென்னையிலுள்ள திருவேற்காடு தேவி கருமாரி அம்மன்கோவிலுக்கு அருகாமையில் இடமும், பசுக்களும் வாங்கி பராமரிக்க திட்டமிட்டுள்ளோம். நகரங்களில் வசிப்பவர்கள் கோபூஜை செய்ய பசுக்களை வாங்கி பராமரிப்பது என்பது எளிதல்ல. இதை மனதில் கொண்டு தங்களுடைய விருப்பத்தை பூர்த்தி செய்ய "கோபூஜை அறக்கட்டளை" என்கிற அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இங்கு தாங்கள் விரும்பும் நாட்களில் கோபூஜை செய்து வளமான வாழ்க்கையையும் புண்ணியத்தையும் பெறலாம்.

கோபூஜை செய்தால் எல்லாவிதமான தோஷங்களும், பாவங்களும் தங்களை விட்டு விலகும். கோமாதா ஒவ்வொருவரின் குலதெய்வமாக அமையவும், எல்லா தேவதைகளின், தெய்வங்களின் அருளும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதே கோபூஜை அறக்கட்டளையின் எண்ணம். பசு தானம் உயர்ந்த தானம் ஆகும். இதை அன்பர்கள் பேருக்காக செய்யாமல் குலம் விருத்தியடையவும், குலம் வாழவும் செய்ய வேண்டுமென அன்புடன் வேண்டுகிறோம். தங்களின் பிறந்தநாள், திருமணநாள், அல்லது குடும்பத்தாரின் திதி நாட்கள் என்று தாங்கள் விரும்பும் நாட்களில் கோபூஜை செய்ய நேரில் வர இயலாதவர்கள் இது குறித்து எங்களுக்கு தெரிவித்தால் உங்களுக்காக இந்த அறக்கட்டளை மூலம் கோபூஜை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். ஒவ்வொருவருடைய பொது வாழ்வில் கோபூஜை மிகவும் முக்கியமானது.

கோபூஜை பணி தொடர்ந்து சிறந்த முறையில் நடைபெற கோபூஜை அறக்கட்டளைக்கு பசுவை தானமாகவோ அல்லது பசுவை வாங்க தங்களால் இயன்ற நன்கொடையையோ அளித்து நல்லாதரவை தர வேண்டுகிறோம். பசுவைத் தெய்வமாக மகாலக்ஷ்மியின் அம்சமாக கருதி பசுவுக்கு பூஜை செய்து பசுவை வணங்குவது நமது சந்ததிகளுக்கு மிகப்பெரும் புண்ணியத்தை தேடிக்கொள்ள இது சிறந்த வழியாகும்.

நன்கொடையை Cheque /D.D/ M.O மூலம் கோபூஜை அறக்கட்டளை (Kopoojai Arakattalai) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

கோபூஜை அறிவோம்!

கோமாதாவை நிற்கவைத்துப் மலர்கள் தூவி நமஸ்கரித்து பூஜை செய்யுங்கள்

இரு கொம்புகளின் நடுவே	- ஓம் சிவாய நம:
வலக் கொம்பில்	- ஓம் பிரும்மணே நம:
இடக் கொம்பில்	- ஓம் விஷ்ணுவே நம:
கொம்பின் நுனியில்	- ஓம் சதுஷ்சஷ்டி கோடி தீர்த்தேப்யோ நம:
மூக்கின் நுனியில்	- ஓம் ஜ்யேஷ்டாயை நம:
வலக்கண்ணில்	- ஓம் சூர்யாய நம:
இடக்கண்ணில்	- ஓம் சந்திராயை நம:
பற்களில்	- ஓம் மாருதாயை நம:
தாடையில்	- ஓம் வருணாய நம:
மேலுதட்டில்	- ஓம் யக்ஷேப்யோ நம:
கீழுதட்டில்	- ஓம் யமாய நம:
கழுத்தில்	- ஓம் இந்திராய நம:
குளம்பின் நடுவில்	- ஓம் கந்தர்வேப்யோ நம:
குளம்பின் நுனியில்	- ஓம் நாகேப்யோ நம:
குளம்பின் மேற்பாகத்தில்	- ஓம் அப்ஸரேப்யோ நம:
கால்களில்	- ஓம் கணேப்யோ நம:
பத்து நாடிகளில்	- ஓம் நேத்ரேப்யோ நம:
மடியின் அடியில்	- ஓம் பிருகுப்யோ நம:
மடியின் நுனியில்	- ஓம் சகோரேப்யோ நம:
இருதயத்தில்	- ஓம் உமாதேவ்யை நம:
வயிற்றில்	- ஓம் பூமி தேவ்யை நம:
யோனியில்	- ஓம் மகாலக்ஷ்மியை நம:
உரோமங்களில்	- ஓம் தேவேப்யோ நம:
கோமயத்தில்	- ஓம் பிரும்மணே நம:
கோமூத்திரத்தில்	- ஓம் விஷ்ணுவே நம:
பசுவின் நெய்யில்	- ஓம் ருத்ராய நம:
பசுவின் தயிரில்	- ஓம் ஈஸ்வராய நம:
பசுவின் பாலில்	- ஓம் சதாசிவாய நம:

என்று மந்திரங்களை பக்தியுடன் சொல்லவும்.

கோபூஜை அறக்கட்டளை

KOPOOJAI ARAKATTALAI (Regd)

63, மல்லன் பொன்னப்ப தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

போன் : 8594742 ஃபேக்ஸ் : 91-044 - 8594761

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் முழுத் திறமையையும் வெளிக் கொணரும் வகையில் நிர்வகித்து நட்டுவாங்கம் செய்கிறார். சாய்சங்கர் தலைமையில் இசைக் குழுவினர் அவரோடு இசைக்கிறார்கள்.

பூஞ்சோலை முருகனையும் மலர்ப் பொழில் வேலனையும் பார்த்த பரவசம் மாறுமுன் 'வண்டாடும் சோலையில் கண்டுள்ளம் கொள்கிறான்' கண்ணன்.

தமிழிசைக் கச்சேரி மேடைகளுக்கென்று கல்கி தியாகய்யர் கிருதியின் (உண்டேதி ராமுடு) மெட்டில் அமைத்த 'வண்டாடும் சோலை தனிலே'! ராக ஆலாபனையில் ஆரம்பித்து கீர்த்தனை, நிரவல், ஸ்வரம் என்று டி.எம். கிருஷ்ணா 'மறைகள் பரவும் மாயனை' ஹரிகாம்போதியால் அலங்காரம் செய்து நிறுத்துகிறார்!

ஸ்ரீராம் குமாரின் வயலின் ஆதரவும் அருண்பிரகாஷின் ம்ருதங்க சேர்க்கையும் ஒரு குட்டி கச்சேரியின் பரிமாணத்தை ஏற்படுத்துகின்றன.

அரங்கில் நுழைந்து விட்ட கண்ணன் மீராவை நினைவுபடுத்த, இணைப்புரை வழங்குவோர் 'எம்.எஸ். மீராவாகவே மாறி விட்டார்' என்று மீரா திரைப்படம் குறித்து கல்கி எழுதியதை நினைவுபடுத்த, கரவொலி அலை அலையாக எழுகிறது.

கரவொலியை அடியொற்றி கோலாட்டங்கள் சப்திக்க, கலாக்ஷேத்ரா மாணவிகள் 'லீலைகள் செய்வானே' என்ற பாடலுக்கு விதவிதமாகச் சுழன்றாடும் வண்ணக் காட்சி மேடையையும் மனங்களையும் ஆக்கிரமிக்கிறது.

ஆனந்தக் களிப்பிலிருந்து துயரின் ஆழத்துக்குப் பாய்கிறது நிகழ்ச்சி. மகாத்மா சுட்டுக் கொல்லப்பட்டு பல மாதங்கள் கடந்த பின்னும் துயரிலிருந்து மீள முடியாத தவிப்பில் கல்கி அரற்றியது கவிதை வடிவம் கொண்டு இசைத்தட்டாகவும் (எம்.எஸ். பாட) வெளிவந்தது. 'இத்தனை நாள் ஆன பின்னும் ஏழை நெஞ்சே ஏன் துயரம்?' என்ற அந்தப் பாடலை உணர்ச்சி ததும்ப உச்சரிக்கிறார் விஜய் சிவா. பாடலாக அன்றி கவிதையாக அக்கணத்தில் கேட்க, மிகவும் உருக்கமாக இருக்கிறது. சசிதரின் புல்லாங்குழலில் சுபபந்துவராளி வேறு கவிதையோடு மெல்லியதாகச் சேர்ந்து பிழிந்தெடுக்கிறது!


கல்கியின் துயரில் பங்கெடுத்துக் கொண்ட கையோடு அவர் படைத்த கதாபாத்திரமான பூங்குழலியின் ஆழ்மன விம்மலைக் கேட்கிறோம்.

'அலை கடலும் ஓய்ந்
திருக்க
அகக் கடல்தான்
பொங்குவதேன்...'

– நம்புங்கள்! கவிதை உச்சரிக்கும் குரல் பாம்பே ஜெய்ஸ்ரீயுடையது! கவிதையோடு சிவகணேசனின் வயலினிசை சேரும்போது எத்தனை பொருத்தம்!



• சங்கீதா



• ஸ்ரீராம்குமார்

அடுத்த பாடல் சிவகாமியின் சபதத்திலிருந்து – கொந்தளிக்கும் போர்ச் சூழலை போர்த்தி மறைக்கும் முரண் யுக்தியாக இதைக் கல்கி நாவலில் புகுத்தியிருப்பதை சுட்டிக்காட்டுகிறார் இணைப்புரையாளர்.



• டி.எம். கிருஷ்ணா



• கௌரி ராம்நாராயண்

'செங்கனி வாயில்' பாடுகிறார் எஸ்.பி. ராம். கரஹரப்ரியாவில் தொடங்கி தேஷ், ஹமீர் கல்யாணி என்று ராகங்களை மாற்றி முன்னேறுகிறார்.

அடுத்த பாடலும் சிவகாமியின் சபதத்திலிருந்தே. எங்கே கவிதை சொன்னதோடு நிறுத்திக் கொள்வாரோ என்று சந்தேகிக்கும் நமக்கு 'அபயம்' அளிக்கிறார் பாம்பே ஜெய்ஸ்ரீ. 'மறவேன் மறவேன் என்று வேலின் மேல் ஆணையிட்ட...' – யதுகுலகாம்போதியில் இசையமைத்துத் தந்திருக்கிறார் விஜய் சிவா.

காதல், குதூகலம், பக்தி, ஆராதனை தேசியம் என்று வலம் வந்த நிகழ்ச்சி 'வேதாந்தம்' என்கிற அமைதி நிலையைத் தொடுகிறது. 'ஒளியே வடிவமாய்...' என்ற கல்கியின் கவிதையை ராகமாலிகை விருத்தமாகப் பாடுகிறார் சஞ்சய் சுப்ரமண்யன். பூர்வி கல்யாணி, சஹானா, பைரவி,

சுருட்டி என்று ராகங்களின் தேர்வு மொழிக்கு அர்த்தம் கூட்டுகிறது.

கேள்விகளைக் கடந்த வேதாந்த நிலையிலிருந்து மீண்டும் கேள்விகளுக்கே திரும்புகிறது நிகழ்ச்சி.

'திரை கடல் தூங்காதோ தோழி' என்ற பாடல் பிறக்கக் காரணமாயிருந்த உண்மைச் சம்பவம் ஒளி – ஒலிக் காட்சியாக மேடையில் நடிக்கப்படுகிறது. நிகழ்ச்சி முழுவதற்கும் அர்த்தம் கூட்டும் வகையில் ஒளியமைப்புச் செய்துள்ள ஜனார்த்தனன் மிகுந்த கவனத்துடன் இக்காட்சியை அமைத்திருக்கிறார்.

டி.கே. பட்டம்மாளின் தம்பி டி.கே. நாகராஜன் சிறுவனாக இருந்தபோது கல்கியுடன் கடற்கரைக்குப் போனதும்; அலைகள் நிற்காமல் அடிப்பதேன் என்று கேட்டதும் அதற்கு அவர் சற்று மௌனமாய் இருந்து விட்டு பாடல் வடிவில் (அதுவும் டீக்கடையில் கேட்ட ஜுதிகா ராயின் ஹிந்தி பாடல் மெட்டிலேயே அமைத்து) பதில் சொன்னதும் விவரிக்கப்பட, சங்கீதா சிவகுமார் 'அலை ஓயாதோ' என்ற அப் பாடலை, கேள்வித் தொனியின் ஏக்கம் மாறாமல் பாடுகிறார்.

ஓயாத அலை ஓசை கல்கியின் பல எழுத்துக்களில் நெடுமூச்சாக விரவியிருந்தாலும் அவர் சாந்த ரஸத்தைப் பெரிதும் விரும்பினார். நிகழ்ச்சியும் ஒரு ஆனந்த நடனத்துடன் நிறைவுறுகிறது. 'பிருந்தாவனத்தில் கண்ணன் வளர்ந்த அந்த நாளும் வந்திடாதோ?' என்று ஜால்ரா தட்டிக் கொண்டு ஆடுகிறார்கள் பெண்கள். அந்த பிருந்தாவனமும் கோபிகா ஸ்த்ரீகளும் மாடு கன்றுகளும், மீராவும், புழுதி மேனியுடன் புனிதன் கண்ணனும் அந்த அசைவுகளினூடே தோன்றி மறையும் மாயாஜாலம் நிகழ்கிறது.

திருப்பூர் கிருஷ்ணனும் அனுராதா கண்ணனும் வணங்கி விடைபெற, விளக்குகள் அணைந்து 'காற்றினிலே வரும் கீதம்' இசைத்தட்டாக எம்.எஸ். குரலில் ஒலிக்கிறது. மேடையில் மெள்ள மெள்ள தீப ஜோதிகள் ஒளிர ஆரம்பிக்கின்றன. பங்கேற்ற அனைவரும் விளக்குகளை ஏந்தி நூற்றாண்டு நாயகருக்கு அஞ்சலி செலுத்த, அந்த விளக்குகளின் சுடரொளித் தெறிப்பில் பார்வையாளர்களின் விழி நீர் பளபளத்துப் பிரகாசிக்கிறது.


— நமது நிருபர்கள்

''நீங்களும் ஆபீசிலே மானேஜராத் தானே இருந்தீங்க? எப்படி ஒரு கதாசிரியரா மாறினீங்க?''

''ஊழியர்கள் லேட்டா வந்ததற்குக் காரணமா சொன்ன கதைகளை பத்திரிகைக்கு அனுப்பிச்சு.''

– வடபழனி எஸ். உஷாதேவி





''ஜவுளிக்கடையில் ஆடித் தள்ளுபடின்னு போர்டைப் பார்த்துட்டு புடவை வாங்கப் போனோம். புடவையை செலக்ட் பண்ணி பில் போடும் போது தள்ளுபடி கிடையாதுன்னு சொல்லிட்டாங்க.''

''ஏனாம்?''

''நாங்க புடவையை செலக்ட் பண்றதுக்குள்ளே ஆடி முடிஞ்சு ஆவணி பொறந்துடுச்சாம்.''

– கோவில்பட்டி ஆனந்த லட்சுமி

தேர்தலுக்காக அனைத்துக் கட்சிகளும் வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்து வரும் நிலையில், அதனைப் புறக்கணிக்கும்படி பிரசாரம் செய்து கொண்டிருக்கிறது, தமிழ்-தமிழர் இயக்கம். அதன் பொதுச் செயலாளர் தியாகு. நக்சல்பாரி இயக்கமான 'மார்க்சிய-லெனினிய' பிரிவில் இருந்த சமயத்தில் ஒரு கொலைக் 'குற்றத்திற்காக தூக்கு தண்டனை விதிக்கப் பட்டு, மரணத்தின் விளிம்பு வரை சென்று, பிறகு ஆயுள் தண்டனை அனுபவித்து வெளியில் வந்தவர். பெருகி வரும் தாய்த் தமிழ்ப் பள்ளிகளின் ஸ்தாபகர்; ஒருங்கிணைப்பாளர். அவரிடம் தேர்தல் புறக்கணிப்பு ஏன், என்பது உள்பட அவர்களின் அரசியல் செயல்பாடு, நிலைப்பாடு குறித்தும் பேசினோம்...



"தேர்தல் புறக்கணிப்பு ஏன்?"

"சிறைக்குச் சென்று ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த பின்பு 'மார்க்சிய-லெனினிய' இயக்கத்திலிருந்து வெளி வந்து விட்டீர்களா? இல்லை, உள்ளூர அந்த உணர்வுகளைத் தேக்கி வைத்திருக்கிறீர்களா?"


"மார்க்சியம்-லெனினியம் என்றால் என்னவென்றே தெரியாமல், 'மார்க்ஸியம் - லெனினியம் ஓங்குக' என்று சொல்லிக் கொண்டிருப்பதை விட, அதனை நன்கு உள்வாங்கி, செயல்களிலும் பொதிய வைத்துக் கொண்டு அப்படி ஒரு கோஷம் போடுவதையே விட்டு விடுவது நல்லதல்லவா? புரியாமல் சொல்வதைவிட, புரிந்து கொண்டு சொல்லாதிருப்பது ஒரு பக்குவம். அந்தப் பக்குவம் எனக்கு வந்திருக்கிறது."

"நீங்கள் தற்போது பொறுப்பு வகிக்கும் தமிழ்-தமிழர் இயக்கத்தை ஏற்கெனவே அங்கம் வகித்த நக்சல்பாரி இயக்கத்திலிருந்தும், நாத்திகத்துடன் கலந்து தமிழ்க் கோஷமிடும் பெரியார் இயக்கத்திலிருந்தும்

எப்படி வேறுபடுத்திப் பார்க்கிறீர்கள்?"

"மார்க்சியம், பெரியாரியம் என்பதெல்லாம் இந்த சமூகத்தை நாம் புரிந்து கொள்வதற்கும், புரிந்து கொண்டதன் அடிப்படையில் மாற்றியமைப்பதற்குமான கருவிகள். அவையே இலட்சியங்களல்ல.

"ஒருபுறம் தேசிய இன ஒடுக்கு முறையும் மறுபுறம் சாதியமும் நிலவுகிற நிலைமைதான் தமிழ்ச் சமூகத்திற்கு இருக்கிற சூழல். இவற்றிற்கு எதிரான போராட்டத்திற்குப் பெரியாரின் கொள்கைகள் ஒரு கருவியாக அமைகின்றன. ஒரு சமூக மாற்றத்திற்கான போராட்டத்தில் மார்க்சியம் மட்டுமோ, பெரியாரியம் மட்டுமோ போதுமானதல்ல. நம்முடைய காலத்திற்கேற்பவும், நிலைமைகளுக்கேற்பவும் இந்த அடித்தளங்கள் மீது புதிதாகக் கட்டி எழுப்ப வேண்டிய பல செய்திகள் இருக்கின்றன. எனவே தமிழ் - தமிழர் இயக்கத்தைப் பொறுத்தவரை அது ஒரு இஸத்திற்காக நடத்தப்படுகிற இயக்கம் அல்ல. இது ஒரு குறிக்கோள் சார்ந்த இயக்கம்."



"தேர்தலையொட்டி தனக்கு வந்த சூட்கேஸை தலைவர் திருப்பி அனுப்பிட்டாரே, பணத்து மேலே அவருக்கு ஆசையே இல்லையா?"

"உள்ளே இருந்த கட்டு பூராவும் பத்து ரூபாய் கட்டாம்!"

– பி. நிர்மலாதேவி

"அப்படியென்றால் இந்த இஸங்கள் தேவையில்லையா?"

"இஸங்கள் கூடாது என்பதல்ல வாதம். இஸங்களுக்காக இயக்கம் நடத்தக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறோம். இஸங்கள் என்பது இருக்கிற நிலைமையைப் புரிந்து கொள்வதற்கும் – அந்த நிலையில் நம்மைப் பொருத்திக் கொள்வதற்கும், அந்த நிலைமையை மாற்றுவதற்கான போராட்டக் கருவிகள். இஸங்களின் பயன்பாடும் இதுதான். உலகத்தில் இதுவரைக்கும் பெரிய சமூகப் புரட்சிகள் நடந்த நாடுகள் எல்லாமே இஸத்தைக் கருவியாகப் பயன்படுத்தி வென்றிருக்கிறார்களேயொழிய இஸத்தின் வெற்றிக்காகப் பாடுபடவில்லை. சோவியத் – ருஷ்யப் புரட்சி என்பதெல்லாம் லெனினியத்தின் வெற்றிக்காக நடத்தப்பட்ட புரட்சி கிடையாது. அது ருஷ்ய மக்கள் – மன்னராட்சியை எதிர்த்து விடுதலை பெறுவதற்காக நடத்தப்பட்டது. ஒவ்வொரு நாடும் அப்படித்தான்.

"அதே போல் இன்றைக்கும் நம் தமிழ்ச் சமூகம் என்பது ஓர் இரட்டை அடிமைத்தனத்திற்கு ஆளாகியிருக்கிறது. ஒன்று தில்லி அரசியல் வழி வெளிப்படும் அயலாதிக்கம். இன்னொன்று இந்தச் சமூகத்திற்குள் இருக்கும் சாதிய ஆதிக்கம். இந்த சாதிய ஆதிக்கத்திற்கு டெல்லி ஆதிக்கமும், டெல்லி ஆதிக்கத்திற்குச் சாதிய ஆதிக்கமும் ஒன்றுக்கொன்று துணையாகவும் இருக்கிறது. இந்த இரண்டையும் எதிர்த்துப் போராட வேண்டிய தேவை இன்றைக்கு உள்ளது. இந்த இரண்டையும் புரிந்து கொள்வதற்கும் இவற்றுக்கு எதிராகப் போராடுகிற நம்முடைய உத்திகளை வகுப்பதற்கும் நாங்கள் இங்கு 'தமிழ்த் தேசியம்', 'புரட்சிகர சமூக நீதி' என்று ஒரு முழக்கம் கொடுக்கிறோம். இதற்கு எது உதவியாக இருக்கிறதென்றால் மார்க்சியம், பெரியாரியம், மற்றும் அம்பேத்கரிடமிருந்து புறப்பட்ட செய்திகள், தமிழ்ச் சமூகத்தின் கடந்த கால போராட்ட வரலாறுகள்."

"தமிழ் - தமிழர் இயக்கத்தின் அரசியல் கண்ணோட்டம்தான் என்ன? நக்சல்பாரி இயக்கங்கள் போலவே இதுவும் தேர்தலைப் புறக்கணித்து பிரசாரத்தில் ஈடுபடுவதால் அதனோடு ஒன்றாகத்தானே இதையும் கருத வேண்டியுள்ளது?"

"தேர்தல்தான் அரசியல் என்கிற மாதிரி ஒரு மாயை இங்கு உருவாக்கப்பட்டுள்ளது. இங்கே ஒரு செய்தியை நினைவில் கொள்ள வேண்டும். இந்தியாவில் சுதந்தரம் பெற்றதாகச் சொல்லப்படுகிற அந்தத் தேதிக்குப் பிறகுதான் தேர்தல்கள் நடந்தனவா என்று பார்க்க வேண்டும்! வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்திலேயே தேர்தல்கள் நடந்தன. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் போல் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள், பல்வேறு ஆளுனர்கள் பெயரால் அடுத்தடுத்து வரவும் செய்தன. இந்த நூற்றாண்டுத் துவக்கத்திலிருந்தே இங்கு தேர்தல்கள் நடந்து

கொண்டுதான் இருக்கின்றன. இதில் எதை நாம் மறந்து விடக் கூடாது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் நடந்த அந்தத் தேர்தல்களில் (1921, 1925) காந்தியார் தலைமையிலான காங்கிரஸ் கட்சி கலந்து கொள்ளவில்லை. புறக்கணித்தது. மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ் போன்றவர்கள் தேர்தலில் கலந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டபோது, 'காங்கிரஸ் கட்சியின் பெயரில் கலந்து கொள்ளக் கூடாது' என்றே உத்தரவு வந்தது. அவர்களும் 'சுயராஜ்யக் கட்சி' என்ற பெயரால்தான் தேர்தலில் பங்கேற்க அனுமதிக்கப் பட்டனர்.

"இந்திய அரசியலில் தேர்தல் புறக்கணிப்பு என்ற வடிவத்தைக் கொண்டு வந்தவரே காந்தியார்தான். அவர் எந்தத் தேர்தலிலும் நின்றது கிடையாது. எந்தப் பார்லிமெண்ட், சட்டசபைக்கும் சென்றது கிடையாது. அதனால் காந்தி அரசியலில் இல்லை என்று ஆகிவிடுமா? தேர்தலில் போட்டியிடுவதும், கூட்டணி சேர்வதும்தான் அரசியல் என்று வைத்துக் கொண்டால் காந்தியார் அரசியலில் ஈடுபடவில்லை என அர்த்தமாகி விடாதா?

"அதுபோல்தான் நாங்களும் அரசியலில் இருக்கிறோம். அதுவும் முழுமையாக. அரசு என்பது எந்தச் சமூக சக்தியின் கையில் இருக்க வேண்டும்? எந்த வர்க்கத்தின் கையில் இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதே அரசியல். இன்றைக்கு இருக்கிற சமூக சக்திகளை – ஆளுகிற சக்திகளாக இருப்பவர்களை அந்த நிலையிலிருந்து தூக்கி எறிந்து விட்டு, புதிய சக்திகளை ஆளும் சக்திகளாக மாற்றுவதற்கான, உண்மையான அரசியலில் நாங்கள் மட்டும்தான் இருக்கிறோம். 'மக்களை வாக்களிக்காதீர்கள்' என்று கேட்கிறோம். பிரசாரமும் செய்கிறோம். அவர்களை அரசியல் விழிப்புணர்வு கொள்ளச் செய்கிறோம்."

"தாய்த் தமிழ்ப் பள்ளி ஸ்தாபகர் நீங்கள். அப்பள்ளிகளில் 'ஆன்மீகக் கல்வி' திட்டமிட்டு மறுக்கப்படுவதாகச் சொல்கிறார்களே?"

"ஒரு குழந்தையின் உருவாக்கத்தில் பள்ளிக்கு ஒரு பங்கு உண்டு. முழுப் பங்கும் பள்ளியைச் சார்ந்ததல்ல. இஸ்லாமிய மதத்தில் பிறந்த மாணவனை இந்துவாகவோ, இந்து மதத்தில் பிறந்த மாணவனை முஸ்லீமாகவோ ஒரு பள்ளி மாற்றி விட முடியாது. உலகம் முழுவதும் கிறிஸ்துவர்களுடைய பள்ளிகள் பலநூறு ஆண்டுகளாய் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எவ்வளவோ வசதி வாய்ப்புகளோடும், செல்வாக்கோடும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனாலேயே யாரும் கிறிஸ்துவனாக மாறி விடவில்லை. எனவே பள்ளிகள் என்ற பெயரில் ஏதோ இப்படி 'நாத்திகக் கூடங்கள்' நடத்துகிறோம் என்று யாரும் நினைக்க வேண்டியதில்லை. நாங்கள் குழந்தைகளுக்கு அறநெறியைக் கற்றுக் கொடுக்கிறோம். சக மனிதர்களை நேசிக்கக் கற்றுக் கொடுக்கிறோம். இயற்கையை, கோடானு கோடி உயிர்களை, துயரப்படுகிற மனிதனை நேசிக்கவும் பாதுகாக்கவும் சொல்லிக் கொடுக்கிறோம். உணர்வு பூர்வமாய் கற்றுத் தருகிறோம். 'பசியென்று வந்தவர்க்கு ஒரு பிடி சோறு தந்து



"ஏம்பா! வந்தே, சாப்பிட்டே; நகையெல்லாம் எடுத்துக்கிட்டே; அப்புறம் ஏன் என் கணவரையும் கடத்திக்கிட்டு போறே?"

"சமையல் நல்லா இருந்தது, அதனால தான்!"

– எம்.ஜி. இராமநாதன்

பாருப்பா. மனத்தில் இன்பம் உண்டாகும்' என்கிற உணர்வைச் சுரக்க வைக்கிறோம். இன்னொருபுறம் ஏன்? எதற்கு? எப்படி? எனக் கேள்வி எழுப்பும் அறிவியல் கண்ணோட்டத்தையும் கற்றுத் தருகிறோம். இவற்றைப் பயன்படுத்தி – அந்தக் குழந்தை உரிய வயதடையும் போது தனக்கு எது வேண்டும் என்பதைத் தானாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ளும். அதற்கு முன் நாங்கள் குழந்தைகளை மூளைச் சலவை செய்ய விரும்பவில்லை. கடவுள் உண்டு என்றோ இல்லை என்றோ; மதம் உயர்வு என்றோ தாழ்வு என்றோ எங்கள் பள்ளியில் கற்பிப்பதுமில்லை. கற்றுக் கொடுத்ததுமில்லை!"

பேட்டி, படம் : **கேயெஸ்வி**

4 பணம், பொய், குற்றம்!

கற்பகம் துவைக்கக் கிடந்த துணிமணிகளைப் பிரித்துக் கொண்டிருந்தாள். இந்த மாதிரியான அடுக்குமாடிக் கட்டடங்களில் வீட்டில் வாஷிங் மிஷின் வைத்துக் கொள்ள முடியாது. அனைவருக்கும் பொதுவாக ஒரு ரூமில் பல வாஷிங் மிஷின்களிருக்கும். காசு போட்டு உபயோகித்துக் கொள்ளலாம். எப்போதும் சத்யாதான் போய் வருவான்.

கற்பகம் துணிமணிகளைப் பிரிக்க ஆரம்பித்தாள். அனிச்சையாக அவள் கை சட்டைப் பைகளை, பேண்ட் பைகளை துழாவிக் கொண்டிருந்தது. அந்த சட்டையைப் பார்த்தாள். இதைத்தான் கடைசி நாள் போட்டிருந்தான். போன வருடம் கல்யாண நாளுக்கு வாங்கியது. இந்த வருட கல்யாண நாள் வரை ஜெயிலிலேயேயிருந்து விடுவானோவென்று பயம் வந்தது. சட்டைப் பையை துழாவிப் போடப் போனாள். கையில் ஒரு தாள் அகப்பட்டது. டாலராவென்று பார்த்தாள். வெறும் விசா பில். சட்டையை தூக்கிப் போட்டு விட்டு, பில்லைக் கசக்கப் போனவள் என்ன பில்லென்று பார்த்தாள். காருக்குப் பெட்ரோல் போட்ட பில். குப்பைத் தொட்டியில் போடப் போனவளின் மூளையில் சின்ன மின்னல். பில்லை மீண்டும் பார்த்தாள். இருபத்தியொரு டாலருக்குப் பெட்ரோல் போட்டிருந்தான். இரவு எட்டு மணி இருபது நிமிடத்திற்குப் பெட்ரோல் போட்டிருக்கிறான். இவன்தான் போட்டான் என்பதற்கு அத்தாட்சியாகக் கையெழுத்து போட்டிருக்கிறான். போட்டது போட்டபடி கிடக்க, டெலிபோனை நோக்கி ஓடினாள். வக்கீல் அலுவலகத்திற்குப் பேசினாள்.

"ஹலோ! நான் கற்பகம் பேசுகிறேன். லாயரிடம் பேச முடியுமா?"

எதிர் முனையில் லாயர் வந்தார்.

"உங்க கேஸைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். பெயில் பேப்பர்ஸ் தயார் பண்ணி விட்டேன். இன்று பெயில் கிடைத்து விடும்."

"அன்று அலிபி பத்தி பேசினிங்க இல்லியா! ஒரு ஆதாரமிருக்குது. அது பயன்படுமாவென்று தெரியவில்லை."

"என்ன ஆதாரம்?"

"சத்யா சாப்ட்வேர் திருடப்பட்ட நாளன்று, இரவு எட்டு மணி இருபது நிமிடத்தில் காருக்கு பெட்ரோல் போட்டிருக்கிறார்."

"அதுக்கு என்ன ஆதாரம்?"

"அவரே கையெழுத்துப் போட்ட விசா பில் இருக்குது."

"எந்த கேஸ் ஸ்டேஷன்ல?"

"என்னது?"

"எந்த கேஸ் ஸ்டேஷன்ல?"

இந்த ஊரில் பெட்ரோல் பங்க்களை கேஸ் ஸ்டேஷனென்று சொல்வது ஞாபகம் வந்தது.

"எங்க வீட்டிற்குப் பக்கத்திலிருக்கிற பெட்ரோ-கனடா கேஸ் ஸ்டேஷன்ல போட்டிருக்கிறார்."


"அங்கிருந்து அவரோட ஆபீஸிற்குப் போக எவ்வளவு நேரமாகும்?"

"ஹீயூரோன்டோரியோ ரோடு வழியாகத்தான் போக வேண்டும். ஏகப்பட்ட சிக்னல். குறைந்தது இருபது நிமிடமாகும்."

"அது போதும். பெயிலென்ன? கேசையே ஒன்றுமில்லாமல் செய்து விடலாம்!" என்றார் லாயர்.

சந்தோஷமாக ஃபோனை வைத்து விட்டுத் திரும்பிய போது, குழந்தை ஆப்பிள் ஜூஸைக் கொட்டி, அதன் மேல் இந்த பில்லை நனைத்து விளையாடிக் கொண்டிருந்தது. பதற்றத்தில் இவள் அவசரமாகப் பிடுங்க, பில் இரண்டாகக் கிழிந்தது.

"சனியனே! குட்டிப் பிசாசு" என்று கோபமாய் குழந்தையை உலுக்கினாள். இவள் எப்போதும் விளையாட்டுக் காட்ட இப்படி உலுக்குவாள். குழந்தை அப்படி நினைத்துக்



பங்கிலிருக்கும். அவர்களுக்குப் ஃபோன் பண்ணிப் பார்க்கலாம். அதற்குள் ஃபோன் அடித்தது. இந்த நேரத்தில் யார் பேசுவது? பெட்ரோ-கனடாவிற்குப் பேச வேண்டுமே! எரிச்சலுடன் எடுத்தாள். எதிர்முனையில் ஜோ.

''எப்படியிருக்கீங்க? நான் இன்று காலையில் ஸ்கொயர்-ஒன் போயிருந்தேன்.''

இது இப்ப ரொம்ப அவசியம்!

''பார்க்கிங் இடத்திலிருந்து வெளியே வரும்போது படு வேகமாக வந்தேன். அப்போது உட்பக்கமாக வந்து கொண்டிருந்த காரை ஏறக்குறைய இடிக்கப் போய் விட்டேன்.''

ஜோ அலுக்காமல் ஃபோனை வையேன்.

''நல்ல வேளை. எனக்கு நன்றாகத் தெரிந்தவன். எங்க ஆபீஸ் கிளீனர். அவனை இடிக்கப் போனது, ஒரு வகையில் நல்லதாகப் போச்சு. அவன் ரொம்பவும் உபயோகமான ஒரு தகவல் சொன்னான்.''

''என்னது?''

'''என்ன உங்க ஆபீஸ்ல எல்லோரும் இந்த வேகத்தில தான் ஓட்டுவீங்களா?' என்று கேட்டான். நான் பதிலுக்கு 'நீ இரவு பத்து மணிக்கு ஆபீஸைத் துடைக்க வரும்போது யாரிருக்கிறார்கள்?' என்று கேட்டேன். 'மூன்று நாள் முன்பு துடைப்பதற்காக ஒன்பது மணிக்கே வந்தேன். அப்பவும் இப்படித்தான் ஒரு டயோட்டா காம்ரி கார் என்னை ஏறக்குறைய இடிப்பது போல வந்து, பறந்து விட்டது!' என்று சொன்னான். எனக்கு உடனே பொறி தட்டியது. அது சாப்ட்வேர் திருடப்பட்ட நாள். சத்யாவிடமிருப்பது ஹோண்டா அக்கார்ட். எனவே அது சத்யாயில்லை. எங்க ஆபீஸில் டயோட்டா

கொண்டு, இவளைப் பார்த்துச் சிரித்தது.

கற்பகத்திற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தன் விதியை நொந்து கொண்டாள். ஆனால் தளர்ந்து விடவில்லை. இப்போது என்ன செய்ய வேண்டும் என்று யோசிக்க ஆரம்பித்தாள். எப்படியும் சத்யா கையெழுத்துப் போட்ட ஒரிஜினல் பில் பெட்ரோ-கனடா பெட்ரோல்

பிருதிவிராஜ்

காம்ரி வைத்திருப்பது ஒரே ஆள்தான். அது எட்வர்ட்."

"யாரது?"

"அவனும் எங்களை மாதிரி இந்த புராஜெக்ட்ல வேலை பார்க்கிறவன். எனக்கு ஆரம்பம் முதலே அவன் மேல சந்தேகம். ஆனால் எந்த ஆதாரமுமில்லாமல் எப்படிப் பேசுவது என்று அமைதியாயிருந்தேன்."

கற்பகத்திற்கு மீண்டும் மனத்திற்குள் சந்தோஷம் மலர்ந்தது. ஜோவிடம் பெட்ரோல் பங்க் பில் விவரங்களைச் சொன்னாள்.

"வெரிகுட். அப்ப சத்யாயில்லையென்பதைத் தெளிவாக நிருபித்து விடலாம்."

"நான் அந்த பில்லை எடுத்துக் கொண்டு நேராக வந்து உங்க பாஸ் எரிக்கைப் பார்க்கப் போகிறேன். அவர் கேஸை வாபஸ் வாங்கி விட்டால் எல்லாம் முடிந்து விடுமே! நீங்க இப்போது சொன்ன விவரங்களை அவரிடம் சொல்லலாமில்லையா?"

"தாராளமாக! நீங்களே வரப் போகிறீர்களா?"

"எனக்கென்ன பயம் எரிக்கிடம்? உங்களுக்குத் தானே பாஸ்? எனக்கென்ன?" என்றாள் கற்பகம். ஜோ அசந்து போய் ஃபோனை வைத்தான்.

பெட்ரோ-கனடா பெட்ரோல் பங்கிற்கு ஃபோன் பண்ணினாள். விஷயத்தைச் சொன்னாள். "கண்டிப்பாக ஒரிஜினலைத் தருகிறோம். இந்த மாதிரியான விஷயத்துல கூட உதவ மாட்டோமா?" என்றார்கள்.

உடனடியாக குழந்தையைக் கிளப்பினாள். குழந்தையை கார் சீட்டில் வைத்தாள். அதைக் கூடை போல் கையில் தூக்கிக் கொண்டாள். டாக்சி எடுத்துக் கொண்டு முதலில் பெட்ரோ-கனடா போனாள். அங்கே சத்யா கையெழுத்துப் போட்ட ஒரிஜினல் பில் கிடைத்தது. உடனே பத்து ஃபோட்டோ காப்பி எடுத்து வைத்துக் கொண்டாள். நேராக சத்யா ஆபீஸிற்குப் போனாள். சத்யா வேலை பார்த்துக் கொண்டிருந்த போது போனதேயில்லை. ஆனால் எல்லோரையும் தெரியும். எப்போதும் ஹோட்டல்களில் நடக்கும் பார்ட்டிகளில் பார்த்திருக்கிறாள். செகரட்டரி இவளைப் பார்த்தவுடன் சிநேகமாய்ச் சிரித்தாள். கையோடு தூக்கிக் கொண்டு வந்திருந்த கார் சீட்டிலிருந்த குழந்தையைப் பார்த்து, "ஹலோ. ஸ்வீட்" என்றாள். எரிக்கிடம் இன்டர்காமில் பேசிவிட்டு, கற்பகத்தை எரிக் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

சத்யாவின் பாஸ் எரிக்கின் அறை விசாலமாயிருந்தது. பெரிய டேபிள், முன்னால் இரண்டு சோபாக்கள். எரிக் வசதியான நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். டேபிளில் செல் ஃபோனை வைத்திருந்தான். வலது பக்கம் கம்ப்யூட்டரிருந்தது. இவளைப் பார்த்துச் சிரிக்கவில்லை; கடுமையாகவுமில்லை.

"உட்காருங்க" என்றான். கற்பகம் தயக்கமில்லாமல் உட்கார்ந்தாள்.

"சத்யா விஷயம் போலீஸிடமிருக்கிறது. எதுவும் பேச வேண்டுமெனில், அவர்களிடம் பேசுங்க!"

"அது சரி! அது சம்பந்தமாக ஒரு ஆதாரம் கிடைத்துள்ளது. அதை உங்களிடம் காட்ட வந்தேன்."

"நான் எதையும் பார்க்க விரும்பவில்லை. என் கையில் எதுவுமில்லை. போலீஸிடம் பேசுங்க" என்றான் எரிக். பதிலைக் கேட்கவும், கற்பகத்திற்கு பயங்கரக் கோபம் வந்து விட்டது.

"கோர்ட் மூலம் இந்தக் கேசை உடைத்து விடுவேன். ஆனால் அதற்கு நாளாகும். கம்ப்ளெய்ண்ட் கொடுத்தது நீங்கதானே! அதனால் தான் உங்களை நேரில் பார்க்க வந்தேன். நான் இப்போது காட்டுகிற முக்கியமான ஆதாரத்தைக் கூட நீங்கள் பார்க்க மறுத்தால், கோர்ட்டுக்குப் போகிறேன். ஆனால் என் னுடைய மன உளைச்சலுக்குக் காரணமான தற்காக உங்க மேல தனியாக கேஸ் போடுவேன்" என்று கற்பகம் பொரிந்து தள்ளினாள்.

"என்ன சொல்றீங்க?"

"இந்த பில்லைப் பாருங்க. சாப்ட்வேர் பேக்-அப் எடுக்கப்பட்ட நேரத்தில், அவர் காருக்கு பெட்ரோல் போட்டு கொண்டிருந்திருக்கிறார்."

"ஆனால் ஓவர் டைம் ஷீட்ல..."

"அதில் பொய்யெழுதப் போய்த்தானே பிரச்னையே! அது மட்டுமல்ல. இன்னொரு விஷயமும் கேளுங்க!" என்று ஜோ சொன்ன டயோட்டா கார் விவரத்தைச் சொன்னாள். சத்யாவிடமிருப்பது ஹோண்டா - அக்கார்ட் என்பதையும் சொன்னாள். உண்மைக் குற்றவாளி தப்பிக் கொண்டிருக்கிறான் என்றும் சொன்னாள்.

"நான் கோர்ட் மூலம் சத்யாவை வெளியே கொண்டு வந்து விடுவேன். ஆனால் நீங்கள் இப்போது உடனடியாகத் தேடாவிடில், உண்மைக் குற்றவாளி தப்பி விடுவான்!" என்றாள் கற்பகம்.

எரிக் யோசிக்க ஆரம்பித்தான். இன்டர்காமில் ஜோவைக் கூப்பிட்டான். ஜோ உடனே வந்தான். கற்பகத்தைப் பார்த்து சிரித்தான்.

"இன்று கிளினர்ஸைப் பார்த்தாயா?"

"ஓ! இவங்க சொல்லி விட்டார்களா? அது உண்மைதான். அவன் சொல்லுவதை வைத்துப் பார்த்தால், டயோட்டா கார் வேகமாகப் போயிருக்கிறது. நம்ம ஆபீஸில் எட்வர்ட் ஒருவனிடம்தான் டயோட்டா காருள்ளது. அது மட்டுமல்ல. உனக்கு எட்வர்டைப் பற்றித் தெரியும். எல்லா சனி, ஞாயிறும் வின்சர் காசினோவிற்குப் போய் விடுவான். சூதாடியே அவ்வளவு பணத்தையும் தொலைப்பான்."

"ஆமாம். அவனுக்கு ஏகப்பட்ட கடனிருக்கிறது. ஆனால் செக்யூரிட்டி சிஸ்டத்தில் சத்யாவோட நம்பர்தானே வந்தது."

"இதுதான் சத்யாவோட நம்பர்?" என்று சொல்லியபடியே, ஒரு துண்டுத் தாளை எடுத்துப் போட்டான். அதில் சத்யாவின் நம்பரிருந்தது.

"இதை மறந்துவிடக் கூடாதென்று பெரிதாக எழுதி அவனுடைய கம்ப்யூட்டருக்கு மேல மாட்டி வச்சிருக்கான். சத்யா சரியான முட்டாள்" என்று சொல்லிவிட்டு கற்பகம் பக்கம் திரும்பினான்.

"சாரி! இந்தியப் பெண்களுக்கு தங்கள் கணவரை யாரும் குறைவாகப் பேசினால் பிடிக்காது என்பது எனக்குத் தெரியும்."

"அப்படியா?" என்று எரிக் கேட்டான்.

"இந்தியப் பெண்களிடம் இன்னும் நிறைய நல்ல பண்புகளுண்டு. அதை இன்னொரு சமயம் சொல்லுகிறேன். இப்ப உடனடியாக போலீஸைக் கூப்பிட்டு, சத்யா மேலுள்ள புகாரை வாபஸ் வாங்கிவிட்டு, எட்வர்ட் மேல புகார்கொடு!" என்றான் ஜோ.

"எட்வர்ட் மேல் என்ன ஆதாரத்தில் புகார் கொடுப்பது?"

"நமக்குத் தெரிந்த விவரங்களை வைத்து புகார் கொடுக்கலாம். எட்வர்ட் மூன்று நாளாக எங்கும் போகவில்லை. ஒன்று சாப்ட்வேர் காப்பி எடுத்த டேப் அவன் வீட்டிலிருக்க வேண்டும். அல்லது கூரியர் சர்வீஸில் புளோரிடாவிற்கு அனுப்பியிருக்க வேண்டும். போலீஸ் வந்தால் உடனடியாகக் கண்டு பிடித்து விட முடியும். நீயும், நானும் அதைச் செய்ய முடியாது..." என்று ஜோ தெளிவாகப் பேசினான். கற்பகம் ஜோவை நன்றியுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எரிக் உடனடியாக போலீஸிற்குப் பேசினான். போலீஸ் வந்தவுடன், எரிக் எல்லா விவரமும் சொன்னான். எட்வர்ட் மேல் சந்தேகம் என்பதையும், அவன் கூரியர் சர்வீஸ் மூலம்தான் சாப்ட்வேர் டேப்பை அனுப்பியிருக்க வேண்டும் என்பதையும் சொன்னான். உடனே போலீஸார் எல்லா கூரியர் சர்வீஸிற்கும் பேசினார்கள். கடந்த மூன்று நாட்களாக புளோரிடாவிற்கு தபால் அனுப்பியவர்களின் பட்டியலை உடனடியாக ஃபேக்ஸில் அனுப்பச் சொன்னார்கள். சிறிது நேரம் மௌனம் நிலவியது. நிமிடங்கள் கரைந்தன. கற்பகம் மனதிற்குள் கந்தசஷ்டிக் கவசம் சொல்லிக் கொண்டிருந்தாள்.



டைரக்டர் : 'அரைத் திருப்தி'னு அந்தப் பத்திரிகை நம் படத்துக்கு விமர்சனம் எழுதியிருக்கே! என்ன விஷயம்?

பட அதிபர் : முழுப்பக்க விளம்பரம் கேட்டாங்க... அரைப் பக்க விளம்பரம் தான் கொடுத்தேன்!

– உ. ராஜாஜி

சிறிது நேரத்தில் எல்லாப் பட்டியலும் வந்தது. அதிர்ஷ்டவசமாக ஒரு கூரியர் அனுப்பிய பட்டியலில் எட்வர்ட் பெயரிருந்தது.

அடுத்த பத்தாவது நிமிடம் எட்வர்டை அள்ளிக் கொண்டு போனார்கள்.

"பாவம். எட்வர்ட்! இதை எதிர்பார்க்கவேயில்லை" என்றான் செகரட்டரி.

"எட்வர்டிற்கு கைதானது பற்றிக் கூட கவலையில்லை. இந்த சனி, ஞாயிறு காஸினோவில் சூதாடப் போக முடியாதென்றுதான் வருத்தம்!" என்று ஜோ சொல்ல ஆபீஸே சிரித்தது.

(முற்றும்)



பொன்னியின் செல்வன்



கல்கி கலெக்ஷன்

முப்பதாம் அத்தியாயம்

இரு சிறைகள்

வானதியை விட்டுப் பிரிந்ததும் அரசிளங்குமரி நேரே பழையாறைச் சிறைச்சாலைக்குச் சென்றாள். காவலர்களை வெளியிலேயே நிறுத்தி விட்டு தான் மட்டும் வந்தியத்தேவன் அடைபட்டிருந்த இடத்துக்குப் போனாள். அவன் தனி அறையில் பூட்டப்பட்டிருந்தான். சிறையின் உச்சி மோட்டைப் பார்த்துக்கொண்டு உற்சாகமாகத் தெம்மாங்கு பாடிக் கொண்டிருந்தான்.

"வானச்
சுடர்கள்
எல்லாம்
மானே உந்தனைக்கண்டு
மேனி சிலிர்க்குதடி –
மெய்மறந்து நிற்குதடி!"

குந்தவை அருகில் வந்து நின்று தொண்டையைக் கனைத்த பிறகுதான் அவளைத் திரும்பிப் பார்த்தான். உடனே, எழுந்து நின்று, "வருக! வருக! இளவரசியே! வருக! ஆசனத்தில் அமருக!" என்று உபசரித்தான்.

அமரர் கல்கி

"எந்த ஆசனத்தில் அமரட்டும்?" என்று இளவரசி கேட்டாள்.

"இது தங்கள் அரண்மனை. இங்கு நடப்பது தங்கள் ஆட்சி; தங்கள் ஆணை. இங்குள்ள சிம்மாசனம் எதில் வேண்டுமானாலும் தங்கள் விருப்பம் போல் அமரலாம்!" என்றான் வல்லவரையன்.

"ஐயா! உமது முன்னோர்கள் ஆணை செலுத்தி மூவுலகையும் ஆண்டபோது வல்லத்து அரண்மனை இவ்விதந்தான் இருந்தது போலும். எங்கள் நகரில் இந்த இடத்தைச் சிறைச்சாலை என்று சொல்லுவார்கள்" என்றாள் இளவரசி.

"அம்மணி! எங்கள் ஊரில் இப்போது அரண்மனையும் இல்லை; சிறைச்சாலையும் இல்லை. பல தேசத்து அரசர்களுமாகச் சேர்ந்து அரண்மனை, சிறைச்சாலை எல்லாவற்றையும் இடித்துத் தரை மட்டமாக்கி விட்டார்கள். நூறு வருஷங்களுக்கு முன்பு...!"

"ஏன்? ஏன்? வல்லத்து அரண்மனை மீதும் சிறையின் பேரிலும் அவர்களுக்கு என்ன அவ்வளவு கோபம்?"

"எல்லாம் ஒரு கவிஞரால் வந்த வினை!"


"ஆ! அது எப்படி?"

"என் குலத்து முன்னோர்கள் தென்னாட்டின் பேரரசர்களாக அரசு புரிந்த நாளில், காலா காலத்தில் கப்பம் செலுத்தாத அரசர்களை அதிகாரிகள் சிறைப் பிடித்துக் கொண்டு வருவார்கள். அரண்மனை முற்றத்தின் இரு புறத்திலும் அந்த அரசர்களை அடைத்து வைக்கும் சிறைகள் இருந்தன. சக்கரவர்த்தி கருணை புரிந்து எப்போது தங்களை வரும்படி சொல்லி அனுப்புவார், மன்னிப்புக் கேட்டுக் கொண்டு ஊருக்குத் திரும்பலாம் என்று அச் சிற்றரசர்கள் காத்திருப்பார்கள். பேரரசரைக் காணும் பேறு அவர்களுக்கு எளிதிலே கிட்டாது. அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே கவிஞர்களும் புலவர்களும் சக்கரவர்த்தியின் ஆஸ்தான மண்டபத்துக்குப் போவார்கள். சக்கரவர்த்தி முன்னிலையில் பாடல்களைச் சொல்லிப் பரிசுகள் பெற்றுக் கொண்டு திரும்பிச் செல்லுவார்கள். அப்போது சிறையில் காத்திருக்கும் சிற்றரசர்கள், 'அடாடா! இந்தப் புலவர்களுக்கு வந்த யோகத்தைப் பார்! இவர்கள் கொண்டு போகும் பரிசுகளைப் பார்!' என்று சொல்லி வியப்பார்கள். 'ஓகோ! இந்தப் புலவன் கொண்டு போவது என் வெண் கொற்றக் குடையல்லவா!' என்பான் ஓர் அரசன். 'அடடா! இந்தக் கவிஞன் என் சிவிகையில் அமர்ந்து போகிறானே!' என்பான் இன்னொரு வேந்தன். "ஐயோ! என் பட்டத்து யானையை இவன் கொண்டு போகிறானே!' என்பான் இன்னொரு மன்னன். 'இது என் குதிரை! இந்தக் கவிராயனை என் குதிரை கட்டாயம் ஒருநாள் கீழே தள்ளி விடும்!' என்று சொல்லி மகிழ்வான் வேறொரு சிற்றரசன். எல்லாப் புலவர்களுக்கும் கடைசியில் இன்னொரு புலவர் வந்தார். அவர் சிறையிலிருந்த சிற்றரசர்கள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டார். கேட்டுக் கொண்டே சக்கரவர்த்தியின் சந்நிதானத்துக்குச் சென்று இந்தப் பாடலைச் சொன்னார்.

'என் கவிகை என் சிவிகை
என் கவசம் என் துவசம்
என்கரியீது என்பரியீது
என்பரால் – பன்கவள
மாவேந்தன் வாணன்
வரிசைப் பரிசு பெற்ற
பாவேந்தரை வேந்தர்
பார்த்து!'

இவ்விதம் அந்தப் புலவர் பாடிய பாடல் தமிழ்நாடெங்கும் அப்பாலும் பரவி விட்டது. மக்கள் அடிக்கடி பாடியும் கேட்டும் மகிழ்ந்தார்கள். இதனால் எங்கள் இராஜ்யத்துக்கே ஆபத்து வந்துவிட்டது. எல்லா அரசர்களுமாகச் சேர்ந்து வந்து படையெடுத்து எங்கள் ஊரையும், அரண்மனையையும், சிறைச்சாலையையும் எல்லாவற்றையும் அழித்து விட்டார்கள்..."

"எல்லாவற்றையும் அழித்தாலும்



அந்தக் கவியின் பாடலை அழிக்க முடியவில்லையல்லவா? உங்கள் குலம் பாக்கியம் செய்த குலந்தான்! அதன் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்!"

"வாணர் குலத்தின் வீரப் புகழைக் கெடுக்க நான் ஒருவன் இப்போது ஏற்பட்டிருக்கிறேன்..."

"ஆகா! அந்த உண்மையை நீரே ஒப்புக் கொள்கிறீர் அன்றோ?"

"ஒப்புக் கொள்ளாமல் வேறு என்ன செய்வது? அடிமைத் தனங்களுக்குள்ளே பெண்ணடிமை மிகப் பொல்லாதது. ஒரு பெண்மணியின் வார்த்தையைக் கேட்கப் போய், என் முன்னோர்களின் குலப் புகழுக்கு நான் மாசு தேடிக் கொள்ள நேர்ந்தது. ஓடி ஒளிந்து மறைந்து திரிந்து உயிர் வாழ நேர்ந்தது. என் கோபத்தையெல்லாம் அந்த வைத்தியர் மகனைக் கொன்று தீர்த்துக் கொள்ளலாம் என்று பார்த்தேன். அதற்கும் ஒரு தடை வந்து குறுக்கிட்டு விட்டது..."

"ஐயா! வைத்தியர் மகன் பினாகபாணி மீது உமக்கு ஏன் அவ்வளவு கோபம்?"

"கோபத்துக்கு வேண்டிய காரணம் இருக்கிறது. நல்ல ஆளைப் பிடித்து என்னோடு கோடிக்கரைக்கு அனுப்பினீர்கள். அவன் என் காரியத்தையே கெடுத்து விட இருந்தான். அது போகிற தென்றால், சற்று முன் இந்த ஊர் வீதியில் அவன் என்னைப் பகைவர்களின் ஒற்றன் என்று சொல்லிப் பழுவேட்டரையர்களிடம் பிடித்துக் கொடுக்கப் பார்த்தான். அங்கிருந்து தப்பி வந்தால், அரண்மனை முற்றத்தில் ஆயிரம் பதினாயிரம் பேருக்கு எதிரில் என்னைப் 'பழுவூர் ராணியின் ஒற்றன்' என்று அவன் குற்றம் சாட்டினான்.

"வல்லத்து இளவரசரே! அது உண்மையல்லவா?"

"எது உண்மை அல்லவா?"

"நீர் பழுவூர் ராணி நந்தினி தேவியின் ஒற்றன் என்று பினாகபாணி குற்றம் சாட்டியதைக் கேட்கிறேன். உண்மையைச் சொல்வீரா?"

"நான் உண்மை சொல்லுவதில்லையென்று விரதம் வைத்துக் கொண்டிருக்கிறேன், தேவி!"

"ஆகா! அது என்ன விரதம்? அரிச்சந்திர நதிக்கரையில் பழுவூர் ராணியைப் பார்த்ததிலிருந்து அப்படிப்பட்ட விரதம் எடுத்துக் கொண்டீரா!"

"இல்லை, இல்லை! அதற்கு முன்னாலேயே அந்த முடிவுக்கு வந்து விட்டேன். நான் உண்மைக்கு மாறானதைச் சொல்லிக் கொண்டிருந்த வரையில் எல்லாரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் வாய் தவறி 'இளவரசர் நாகைப்பட்டினத்தில் பத்திரமாயிருக்கிறார்' என்று சொன்னேன். ஒருவரும் நம்பவில்லை. கேட்டவர்கள் எல்லாரும் சிரித்தார்கள்..."

"எவ்வளவு தவறான காரியத்தைச் செய்தீர்? உம்முடைய வார்த்தையை அவர்கள் நம்பாததே நல்லதாய்ப் போயிற்று; நம்பியிருந்தால் எவ்வளவு பிசகாகப் போயிருக்கும்?"

"இனிமேல் எப்போதும் இத்தகைய தவறுகள் நேரவே நேராது..."

"உமது வாக்குறுதிக்கு மிக்க நன்றி."

"என்ன வாக்குறுதி கொடுத்தேன்."

"இனிமேல் தவறு எதுவும் நேராமல் நான் இட்ட காரியத்தைச் செய்வதாக..."

"கடவுளே! அப்படி நான் ஒன்றும் வாக்குறுதி கொடுக்கவில்லை. போதும்! போதும்! என்னை இந்தச் சிறையிலிருந்து விடுதலை செய்து விடுங்கள்! என் வழியே போகிறேன்..."

"அப்படியானால், உமக்கு விடுதலை கிடையாது. இந்தச் சிறையிலேயே நீர் இருந்து வர வேண்டியதுதான்" என்றாள்.

வந்தியத்தேவன் கலகலவென்று சிரித்தான்.

"நீர் எதற்காகச் சிரிக்கிறீர்? நான் சொல்லுவது வேடிக்கை என்றா?"

"இல்லை, தேவி! இந்தச் சிறை

யிலிருந்து தாங்கள் என்னை விடுதலை செய்யாவிட்டால், நான் இதிலிருந்து தப்பிச் செல்ல முடியாதா?"

இளவரசி ஒருகணம் வந்தியத்தேவனைத் தன் மலர்ந்த கண்களினால் உற்றுப் பார்த்துவிட்டு, "ஐயா! நீர் கெட்டிக்காரர். அதிலும் சிறையிலிருந்து தப்பிச் செல்வதில் மிகக் கெட்டிக்காரர். பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையிலிருந்து தப்பிச் சென்றவருக்கு இது ஒரு பிரமாதமா?" என்றாள்.

"அப்படியானால், நீங்களே கதவைத் திறந்து என்னை விடுதலை செய்யுங்கள்."

"நானே இந்தச் சிறையைத் திறந்துவிடலாம். அல்லது நீரும் தப்பிச் செல்லலாம். ஆனால் இன்னொரு சிறைச்சாலையிலிருந்து நீர் தப்ப முடியாது..."

"சின்னப் பழுவேட்டரையரின் பாதாளச் சிறையைச் சொல்கிறீர்களா?"

"இல்லை; அதுவும் உமக்கு இலட்சியமில்லை. பாதாளச் சிறை வாசலில் காத்திருக்கும் புலிகளையும் வென்றுவிட்டுத் தப்பிச் சென்று விடுவீர்..."

"பின்னே, எந்தச் சிறையைச் சொல்லுகிறீர்கள்?"

"என்னுடைய இதயமாகிற சிறைச்சாலையைத்தான் சொல்கிறேன்."

"தேவி! நான் வீடு வாசல் அற்ற அனாதை. என்னுடைய குலப் பெருமையெல்லாம் பழைய கதை; கவிஞர் கற்பனை, தாங்களோ, மூன்று உலகையும் ஒரு குடை நிழலில் ஆளும் சக்கரவர்த்தியின் செல்வக்குமாரி..."

"யார் கண்டது? இந்தச் சோழ குலத்தின் பெருமையும் ஒருநாள் பழைய கதை ஆகலாம்."

"ஆயினும், இன்றைக்குத் தாங்கள் இந்நாட்டில் இணையற்ற அதிகாரம் படைத்தவர். சக்கரவர்த்தியும் பழுவேட்டரையர்களும் முதன்மந்திரியும் தங்கள் விருப்பத்துக்கு மாறாக நடக்கத் துணிய மாட்டார்கள்..."

"இதெல்லாம் உண்மையாயிருந்தால், நீர் மட்டும் எவ்விதம் என் அதிகாரத்தை மீற முடியும்?"

"அரசாங்க அதிகாரம் வேறு விஷயம். தாங்கள் நெஞ்சின் அதிகாரத்தையல்லவா குறிப்பிட்டீர்கள்?"

"அதிலேதான் என்ன தவறு?"

"நம் இருவருக்கும் அந்தஸ்திலே உள்ள வித்தியாசம்தான் தவறு..."

"'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்ற முதுமொழியைக் கேட்டதில்லையா?"

"அந்த முதுமொழி பொன்னியின் செல்வருக்கும் படகுக்காரி பூங்குழலிக்கும் கூடப் பொருந்துமல்லவோ?"

"ஆம்; பொருந்தும்தான்! என் தம்பி உலகமாளப் பிறந்தவன் என்று நினைத்தேன். அதனால் அவர்களுடைய நெஞ்சுக்கும் தாளிட விரும்பினேன்..."

"நானும் இளவரசரைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டு விட்டுத்தான் ஆவலுடன் வந்தேன். அவரோடு எட்டுத் திசைகளுக்கும் சென்று போர்க்களங்களில் வீரச் செயல்கள் புரிந்து பெயரும் புகழும் அடைய விரும்பினேன்..."

"இப்போது அந்த ஆசை போய் விட்டதல்லவா?"

"ஆம்; பொன்னியின் செல்வர் அரசுரிமையைக் காட்டிலும் அமைதியான வாழ்க்கையை அதிகம் விரும்புகிறார். போர்க்களத்தில் வீர வாளேந்தி வீசுவதைக் காட்டிலும் ஆலயத் திருப்பணியில் கல்லுளி கொண்டு வேலை செய்வதற்கு அதிகம் ஆசைப்படுகிறார்..."

"மதுராந்தகனோ இராஜ்யம் ஆளுவதில் தீவிர நோக்கம் கொண்டிருக்கிறான். ஆடு புலி ஆக மாறுகிறது; புலி ஆடாகிறது. ஆலவாய் இறைவன் நரியைப் பரியாக்கிப் பரியை நரியாக்கியதாகச் சிவபக்தரின் வரலாறு கூறு

கிறது. அதுபோல்...''

''தேவி! தங்களுடைய கருணையினால் நானும் ஒரு நரியானேன். ஒளிந்தும் மறைந்தும் தந்திர மந்திரம் செய்தும் இல்லாதது பொல்லாததைச் சொல்லியும் பகைவர்களிடமிருந்து தப்பி வர வேண்டியதாயிற்று. அரசிளங் குமரி! இந்த வேலை இனிச் செய்ய என்னால் முடியாது! விடை கொடுங்கள்...''

''ஐயா! என் பிராண சிநேகிதி என்று எண்ணியிருந்த வானதி என்னைக் கைவிட்டுப் போகப் பார்க்கிறாள். நீருமா என்னைக் கைவிட்டுப் போய்விட எண்ணுகிறீர்?''

''தேவி! கொடும்பாளூர் இளவரசிக்கும் தங்களுக்கும் உள்ள விவகாரத்தைப் பற்றி நான் அறியேன். ஆனால் நான் எப்படித் தங்களைக் கைவிட முடியும்? இராஜாதி ராஜாக்கள் தங்களுடைய மணிப் பொற்கரத்தைக் கைப்பற்றத் தவம் கிடக்கிறார்கள். நானோ குற்றேவல் செய்ய வந்தவன்...''

இளையபிராட்டி அப்போது தன்னுடைய திருக்கரத்தை நீட்டினாள். இது கனவா, நனவா என்ற தயக்கத்துடன் வந்தியத்தேவன் அந்த மலர்க்கரத்தைத் தன் இரு கைகளாலும் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான். அவனுடைய உள்ளமும் உடம்பும் பரவசமடைந்தன.

''வாணர் குலத்து வீரரே! கற்பென்னும் திண்மையைக் குலதனமாகப் பெற்ற பழந்தமிழ் மன்னர் வம்சத்தில் வந்தவள் நான். எங்கள் குலத்து மாதரில் சிலர் கணவனுடன் உடன்கட்டை ஏறியதுண்டு. பதியின் உடலை எரித்த தீயைக் குளிர்ந்த நிலவென்று அவர்கள் கருதி அக்கினியில் குதித்தார்கள்!''

''கேள்விப்பட்டிருக்கிறேன்; தேவி!''

''உமது கரத்தைப் பற்றிய இந்த என் கரம் இன்னொரு ஆடவனுடைய கையை ஒருநாளும் பற்றாது...''

வல்லவரையன் சொல்லிழந்து செயலிழந்து குந்தவையின் கண்ணீர் ததும்பிய கண்களைப் பார்த்த வண்ணம் மதியும் இழந்து நின்றான்.

''ஐயா! உம்முடைய பதற்றமான காரியங்களினால் உமது உயிருக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்தால் என்னுடைய கதி என்ன ஆகும் என்பதைச் சிறிது எண்ணிப் பாரும்.''

''தேவி! தங்களுடைய இதய சிங்காதனத்தில் இடம் பெற்ற இந்தப் பாக்கியசாலி உயிருக்குப் பயந்த கோழையாயிருக்க முடியுமா?''

''கோழைத்தனம் வேறு, ஜாக்கிரதை வேறு, ஐயா! முதன்மந்திரி அநிருத்தருக்குக் கூடத் தங்கள் வீரத்தைப் பற்றி ஐயம் கிடையாது.''

''பின்னர், எதைப் பற்றி அவர் ஐயப்படுகிறார்...''

''நீர் பழுவூர் ராணியின் ஒற்றனாயிருக்கலாம் என்று ஐயுறுகிறார்...''

''அப்படியானால், வைத்தியர் மகன் பினாகபாணிக்கு அளித்த மறுமொழியை அவருக்கும் அளிக்கச் சித்தமாயிருக்கிறேன். சிறைக் கதவைத் திறவுங்கள்; அந்த மனிதர் எங்கே இருக்கிறார் என்று சொல்லுங்கள்.''

''வைத்தியர் மகனாவது மற்போரில் சிறிது பழக்கமுள்ளவன்; அநிருத்தர் சொற்போர் அறிவாரேயன்றி மற்போர் அறியார். அறிவின் கூர்மையே அவருடைய ஆயுதம்; வாளின் கூர்மையை அவர் என்றும் துணை கொண்டதில்லை...''

''அப்படியானால், என்னுடைய வாளின் கூர்மையைத்தான் முதன் முதலில் பரீட்சை பார்க்கட்டுமே?''

''ஐயா! இந்த நாட்டில் சக்கரவர்த்திக்கு அடுத்த மரியாதைக்குரியவர் முதன் மந்திரி அநிருத்தர். அவருடன் பகிரங்கமாக முரண்படப் பழுவேட்டரை

யர்களும் தயங்குகிறார்கள்..."

"பழுவேட்டரையர்கள் குற்றம் உள்ள நெஞ்சினர். அவர்கள் பயப்படுவார்கள். நான் ஏன் பயப்பட வேண்டும்?"

"இளம் பிராயத்திலிருந்து என் தந்தையின் உற்ற தோழர் அவர். முதன்மந்திரிக்குச் செய்த அவமரியாதை சக்கரவர்த்திக்கும் எனக்கும் செய்த அவமரியாதையாகும்."

"அப்படியானால், அவருடைய நம்பிக்கையை நான் பெறுவதற்கு வழியையேனும் சொல்லுங்கள்."

"முதன்மந்திரி காஞ்சிக்கு மிகவும் நம்பிக்கையான ஒருவரை அனுப்ப விரும்புகிறார். உம்மை அனுப்பலாம். நம்பி அனுப்பலாம் என்று நான் அவருக்கு உறுதி அளித்திருக்கிறேன்."

"தேவி! காஞ்சிக்கு என்னை அனுப்பாதீர்கள்! என் மனத்திற்குள் ஏதோ ஒரு குரல் 'காஞ்சிக்குப் போகாதே!' என்று சொல்லிக்கொண்டிருக்கிறது."

"அது ஒருவேளை பழுவூர் இளைய ராணியின் குரலாயிருக்கலாம் அல்லவா?"

"இல்லவே இல்லை! தங்களுடைய சொல்லுக்கு மாறாக அந்த விஷ நாகத்தின் குரலை நான் கேட்பேனா?"

"ஐயா! பழுவூர் இளையராணியைப் பற்றி இனி எந்தச் சமயத்திலும் அப்படியெல்லாம் பேசாதீர்கள்!"

"இது என்ன? ஏன் இந்த திடீர் மாறுதல்!"

"ஆம்; என் மனம் அவள் விஷயத்தில் அடியோடு மாறி விட்டது. நீர் இலங்கையிலிருந்து கொண்டு வந்த செய்தியைக் கேட்ட பிறகு."

"அப்படியானால் இனி நான் பழுவூர் இளையராணியிடமும் பயபக்தியுடன் நடந்து கொள்ள வேண்டியதுதானோ!"

"ஆம்!"

"அவள் பக்தியுடன் பூஜை செய்யும் கொலை வாளை என்னிடம் கொடுத்து 'இன்னாருடைய தலையைக் கொண்டு வா!' என்று சொன்னாலும் கொண்டு வர வேண்டியதுதானோ?"

குந்தவை தேவியின் உடம்பு நடுங்கிற்று. மறுமொழி கூறியபோது அவளுடைய குரலும் நடுங்கிற்று.

"பழுவூர் ராணியிடம் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டியதுதான். ஆனால் அவள் பேச்சைக் கேட்க வேண்டிய அவசியமில்லை. அவள் எத்தகைய காரியத்தில் ஈடுபட்டிருக்கிறாள் என்பது அவளுக்கே தெரியாமலிருக்கலாம் அல்லவா?"

"அப்படித்தான் அவளும் கூறினாள். 'நான் எதற்காக இந்தக் கத்தியை பூஜை செய்து கொண்டிருக்கிறேன் என்பது எனக்கே தெரியவில்லை' என்றாள்."

இதைக் கேட்ட இளவரசி இன்னும் அதிகமாக நடுங்கிய குரலில், 'இந்தச் சோழர் தொல்குடியைத் தெய்வந்தான் காப்பாற்ற வேண்டும்" என்றாள்.

"காப்பாற்றுகிற தெய்வம் இந்த ஏழையைச் சாதனமாக வைத்துக் கொண்டு காப்பாற்றட்டும்" என்றான் வந்தியத்தேவன்.

"ஐயா! நானும் அவ்வாறுதான் நம்பியிருக்கிறேன். நீர் காஞ்சியிலிருந்து திரும்பி வந்ததும் மறுபடி ஒருதடவை இலங்கைக்குப் போக வேண்டும். அந்த ஊமைத் தாயை எப்படியாவது இங்கே அழைத்து வர வேண்டும்..."

"அவளை அழைத்து வருவது சுழிக்காற்றை குடத்தில் அடைத்துக் கொண்டு வருவது போல்தான். இப்படி ஒருமுறை யாரோ சொன்னார்கள். ஆம், அந்த வீர வைஷ்ணவன்தான். ஒருவேளை அவனே அழைத்து வந்திருக்கலாம்."

"இல்லை; அவனால் அந்தக் காரியம் முடியவில்லை. உம்மாலேதான் அந்தக் காரியம் ஆக வேண்டும்."


"அப்படியானால் என்னைக் காஞ்சிக்கு அனுப்பாதீர்கள். தேவி!"

"ஏன்?"

"அங்கே என் எஜமானர் இருக்கிறார். அவர் கேட்டால் நான் எல்லா விவரங்களையும் சொல்லித்தான் ஆக வேண்டும். பழுவேட்டரையர்களும் மற்ற சிற்றர

சர்களும் செய்யும் சதியைப் பற்றி அறிந்தால் உடனே வெகுண்டு எழுவார். சக்கரவர்த்தியைச் சிறை வைத்திருப்பது போல் வைத்திருக்கிறார்கள் என்று அறிந்தால்





உடனே படை எடுத்துக் கிளம்புவார். பொன்னியின் செல்வரைப் பற்றிய செய்தி அவர் காதில் எட்டியிருந்தால் இதற்குள்ளேயே ஒருவேளை புறப் பட்டிருந்தாலும் புறப்பட்டிருப்பார்..."

"அதற்காகவேதான் உம்மை அனுப்ப விரும்புகிறேன். அவர் காஞ்சியை விட்டுப் புறப்படாமல் எப்படியாவது தடுத்து விட வேண்டும்."

"நான் காஞ்சியை அடைவதற்குள் அவர் புறப்பட்டிருந்தால்...?

"வழியில் அவன் எங்கே இருந்தாலும் அங்கே போய்ச் சேர்ந்து கொள்ளுங்கள். எல்லாவற்றையும் விட முக்கியமாக நீர் அவசியம் செய்ய வேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது..."

"சொல்லுங்கள்!"

"பெரிய பழுவேட்டரையர் இளைய ராணியுடன் கடம்பூர் மாளிகைக்குப் புறப்பட்டு விட்டார் என்ற செய்தி கிடைத்திருக்கிறது..."

"உண்மையில் இளையராணிதான் போகிறாளா! அல்லது இளையராணியின் பல்லக்கில்..."

"இல்லை; இளையராணிதான் போகிறாள். என் சித்தப்பாதான் இன்னும் இங்கே இருக்கிறாரே?"

"எதற்காகப் போகிறார்களாம்?"

"ஆதித்த கரிகாலனையும் கடம்பூருக்கு வரும்படி அழைத்திருக்கிறார்கள். கலி யாணப் பேச்சு என்பது வெளிப் படையான காரணம். இராஜ்யத்தை இரண்டாகப் பிரித்துக் கொடுத்துச் சமா தானம் செய்து வைக்கப் போவதாகவும் ஒரு பேச்சு நடந்து வருகிறது."

"என் எஜமானர் அதற்கு ஒருநாளும் சம்மதிக்க மாட்டார்."

"அதைப் பற்றியெல்லாம் இப்போது எனக்குக் கவலை இல்லை."

"பின்னே, என்ன கவலை தேவி!"

"இன்னதென்று சொல்ல முடியாத பயம் என் மனத்தில் குடி கொண் டிருக்கிறது. நெஞ்சு திக், திக் என்று அடித்துக்கொள்கிறது. அரைத் தூக்கத் தில் விவரமில்லாத பயங்கரங்கள் என்னைச் சூழ்ந்துகொள்கின்றன. நல்ல தூக்கத்தில் அகோரமான கனவுகள் கண்டு விழித்துக் கொள்கிறேன். அப்புறம் வெகுநேரம் வரையில் என் உடம்பு நடுங்கிக்கொண்டிருக்கிறது."

"இந்த நிலையில் தங்களைப் பிரிந்து என்னை ஏன் போகச் சொல்லுகிறீர் கள்? தங்களுக்கு எத்தகைய அபா யம் வந்தாலும் என் உயிரைக் கொடுத்து..."

"ஐயா! என்னுடைய பயம் என்னைப் பற்றியதே அன்று. என் தமையனைப் பற்றியது; பழுவூர் இராணியைப் பற்றியது. அவர்கள் சந்தித்தால் என்ன நேரிடுமோ என்று எண்ணி என் உள்ளம் கலங்குகிறது. அவர்கள் தனியாகச் சந்திக்க முடியாதபடி நீர் தடை செய்ய வேண்டும்..."

"தேவி! அவர் ஒன்று செய்வதற்கு நினைத்தால் அதை யார் தடுக்க முடியும்?"

"ஐயா! என் தமையனைக் காப் பாற்றும் இரும்புக் கவசம் போல் நீர் உதவ வேண்டும். அவசியமானால் நந்தினி யார் என்பதை என் சகோ தரனிடம் சொல்லி விட வேண்டும்..."

"அதை அவர் நம்ப வேண்டுமே?"

"நம்பும்படியாகச் செய்வது உமது பொறுப்பு. எப்படிச் செய்வீர் என்று எனக்குத் தெரியாது. அவர்களை எப்படியேனும் சந்திக்க முடியாதபடி செய்தால் மிக்க நலமாயிருக்கும்."

"தேவி! என்னாலியன்ற முயற்சி களைச் செய்து பார்க்கிறேன். தோல்வி அடைந்தால் என்னைக் குற்றம் சொல்ல வேண்டாம்" என்றான் வந்தியத் தேவன்.

"ஐயா! தாங்கள் தோல்வி அடைந்தாலும் வெற்றி அடைந்தாலும் என் இதயச் சிறையிலிருந்து இந்த ஜன்மத்தில் தங்களுக்கு விடுதலை கிடையாது!" என்றாள் அரசிளங் குமரி.

(தொடரும்)

உருப்படாத கட்சி

கொள்கைக்காக உயிரைக் கொடுக்கத் துணிந்த கம்யூனிஸ்டுகள் முதல், பட்டம் பதவி மோகமும் அதிகார வெறியும் கொண்ட பிற்போக்குப் பணக்காரர்கள் வரையில் கதம்பமாகச் சேர்ந்து "ஐக்கிய ஜனநாயக முன்னணி" என்னும் அதிசய ஸ்தாபனம் இம்மாகாணத்தில் உருவாயிற்று. அந்த 'முன்னணி'யில் எல்லாருக்கும் பொதுவாயிருந்த முன்னணி நோக்கம், மந்திரி சபையைக் கைப்பற்ற வேண்டும் என்பது. அந்தப் பொது நோக்கம் நிறைவேறி விட்டால், பிறகு ஒவ்வொருவரும் தமது சொந்த நோக்கத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்று எண்ணி மனப்பால் குடித்தார்கள்.

மேற்படி கட்சி உருவான புதிதில் நிதி மந்திரி ஸ்ரீ. சி. சுப்பிரமணியம் அவர்கள், அழுத்தம் திருத்தமாக, "அதில் ஐக்கியமும் இல்லை; ஜனநாயகமும் இல்லை; அது முன்னணியும் அல்ல" என்று கூறினார்.

அது எவ்வளவு உண்மையான பேச்சு என்பது நாளடைவில் தெரிந்து வந்ததென்றாலும், சென்ற வாரத்தில் நன்றாக உறுதிப்பட்டது. கட்சியின் தலைவராயிருந்த ஸ்ரீ டி. பிரகாசம் காருவும் ஆந்திர-மலையாள பிரஜா கட்சி அங்கத்தினரும் ஐ.ஜ. மு-விலிருந்து பிரிந்து வந்தார்கள். பிரிந்து வந்தவுடனே ஸ்ரீ டி. பிரகாசம் வெளியிட்ட அறிக்கை சோகம் ததும்புவதாயிருந்தது. "தலைவன் என்று நான் பெயருக்கு இருந்தேனே தவிர, காரியங்கள் எல்லாம் எனக்குத் தெரியாமல் எப்படி எப்படியோ நடந்து வந்தன" என்று முறையிட்டார். ஐ.ஜ.முன்னணி அமைக்கப்படும் போதே இப்படித்தான் நடக்கும் என்று பலரும் எச்சரிக்கை செய்தார்கள். ஸ்ரீ டி. பிரகாசம் அதை அச்சமயம் பொருட்படுத்தவில்லை. இப்போது அதே பாடத்தை அவர் திருப்பி ஒப்புவிக்கிறார். பாவம்! பல காரணங்களினாலும் மனங் கசந்துபோன அந்த முது பெருங் கிழவரை நினைத்தால் பரிதாபமாகத் தானிருக்கிறது.

இவ்வாறு உருப்படாத ஐ.ஜ.மு. கட்சி சென்ற வாரத்தில் முடிவாக உடைந்து போன போதிலும், இதனால் சென்னைச் சட்டசபையில் காங்கிரஸ் மந்திரி சபைக்கு எதிர்ப்புக் குறைந்து விடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

சென்னையில் பிரஜா கட்சியார் கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைக்கிறார்கள் என்பது அகில இந்தியாவிலும் பிரஜா கட்சியின் செல்வாக்கைப் பாதித்து வந்தது. இதை முன்னிட்டே பிரஜா கட்சி ஐ.ஜ.மு.விலிருந்து பிரியத் தீர்மானித்தது என்று சொல்வதும் மிகையாகாது.

ஆனால் காங்கிரஸ் மந்திரி சபையை எதிர்க்கும் விஷயத்தில் எல்லாரும் முன் போலவே உத்வேகமாக இருப்பார்கள். ஏன்? பிரிந்து போன காரணத்தினாலேயே

கல்கி கலெக்ஷன்

அமரர் கல்கி

மந்திரி சபையை எதிர்ப்பதில் அவர்களுடைய உத்வேகம் அதிகமாகக் கூடும்.

காங்கிரஸ் மந்திரி சபையைக் கவிழ்ப்பதற்கு எது சமயம் என்று காத்துக் கொண்டிருப்பார்கள்.

அவர்களுடைய மனோரதம் கைகூடினால் ஒரு விதத்தில் நல்லது என்றே சொல்ல வேண்டும்.

இப்படிப் பல பட்டறைக் கட்சிகள் கொண்ட சட்டசபையில் தினந்தோறும் வோட்டு எடுத்துப் பலப் பரீட்சை செய்து கொண்டிருப்பதைக் காட்டிலும், மறுபடியும் பொதுத் தேர்தல் நடத்தி, "இந்த மாகாண மக்களுக்கு ஸ்திரமான காங்கிரஸ் ஆட்சி வேண்டுமா? அல்லது குழப்பக்காரர்களின் கண்மூடி ஆட்சிதான் வேண்டுமா?" என்பதை நிச்சயமாய்த் தெரிந்து கொண்டு விடுவது நலம் அல்லவா?

– (கல்கி, டிசம்பர் 14, 1952)

உடைந்தது!

மல்யுத்தம்

நமது மதிப்புக்குரிய சகோதரி ஒருவர் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:-

"கலையிலாகட்டும், அரசியலிலாகட்டும் மற்றும் பொது விஷயங்களிலாகட்டும், தங்கள் கருத்துக்களும் அபிப்பிராயங்களும் உன்னதமாகவும், மக்களுக்கு வழி காட்டியாகவும் அறிவூட்டுவனவாகவும் இருந்து வருகின்றன. பல பத்திரிகைகள், வாசகர்கள் மனத்தைக் கவர்ச்சிப்பதற்காக என்னென்னவோ உபாயங்களைத் தேடுகின்றன. போட்டிப் பந்தயம் முதல், குதிரைப் பந்தயம் வரை மனிதர்களுடைய பேராசை முதலிய கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டும் விஷயங்களைக் கொடுத்து வருகிறார்கள். ஆனால் 'கல்கி' அந்தவித முறைகளுக்கு இதுவரை போகாமலே வாசகர்களை மகிழ்வித்திருக்கிறது. ஆகையால் 'கல்கி'யில் ஏதாவது சிறிது தரம் குறைவதாகத் தோன்றினாலும் அது பெரிதும் வேதனை தருகிறது.

நான் குறிப்பிடுவது சென்ற 23உ 'கல்கி'யில் வெளிவந்துள்ள மல்யுத்த விமர்சனம் தான். மல்யுத்தம் புராதன மகிமை வாய்ந்ததாக இருக்கலாம். பீமன், கடோத்கஜன் முதலியவர்கள் புகழ் பெற்ற வித்தையாக இருக்கலாம். அந்தக் காலத்து மல்யுத்தம் எப்படியோ நமக்குத் தெரியாது. ஆனால் இப்போது சென்னையில் ஆயிரக்கணக்கான ஜனங்களை ஆகர்ஷிக்கும் மல்யுத்தம் ஒரு "விளையாட்டு" என்று கூறுவது வேடிக்கைதான்!

ஒரு தடி மனிதனை மற்றொரு மாமிச மலை தன் முழு பளுவால் தாக்கி ஏறி, மிதித்து, வதைத்து, கடித்து, மூக்கில் விரல் விட்டு ஆட்டி, வாயில் கையை விட்டுக் கிழித்து, தலையைத் தேங்காய் உடைப்பது போல் உடைத்து, கழுத்தை நெறித்து, காலால் உதைத்து, நகத்தால் பிறாண்டி, இன்னும் சித்திரவதைகள் எத்தனையுண்டோ, அத்தனையும் கையாளுகிறான். இந்த மிருகத்தனமான நடவடிக்கையை "ஒரு விளையாட்டு" என்று கருதுவது எந்த நாகரிகத்துக்குப் பொருத்தம் என்று எனக்குப் புரியவில்லை. இந்த அருவருக்கத்தக்க கோரக் காட்சியைக் காண மனோதிடமுள்ள ஆண் சிங்கங்கள் போவது கூட அவ்வளவு அதிசயமில்லை. சேலை கட்டிய பெண் புலிகள் நூற்றுக்கணக்காகப் போய், ஆண்களோடு சரிநிகர் சமானமாக, கூச்சலிட்டு, எக்காளம் போட்டுக் குதிக்கிறார்களே, இந்த நாகரிகத்தைப் பற்றி எங்கே போய்ச் சொல்லி அழுவது?

இத்தகைய அநாகரிகமான, ராக்ஷஸ 'விளையாட்டையும்' அதைப் பார்க்கப் போன ரஸிக சிகாமணிகளையும் கண்டிப்பதை விட்டுத் தங்கள் பத்திரிகையில் அதைப் போற்றி ஒரு விமர்சனம் வந்திருப்பது விசனத்துடன் வியக்க வேண்டியிருக்கிறது. சினிமாவில், டப்பா கீதத்தையும், கடந்த பிண்டத்தையும் சகிக்காத தாங்கள், எப்படி இந்தக் கீழ்த்தரமான மிருக விளையாட்டைப் பாராட்ட முடியும் என்பது விளங்கவில்லை..."

மேற்கண்ட கடிதத்திலுள்ள கருத்துக்களை நமது நேயர்களில் பலரும் ஆமோதிக்கக் கூடும். வேறு பலர் ஆட்சேபிக்கவும் கூடும். பதினாயிரக்கணக்கான மக்கள் 'மல்யுத்தம் - ஒரு விளையாட்டு' என்று எண்ணிப் பணங் கொடுத்துப் போய்ப் பார்க்கிறார்கள் அல்லவா?


நம்மைப் பொறுத்தவரையில் மல்யுத்தம் ஒரு விளையாட்டாயிருந்தாலும் சரி, வினையாகவே இருந்தாலும் சரி, அது 'நமது நாட்டில் புராதன காலத்திலிருந்து வழி வழியாக வந்தது என்ற காரணத்தினால் அதற்குக் கொஞ்சம் சலுகை காட்டவே விரும்புகிறோம்.

இராமர் முதலிய அவதார புருஷர்கள் 'மல்லார்ந்த தோளினாய்' என்று கவிஞர்களின் புகழுரையைப் பெற்றிருக்கிறார்கள்.

சிவ பெருமான் அர்ச்சுனனோடு விளையாட்டாக மல்யுத்தம் செய்த கதை "கிராதார்ஜுனீயம்" என்னும் காவியமாக வரையப்பட்டிருக்கிறது.

கல்கி கலெக்ஷன்

அமரர் கல்கி



ஒரு விளையாட்டா?

சரித்திர காலத்தில், புகழ் பெற்ற காஞ்சி நரசிம்ம பல்லவ சக்கரவர்த்தி நாட்டிலுள்ள மன்னர்களை யெல்லாம் தோற்கடித்து 'மாமல்லன்' என்று விருதுப் பெயரைப் பெற்றிருக்கிறார்.

மல்யுத்த விளையாட்டைப் பெண்களும் பார்த்துக் களிப்பது பற்றி நம் சகோதரி அருவருப்புடன் குறிப்பிட்டிருக்கிறார் அல்லவா?

ஆனால் பரமசிவனுக்கும் அர்ச்சுனனுக்கும் நடந்த மல்யுத்தத்தைப் பார்வதி தேவி கண்டுகளித்ததாகக் காவியத்தில் படிக்கிறோம்.

ஏன்? இடும்பனுக்கும் வீமனுக்கும் நடந்த மற்போரை இடும்பனுடைய சகோதரியான இடும்பி பார்த்துக்கொண்டிருந்து, அதன் காரணமாகவே வீமன் பேரில் காதல் கொண்டு மாலையிட்டதாகவும் அறிகிறோம். (இந்தக் காட்சியையே நமது இந்த இதழ் அட்டையில் சித்திரிக்கிறது.)

நமது நாளிலும் சில இடும்பி சகோதரிகள் மல் யுத்தத்தைப் பார்த்துக் களிக்க முன் வந்தால் அதைப்பற்றி நாம் ஏன் வியப்படைய வேண்டும்?

பல நூறு ஆண்டு காலம் அன்னிய ஆட்சியில் இருந்த காரணத்தினால் இந்த நாட்டு மக்களின் மனோதிடமும் தேக வலிமையும் குன்றியிருக்கின்றன. இந் நாட்டு ஆண் மக்கள் அவற்றைத் திரும்பப் பெற வேண்டியது அவசியம் என்பதைப் பற்றி இருவித அபிப்பிராயம் இருக்க முடியாது.

"ஒரு மோட்டார் பஸ்ஸில் இருபத்தைந்து பிரயாணிகள் வந்தார்கள்! மூன்று திருடர்கள் அவர்களை வழி மறித்து நிறுத்தினார்கள்; பிரயாணிகளிடமிருந்து பொருள்களைப் பறித்துக்கொண்டு ஓடிப் போனார்கள்" என்பது போன்ற செய்திகளைப் படிக்கும் போதெல்லாம் இந்த நாட்டில் பிறந்தவர்கள் யாரும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டே தீர வேண்டும்.

ஆளுக்கு ஆள் எதிர்த்து நின்று அநியாயங்களையும் அக்கிரமங்களையும் தடுப்பதற்குத் தேக திடமும் மனோதைரியமும் இந் நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் பெற வேண்டியது அவசியம்.


அதற்கு இத்தகைய மல்யுத்த 'விளையாட்டு'களைப் பார்ப்பது ஓரளவு உதவியாயிருக்கக் கூடும் என்று நம்புகிறோம்.

(கல்கி, நவம்பர் 30, 1952)

அடாடா! ஏழைக் கைத்தறியாளரின் மீது இந்திய சர்க்காரின் தொழில் இலாகாவுக்குப் பிறந்த கருணையை என்னவென்று சொல்லுவது!

பசிக்கிறது என்று அழுகிற குழந்தைக்கு அழுகல் வாழைப் பழத்தைக் கொடுக்கும் கருணை தான்!

உரித்துப் பார்த்துவிட்டு 'அழுகல்' என்று ஏமாந்தால் ஏமாறட்டும்! தரித்திரம் பிடித்த பிள்ளை எதற்காக அழுதது? அழுகல் வாழைப் பழத்தைக் கொடுத்துத் தான் அதைத் தண்டிக்க வேண்டும்...!



கைத்தறித் தொழிலுக்கு உதவி செய்வதாகச் சொல்லி, சென்ற வாரத்தில் இந்திய சர்க்கார் பிறப்பித்திருக்கும் உத்தரவு அந்த மாதிரி ஆசை காட்டி மோசம் செய்யும் காரியமாயிருக்கிறது! உண்மையில் கைத்தறித் தொழிலுக்கு அதனால் உதவியும் இல்லை; பாதுகாப்பும் இல்லை.

கரை போட்ட வேஷ்டி நெசவைக் கைத்தறிக்கென்று ஒதுக்கி வைக்க வேண்டும் என்று சென்னைச் சட்டசபை கேட்டுக்கொண்டது. தேசம் முழுவதிலும் உள்ள முப்பது லட்சம் கைத்தறித் தொழிலாளர்கள் அந்தக் கோரிக்கையை வற்புறுத்தினார்கள். அதனால் தங்களுக்குச் சிறிய உதவி கிடைக்கலாம் என்று நம்பினார்கள். பொதுஜன அபிப்பிராயமும் அந்தக் கோரிக்கையைத் தீவிரமாக ஆதரிப்பதாகத் தோன்றியது.

அதன் பேரில் இந்திய சர்க்கார் மனமுவந்து முன்வந்து "ஆலைகளில் 1951-ம் ஆண்டில் உற்பத்தியான கரைபோட்ட வேஷ்டிகளின் அளவில் 100க்கு 60 பங்கு தான் இனி உற்பத்தி செய்யலாம்" என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

"கைத்தறியாளர்களுக்காகவே இந்த உத்தரவைப் போட்டிருக்கிறோம். பாக்கி 100-க்கு 40 வீதம் கரை போட்ட வேஷ்டியைக் கைத்தறிக்கே ஒதுக்கியிருக்கிறோம்" என்று விளக்கமும் தந்திருக்கிறார்கள்.

வெளிப்பார்வைக்கு இந்த உத்தரவு ஏதோ கைத்தறிகளுக்கு ஓரளவு உதவி செய்யும் உத்தரவு என்பதாகத் தோன்றுகிறதல்லவா?

உண்மையில், அவ்விதம் இல்லை. ஆலைகளுக்கு உதவி செய்யும் உத்தரவேயாகும்.

சென்ற ஆண்டில் ஆலைகள் கரை போட்ட வேஷ்டிகளை மிதமிஞ்சி உற்பத்தி செய்தன. அதன் பயனாக, விற்பனையாகாமல் சரக்கு தங்கிப் போயிற்று. எனவே, ஆலைகளே இவ்வருஷத்தில் கரை போட்ட வேஷ்டி உற்பத்தியைக் குறைக்கத் தொடங்கியிருக்கின்றன.


1951-ம் வருஷத்தில் மாதம் ஒன்றுக்கு ஐம்பதினாயிரம் கட்டுக்கள் வீதம் உற்பத்தி செய்து வந்தன. இந்த வருஷத்தில் நாற்பதினாயிரம் கட்டுகளாகக் குறைத்துக் கொண்டிருக்கின்றன.

பெரிய தொழில்களை நடத்தும் முதலாளிகள் சில சமயம் தங்களுக்குள் கட்டுப்பாடு செய்து கொள்வார்கள். தேவைக்கு அதிகமாகச் சரக்கு உற்பத்தியாகி, அதனால் விலை குறைக்க நேருவதை அவர்கள் விரும்புவதில்லை. ஆகையால் உற்பத்தியை அவர்களே கட்டுப்படுத்திக் கொள்வார்கள். இதற்குச் சில சந்தர்ப்பங்களில் சர்க்காரின் உதவியையும் நாடிப் பெறுவார்கள்.

அவ்விதம் ஆலை முதலாளிகள் உதவி

கல்கி கலெக்ஷன்

அமரர் கல்கி



கோரும் நிலைமையில் சர்க்காரே முன்வந்து 1951-ம் வருஷத்து உற்பத்தியில் 100-க்கு 60 விதம் என்று ஆலைகளின் வேஷ்டி உற்பத்தியைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். அதாவது ஏற்கெனவே ஆலைகள் உற்பத்தியைக் குறைத்திருப்பதை உத்தரவு மூலம் ஊர்ஜிதப் படுத்தியிருக்கிறார்கள்.

ஆகவே, ஆலைகளுக்குத்தான் இந்த உத்தரவினால் நன்மை. தங்கிப் போன சரக்கை விலை குறைக்காமல் தள்ளி விடுவதற்கு இது உதவி செய்யும். இனிமேலும், கரை போட்ட வேஷ்டிகளுக்கு நாட்டில் எவ்வளவு கிராக்கி உண்டோ, அவ்வளவு மட்டில் உற்பத்தி செய்து நிறுத்திக் கொள்வதற்கும் உதவி செய்யும்.

கைத்தறித் தொழிலுக்கு இதனால் எந்த வித நன்மையும் கிடையாது; ஆனால் தீமை உண்டு.

“ஓர் அருமையான சந்தர்ப்பத்தைக் கொடுத்தோம்; அதைக் கைத்தறிக்காரர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை!” என்று சில மாதத்திற்குப் பிறகு சொல்லிக் காட்டலாம் அல்லவா?

“அருமையான வாழைப் பழத்தைக் கொடுத்தேன். அந்தத் துஷ்டப் பையன் அதைச் சாப்பிடாமல் எறிந்து விட்டான்!” என்று சொன்னால், கொடுத்தது அழுகல் வாழைப் பழம் என்று தெரியாதவர்கள் நம்பக் கூடும் அல்லவா!

• • •

அழுத பிள்ளைக்கு அழுகல் வாழைப்பழம்

வேஷ்டி உற்பத்தியை முழுதும் கைத்தறிக்கு ஒதுக்கி வைப்பதற்கும், அரை குறையாக ஒதுக்கி வைப்பதற்கும் ரொம்ப வித்தியாசம் உண்டு. கிணற்றை முழுதும் தாண்டுவதற்கும், பாதிக்கிணறு தாண்டுவதற்கும் உள்ள வித்தியாசந்தான். முழுக் கிணறு தாண்டினால் உயிர் தப்பிப் பிழைக்கலாம். பாதிக்கிணறு தாண்டினால், அரைவாசி உயிர் தப்ப முடியுமா? முடியாது.

சம்பா நெல் பயிரின் காலம் ஐந்து மாதம். அதாவது நடவு நட்டு ஐந்தாவது மாதத்தில் பயிர் அறுவடை செய்யலாம்.

நடவு நட்டு இரண்டரை மாதத்தில் அறுவடை செய்தால், என்ன கிடைக்கும்? நெல்லுக்குப் பதில் புல்லுதான் கிடைக்கும். ''பாதி நெல் ஏன் கண்டு முதல் ஆகவில்லை?'' என்று கேட்கிற புத்திசாலியைப் பற்றி என்ன சொல்வது?

கரை போட்ட வேஷ்டியை முழுதும் ஒதுக்கி வைத்தால், கைத்தறிக்காரர்கள் ஒரு துறையிலாவது ஆலைகளின் போட்டி பயமின்றி ஓரளவு கணிசமான துணி உற்பத்தி செய்யலாம்; அவற்றை இலகுவாக விற்றுப் பிழைக்கலாம்.

அரை குறையாக ஒதுக்கும்போது ஆலை முதலாளிகள் போட்டியிட்டுக் கைத்தறித் தொழிலை அழிக்கத்தான் பார்ப்பார்கள். வேண்டுமென்று விலையைக் குறைத்து விற்பார்கள். மலிவான நூலையெல்லாம் தாங்கள் வைத்துக் கொண்டு ஒப்புக்கு இரட்டி விலையான நூலைக் கைத்தறிக்காரர்களின் தலையிலே கட்டுவார்கள். பிறகு, ''பார்த்தீர்களா? ஆலைத் துணி எவ்வளவு மலிவாயிருக்கிறது? கைத்தறித் துணி எவ்வளவு

கிராக்கியாயிருக்கிறது?" என்பார்கள்.

கைத்தறித் தொழில் அழிந்த பிறகு மறுபடியும் ஒட்டிக்கு இரட்டியாக விலையைத் தூக்கி விற்றுப் பழைய நஷ்டத்தையும் ஈடு செய்து கொள்வார்கள்.

● ● ●

"ஆலைகளின் போட்டியில்லாமலே விட்டு விட்டால், கைத்தறித் துணி விலை ஏறி விடாதா? பொது ஜனங்கள் - வேஷ்டி உடுத்துவோர் அநியாயமாய் நஷ்டம் அடைவார்களே!" என்று ஒரு வாதம் சொல்லப்படுகிறது. இது முற்றிலும் அபத்தமான வாதம்.

ஏனெனில், கைத்தறித் தொழிலுக்கு ஒரு ரகத் துணிகளை ஒதுக்குவதனால், போட்டியேயில்லாமற் போய் விடாது!

வேஷ்டி நெசவு செய்யும் லட்சக்கணக்கான கைத்தறிகள் அவ்வளவும் ஒன்றுக்கொன்று போட்டி என்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

பெரும் பணக்காரர்களான ஆலை முதலாளிகள் ஒரு சிலர்தான். அவர்கள் பின்னால் வரும் லாபத்தைக் கருதி, கோடிக்கணக்கில் நஷ்டம் அடையக் கூடத் தயாராயிருப்பார்கள்.

கைத்தறிக்காரர்கள் நெய்த துணியை ஒரு வாரத்துக்கு மேல் வைத்திருந்தால், அவர்களால் தாக்குப் பிடிக்க முடியாது. அடுத்த வாரம் வேலையின்றிப் பட்டினி கிடக்க நேரிடும்.

ஆகையால் கைத்தறிக்காரர்கள் சரக்கை முடக்கி வைக்க முடியாது. விலையை அளவில்லாமல் உயர்த்தவும் முடியாது. அன்றாடக் கூலி கிடைத்தால் போதும் என்று துணியை விற்பதற்கு முன் வருவார்கள். லட்சக்கணக்கான தறிக்காரர்கள் இப்படித் தனித் தனியே நெய்த துணியை விற்பதற்கு அவசரப் படும்போது, அவர்கள் கொள்ளை லாபம் சம்பாதிப்பது எப்படி? அந்தப் பயம் வேண்டியதேயில்லை.

● ● ●

கைத்தறித் துணி ஆலைத் துணியைவிட இப்போது சிறிது விலை கூடுதலாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன தெரியுமா? கைத்தறிக்காரர்களின் பேராசையல்ல. ஆலை முதலாளிகளின் பேராசையும் சூழ்ச்சியும் இந்திய சர்க்காரின் முன் யோசனையற்ற நிர்வாகமுந் தான்.

அதிக விலையுள்ள அயல்நாட்டுப் பருத்தியில் செய்த நூலை ஒட்டிக்கு இரட்டி விலை வைத்துக் கைத்தறிக்காரர்களின் தலையில் கட்டுகிறார்கள்.

குறைந்த விலையுள்ள உள்நாட்டுப் பருத்தியில் செய்த நூலை மலிவான விலைக்குத் துணி ஆலை முதலாளிகள் எடுத்துக்கொள்கிறார்கள்.

எனவே, நூல் விலையை யொட்டிக் கைத்தறித் துணியின் விலையும் அதிகமாகியிருக்கிறது.

கைத்தறிக்காரர்களுக்குக் குறைந்த விலை நூல், ஆலையில் விற்கப்படும் விகிதத்துக்கும் கிடைத்தால், கைத்தறித் துணி ஆலைத் துணியைவிட மலிவாகக் கிடைக்கும்.

இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்வது இந்திய சர்க்காரின் பொறுப்பு; செய்யாமலிருப்பது கைத்தறித் தொழிலுக்குச் செய்யும் தீங்கு.

இவ்விதம், செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டு விட்டு, "கைத்தறித் துணி விலை அதிகமாயிருக்கிறது" என்று அறியாதவர்களோடு சேர்ந்து அரசாங்கத் தலைவர்களும் பழி சொல்லுவது, குதிரை கீழே தள்ளினது மல்லாமல் குழியும் பறிப்பது போன்ற காரியம்.

பாரத நாட்டின் கைத்தொழில்களில் மிகப் புராதனமான கைத்தொழில் கைத்தறித் தொழில். ஒரு காலத்தில் உலகமே பார்த்து வியக்கும்படியாக இருந்த தொழில். இன்றைக்கும் முப்பது லட்சம் குடும்பங்கள் ஜீவனத்துக்கு அத்தொழிலையே நம்பியிருக்கின்றன.

இந்தியாவின் மிகப் புராதன கைத்தொழிலையும் முப்பது லட்சம் ஏழைக் கைத்தறியாளர்களின் குடும்பங்களையும் காப்பாற்றுவதற்கு இந்திய சர்க்கார் உடனடியாக முன் வர வேண்டும். சாக்குப் போக்குச் சொல்லிக் காலத்தை ஓட்டுவது முறையல்ல. "நூற்றுக்கு 40 சதவீதம் ஒதுக்கியிருக்கிறோம்" என்பது போன்ற அழுகல் வாழைப் பழ உத்தரவைப் போடுவது புண்ணிலே கோல் விட்டுத் துன்பத்தை அதிகமாக்குவதாகும்.

(கல்கி, டிசம்பர் 7, 1952)



சுயம்வரம்

விஜயகுமார் தம்முடைய நெஞ்சுவலியைக் காரணம் காட்டி, தமது மூன்று மகன்களுக்கும், ஆறு மகள்களுக்கும் ஒரே மேடையில் திருமணம் செய்ய முடிவெடுக்கிறார்! குடும்ப டாக்டர் நெப்போலியன் திருமண ஏற்பாடுகளைச் செய்கிறார். பேப்பரில் விளம்பரம் கொடுக்கிறார். விளம்பரம் பார்த்து வருபவர்களில், சரியான நபர்களைத் தேர்ந்தெடுக்கும் வேலை கல்லூரிப் பேராசிரியர்களான பாக்யராஜுக்கும், ஊர்வசிக்கும். இன்னொரு பக்கம் மனநல டாக்டர்களான ஜனகராஜும், செந்திலும் கொஞ்சம் பேரை இண்டர்வியூ செய்கிறார்கள். எப்பேர்ப்பட்ட குழப்பம்!

கல்யாணத்தின் போது ஜெயிலிலிருந்து தப்பி வந்த வில்லன் மன்சூர் அலிகான், ஒன்பது மணப்பெண்களையும் கடத்திக் கொண்டு போய் பணம் கேட்டு மிரட்டுகிறார். அர்ஜுன் வந்து மன்சூரை பெண்டை நிமிர்த்தி, திருமண மண்டபத்தில் மன்சூர் வைத்த பாமை (டென்ஷனுடன்) செயலிழக்கச் செய்து மணமக்களைச் சேர்த்து வைக்கிறார்!

இந்த மெயின் கதைக்குப் பின்னணி இசை போல குறத்தியான குஷ்புவைக் காதலிக்கும் சத்யராஜ், ஸ்வீப்பர் ஐஸ்வர்யாவைக் காதலிக்கும் பிரபு, பினாக்கில் டிக்கெட் விற்கும் பிரபுதேவாவைக் காதலிக்கும் ரோஜா, ரேஸ் குதிரைக்குத் தீனி போடும் வேலை பார்க்கும் பாண்டியராஜனைக் காதலிக்கும் கஸ்தூரி... போதுமா!

அத்தனையையும் ஒன்றுசேர்த்து முழுப் படமாய்த் தந்திருக்கும் சாமர்த்தியத்தை மெச்சிக் கொண்டாலும், ஒவ்வொரு காட்சியும் ஒரு புதுப்படம் பார்க்கிற பிரமையை ஏற்படுத்துகிறது.

முழு சினிமாஸ்கோப் திரைகொள்ளாத அளவில் நடிகர் பட்டாளம். அத்தனை நடிகர்களுமே தங்கள் பாத்திரத்தை சரியாகச் செய்திருக்கிறார்கள்.

எஸ்.ஏ. ராஜ்குமார், தேவா, சிற்பி, வித்யாசாகர் என நான்கு இசையமைப்பாளர்களில், வித்யாசாகர் மெட்டமைத்த 'சிவசிவசிவ' பாடல் மட்டுமே கேட்கிற ரகம். அதுவும் 'திருப்பதி ஏழுமலை வெங்கடேசா' பாட்டை நினைவூட்டுகிறது.

கின்னஸ் சாதனைக்காக, 23 மணி நேரம் 58 நிமிடங்களில் எடுக்கப்பட்ட படம். படம் பார்க்கிறபோது, அது உறுத்தாமல் முழுப்படத்தையும் கலகலப்பாகத் தந்திருக்கும் டைரக்டரை... தவறு, பதினைந்து டைரக்டர்களையும் பாராட்டலாம். ஆனாலும் ஜனரஞ்சகமான, பொழுதுபோக்கு அம்சங்களுடன், நகைச்சுவைக்கு கொடுத்த முக்கியத்துவத்தை ஒரு சீரியஸான விஷயத்திற்குக் கொடுத்திருக்கலாம் என்று தோன்றுகிறது. முழுசும் உட்கார்ந்து பார்க்க, கின்னஸில் இடம்பெறும் அளவுக்குப் பொறுமை வேண்டும்!

— கே.பி.எஸ்.

"மெக்கானிக் வேலை பெண்களுக்கு அந்நியமானதல்ல!"


"ஒரு பொருள் ரிப்பேரானால் அதை தூக்கி எறிந்து விடாமல், அதை சரி செய்து பயன்படுத்துவது கேவலமான விஷயமில்லை. நம்மைப் போன்ற நடுத்தர குடும்பங்களுக்கும், இந்தியாவைப் போன்ற நடுத்தர நாட்டிற்கும் பொருளாதார ரீதியாக உகந்த விஷயம்! பொதுவாக இது போன்ற பழுது நீக்கும் மெக்கானிக் பணிக்கு பெண்கள் வருவதில்லை. அதில் விதிவிலக்காய் களம் புகுந்தவர்கள்தான் இந்த சுப்புலட்சுமியும், சுசிலாவும்" என்று சுப்புலட்சுமியையும், சுசிலாவையும் நமக்கு அறிமுகம் செய்து வைத்தார் பேராசிரியர் வி. ஸ்ரீனிவாசன்.



• டாக்டர்களுக்கு வகுப்பெடுக்கும் சுப்புலட்சுமி

சுப்புலட்சுமியும், சுசிலாவும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையிலுள்ள 'இன்ஸ்ட்ருமெண்ட் அண்ட் எக்விப்மெண்ட் லாபரெட்டரி'யில் பணிபுரிபவர்கள்; மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படும் சிறியது முதல் பெரியது வரையிலான கருவிகள், உபகரணங்களைப் பராமரிப்பது, பழுது நீக்குவது போன்ற பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். சுப்புலட்சுமிக்கு ஏழு வருட அனுபவம். சுசிலாவுக்கு மூன்று வருடம்.

"நாங்கள் இருவருமே 'எலக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேஷனி'ல் டிப்ளமோ முடித்தவர்கள். அப்போதே கருவிகள் பற்றி நல்ல அறிமுகம் உண்டு. இங்கு வந்த பின் அது சரளமாகி விட்டது. அனுபவம் வாய்ந்த நண்பர்கள், கருவிகளை பயன்படுத்துபவர்கள், கருவியோடு தரப்படும் விளக்கக் குறிப்பேடுகள், கருவிகளை விநியோகிப்பவர்கள்... என்று பல தரப்பிலும் ஆலோசனை கேட்டு இத்துறையில் தெள்ளத் தெளிந்தோம்" என்று கூறும் சுப்புலட்சுமி இன்று



• 'கைடு' பேராசிரியர் ஸ்ரீநிவாசனுடன் சுப்புலட்சுமி, சுசீலா

பலருக்கு ஆலோசனை வழங்குமளவிற்கு 'எக்ஸ்பர்ட்'.

மருத்துவத் துறையில் பெரும்பாலான கருவிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுபவை. எனவே அதற்கு சரியான சர்வீஸ் கிடைப்பது அரிதான விஷயமே! இந்நிலையில்தான் இப்பெண்களின் பணி மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

"முக்கியமான ஒரு கருவியோ, உபகரணமோ ரிப்பேராகிப் போனால் அது சாதாரண பாதிப்பில்லை. டாக்டர்கள், நோயாளிகள் மற்றும் இவர்களோடு தொடர்புடையவர்கள் என்று ஒரு பெரிய செட்டப்பே நிலைகுலைந்து போகும். அதைத்தான் நாங்கள் அனுமதிக்காமல் உடனுக்குடன் சரி செய்து விடுகிறோம்" என்று கூறும் சுசிலா, கூடவே "இப்பணியில் உடல் உழைப்பிற்கு அதிக வேலையில்லை. மூளை உழைப்பும், பொறுமையும்தான் தேவை. அவை இயல்பாகவே பெண்களுக்கு இருக்கும்போது, இது பெண்களுக்கு அந்நியமான பணியல்ல!" என்றும் அறிவிக்கிறார்.

பொதுவாக வெளிநாட்டு கருவிகளுக்கு உதிரிபாகங்கள் கிடைப்பதில்லை. ஆனால் இவர்களுக்கு அது குறித்த கவலை இல்லை. எது தேவையோ அதை இங்கேயே தயாரித்து அல்லது மாற்றியமைத்து கருவிகளைத் தயார் பண்ணி விடுகிறார்கள். அரவிந்த் மருத்துவமனையின் ஊழியர்களாக இருப்பதால் இவர்கள் பெரும்பாலும் அங்குள்ள கருவிகளை மட்டுமே பராமரிக்கிறார்கள். எனினும் இவர்களை நம்பி உள்ளூரிலும், வெளி மாநிலங்களிலிருந்தும் பழுதுபட்ட கருவிகளைத் தூக்கிக் கொண்டு வரும் அன்பர்களுக்கு பழுதைச் சரிசெய்து உதவுகிறார்கள். சிறப்பு அழைப்பு வரும்போது தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும், வடமாநிலங்களுக்கும் தங்கள் கைடு பேரா. ஸ்ரீனிவாசன் துணையோடு சென்று பயிற்சி முகாம்களையும், பராமரிப்புப் பணிகளையும் நடத்தி வருகின்றனர்.

இந்த பராமரிப்புத் துறை மருத்துவ உலகில் மிக அவசியம் என்பதால் ஆறு வார பராமரிப்பு பயிற்சி வகுப்புகளை வருடத்திற்கு நான்கு முறை நடத்துகிறது அரவிந்த் மருத்துவமனை. அப்பயிற்சியின் முக்கிய ஆசிரியர்கள் சுப்புலட்சுமியும், சுசிலாவும்! ஒரு பயிற்சிக்கு ஆறு பேர் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். அதுவும் மருத்துவமனைகள் சார்பாக அனுப்பப்படுபவர்களுக்கு மட்டுமே அனுமதி! பாகிஸ்தான், நேபாள், பங்களாதேஷ், நைஜீரியா என்று பல நாடுகளிலிருந்து வந்து நம்ம ஊர் சுப்புலட்சுமியிடமும், சுசிலாவிடமும் பலர் பாடம் கற்றுப் போவது நமக்குப் பெருமையான விஷயமே! டாக்டர்களுக்கும் கருவிகளைப் பற்றிய அடிப்படை அறிவு அவசியம் என்பதால் அவர்களுக்கும் தனி பயிற்சி வழங்கப்படுகிறது. அதிலும் சுப்புலட்சுமியும், சுசிலாவும்தான் முக்கிய ஆசிரியர்கள்.

ஆண்களே இன்னும் அதிகம் ஈடுபடாத ஒரு துறையில் ஈடுபட்டு, அனாயாசமாகப் பணிபுரிந்து வரும் சுப்புலட்சுமியையும், சுசிலாவையும் வியப்போடு பார்த்து விடை பெறுகையில், "எங்கள் பணி, வேலை நேரத்தோடு முடிந்து விடுவதில்லை. வீட்டில் ஃபேன், ரேடியோ, டேப்-ரிகார்டர், டீ.வி, மிக்ஸி, கிரைண்டர், ஃப்ரிட்ஜ் என்று எது ரிப்பேரானாலும் அங்கு எங்கள் பணி ஆரம்பமாகிவிடும்" என்றனர் கோரஸாய்.

— கிரண் நியூஸ்

ஒரு வாரமாக அமுதா சொல்லிக் கொண்டிருக்கிறாள். நாளைக்கு, நாளைக்கு என்று தள்ளிப் போய்க் கொண்டேயிருந்தது. இன்று போயே தீரவேண்டும் என்கிற முடிவோடு, நேற்றே லீவு சொல்லிவிட்டு வந்து விட்டேன். ரிஜிஸ்தர் ஆபீஸுக்குப் போக வேண்டும்.

தாத்தாவுக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி கல்யாணமான மூணாவது மாதத்தில் ஏதோ சண்டையில் கோபித்துக் கொண்டு அம்மா வீட்டுக்குப் போய் விட்டாள். அப்புறம் இவரும் போய் அழைக்கவில்லை. அவரும் வரவில்லை. உறவு அதோடு முடிந்து போயிற்று. அந்த பாட்டிதான் இப்போது உறவாகி நிற்கிறாள் – மீண்டும். நாலு வருடம் கழித்து, மறு கல்யாணம் பண்ணி, மூணு குழந்தைகள் பெற்று, வளர்த்து ஆளாக்கி செத்துப் போகிறவரைக்கும் முதல் மனைவியைப் பற்றி நினைக்கவேயில்லை.



நடைமுறைகள்

ஜானகிராஜன்

ஆனால், தாத்தா இறந்ததும் வந்து நாள் முழுக்க அழுதுவிட்டு, தாலி அறுத்துக் கொண்டு போனாள் பாட்டி. அப்போது தான் எனக்கு பாட்டி அறிமுகமானாள். அதுவரை கேள்விப்பட்டது மட்டுமே!

அதற்குப்பின் நான்கைந்து முறை விசேஷங்களில் பாட்டியைப் பார்க்க நேரிட்டபோது பாசமாகத்தான் பேசினாள்.

போன வாரம் திடீரென்று என் வீடு தேடி வந்தாள். உடம்பு சரியில்லாமல், இளைத்துப் போய்ப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனாள் அமுதா. நாலு நாள் தங்கின பாட்டி உடல்நிலை தேறி இயல்புக்கு வந்தாள்.

ஞாயிற்றுக்கிழமைதான் எனக்கு பாட்டியோடு உட்கார்ந்து பேச நேரம் கிடைத்தது.

“ஊர்ல இருக்கிற நிலத்தையும், வீட்டையும் உன் பேருக்கு மாத்தி எழுதிக்கடா!” என்றாள் திடீரென்று. என்னால் நம்ப முடியவில்லை.

“நான் என்ன போற போது கொண்டா போகப் போறேன். எப்படியிருந்தாலும் நீ எனக்குப் பேரன்தானே. உசுரோட இருக்கிற போதே மாத்தி எழுதிக்கடா” என்று மஞ்சள் பையில் மடித்துக் கொண்டு வந்திருந்த ‘பத்திரங்கள்’ எடுத்துக் கொடுத்தாள்.

என் சந்தோஷத்தை நான் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

எப்படியும் அவற்றின் மதிப்பு இரண்டு லட்ச ரூபாய்க்கு அருகில் வரும். பெரிய வீடு அது. மாதம் மூவாயிரம் சம்பளம் வாங்கிக் கொண்டு, வேறு எந்த உபரிச் செலவும் பண்ணாமல், குடும்பத்தை நடத்தவே சிரமப்பட்டுக் கொண்டிருக்கிற எனக்கு இது பெரிய அதிர்ஷ்டம்.

பாட்டி கொடுத்த பத்திரங்கள் கிழிந்து நைந்து போய்க் கிடந்தன.

“ரிஜிஸ்தர் ஆபீசுல இதனோட ஒரிஜினல் பத்திரம் இருக்கு. அதை வாங்கிட்டு வந்துட்டா, உன் பேருக்கு மாத்தி எழுத வசதியா இருக்கும்” என்று பாட்டியே யோசனை தர, அதற்குத்தான் இந்த ஒரு வார தவணை. இன்று போவது என்று தீர்மானித்தாயிற்று.

இதுவரைக்கும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எல்லாம் நான் போனதேயில்லை. அப்பா இறந்தபோது, இறப்புச் சான்றிதழுக்காக, கிராம அதிகாரி வீட்டுக்குப் போனது மட்டும்தான் எனக்கு அனுபவம். மனசுக்குள் ஒரு தயக்கம் நிரந்தரமாக இருந்தது. “எதுக்கும் நூறோ இருநூறோ பணம் கொண்டு போ” என்று செல்வம் நேற்றே சொன்னான்.

நேற்றுத்தான் ஓவர்டைம் பணம் நானூறு ரூபாய் வந்தது.

‘சார்பதிவாளர் அலுவலகம்’ என்ற பெயர்ப் பலகையே பெயிண்ட் உதிர்ந்து பரிதாபமாக இருந்தது. அது ஒரு பழங்கால ஓட்டு வீடு - ஆபீசாக மாற்றியிருந்தார்கள். முன்னால் பெரிய பூவரசமரம் நன்றாகக் கிளை பரப்பி நிழல் தந்திருந்தது. கீழே நிறைய ஜனங்கள் கும்பல், கும்பலாக இருந்தனர்.

யாரோ ஒருத்தரைச் சுற்றி ஏழெட்டுப் பேர். அவர் சொல்வதற்கெல்லாம் தலையாட்டி, அவர் பின்னாலேயே திரிந்தனர். யாரிடம் போய் விசாரிப்பது என்று புரியவில்லை.

அறிவிப்புப் பலகை ஒன்று இருந்தது. அதில் ஏதாவது தகவல் இருக்குமோ என்று அருகே போனேன். ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு டைப் அடித்து ஒட்டியிருப்பார்கள் போலிருக்கிறது. காகிதமே நிறம் மாறியிருந்தது. நேர் மேலே ஓடு



''இன்னிக்கு உங்க தேர்தல் பிரசாரம் காரசாரமா இருந்தது.''

''ரொம்ப சந்தோஷம். ஏதாவது சந்தேகம் உண்டா?''

''எதைப்பத்தி பேசினீங்க?''

– இரா. திலீப்

உடைந்து, மழைத் தண்ணீர் வழிந்து பாதி எழுத்துக்களை மறைத்திருந்தது. ஸ்கெட்ச் பேனாவால் அலுவலக நேரம் 'காலை 10:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை' என்பதை மட்டும் பெரிதாக எழுதியிருந்தார்கள்.

அதில் வாசித்து எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை.

அந்த அலுவலகத்திற்குக் கட்டுப்படுகின்ற கிராமங்களின் பெயர்களை எழுதி வைத்திருந்த பலகையில், என் பாட்டியின் கிராமம் இருக்கிறதா என்று தேடினேன். இருந்தது.

வெள்ளை உடையில் கம்பீரமாக வந்த ஒருத்தரிடம் மெதுவாகக் கேட்டேன்.

"பத்திரம் நகல் எடுக்கணும் சார். எங்கே கேட்கணும்?"

"உள்ளே கேளுங்க!" என்று ஏதோ அவசரத்தில் போனார்.

அலுவலகத்தினுள் போனேன். யாரிடம் கேட்கலாம்? ஒரு நாற்பது வயதுப் பெண்மணி எழுதிக் கொண்டிருந்தார். பொதுவாகப் பெண்கள் பொறுமையாகப் பதில் சொல்வார்கள் என்கிற நம்பிக்கையோடு அந்தப் பெண்மணியிடம் விசாரித்தேன்.

"மேடம், பத்திரம் நகல் எடுக்கணும்!" நிமிர்ந்து பார்த்தார். ஏதும் பேசாது கை காட்டினார். அவர் கைகாட்டின திசையில் ஒருத்தர் நின்றிருந்தார்.

"அவர்கிட்டே கேட்கணுமா?"

தலையாட்டினார். பேச மாட்டார் போலிருக்கிறது. கேட்கிறவனுக்கு வாயைத் திறந்து பதில் சொன்னால் என்ன குறைந்து போய்விடும்? கோபம் வந்தது. விசாரித்தேன்.

"வெளியே எழுத்தர்கள் இருப்பாங்க. அவங்களைப் பாருங்க... எல்லா உதவியும் பண்ணுவாங்க!" என்றார் கடினமான குரலில்.

சற்று மேடான இடத்தில் ஒரு பெண் அமர்ந்திருந்தார். டேபிளின் மேல் 'சார்பதிவாளர்' என்கிற அடையாள அட்டை இருந்தது. நாற்பது வயதுதானிருக்கும். பட்டுச் சேலை கட்டி அமர்ந்திருந்தார். 'சித்ரபிரபா' என்று பெயர் எழுதிய அட்டையுமிருந்தது.

ஒரு எழுத்தர் ஒரு கும்பலை அவரிடம் அழைத்து வந்தார். கைநிறைய பத்திர காகிதங்கள். இவர் கேட்பதற்கு எல்லாம் அவர்கள் தலையை பலமாக ஆட்டினார்கள். அவர் கையெழுத்திட்டு முத்திரையிட்டுக் கொடுத்தார். கண் ஜாடையில் 'மேடம்' ஏதோ கேட்க, நான் பார்த்துக்கிறேன் என்கிற மாதிரி ஜாடையிலேயே பதில் சொன்னார் எழுத்தர் – குண்டாக இருந்தார். வெளியே வந்தார்.

கும்பல் சுற்றி நின்று அவரிடம் பேசியது.

"சொத்து மதிப்பை பாதிக்கு பாதி குறைச்சாச்சு. போதும்தானே?"

"ம்."

"சரி. நேத்து சொன்னதுதான். கொண்டு வந்திருக்கீங்கதானே?"

அந்தக் கும்பலில் மூத்தவராகத் தெரிந்தவர் பாக்கெட்டிலிருந்து பணம் எடுத்துக் கொடுத்தார். எண்ணினார். என் கண்களும் பார்த்தது, மனசு கூடவே எண்ணியது. மூவாயிரம். எழுத்தரின் முகத்தில் திருப்தி.

அவர்களை அனுப்பி விட்டு அலுவலகத்தினுள் மேடத்திடம் போனார். ஏழெட்டு நோட்டுகளை எடுத்து தன் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு, மீதியை மேடத்திடம் கொடுத்தார். அவர் முகத்திலும் திருப்தி. என் ஒரு மாத சம்பளம் எத்தனை எளிதாக இவர்களுக்குக் கிடைக்கிறது. மனசுக்குள் எங்கோ ஒரு முள் நெருட, மெலிதான வலி ஏற்பட்டது. நான் வந்த வேலை நினைவுக்கு வர, எழுத்தரிடம் போனேன்.

"சார் பத்திர நகல் எடுக்கணும்."

என்னைப் பார்த்த பார்வையிலேயே என்னைப் பற்றி ஓரளவுக்கு யூகித்திருப்பார் போலிருக்கிறது. ஒரு நிமிடம் எதுவும் பேசாமல் மௌனம். மறுபடி கேட்டார். "என்ன வேணும்?"

"பத்திரம் ஒண்ணு நகல் எடுக்கணும்."

"வாங்க" அழைத்துப் போனார். அலுவலகத்தின் எதிரேயுள்ள வணிக கட்டடத்தில்

எழுத்தரின் அறை. ஒரு பெண் டைப் அடித்துக் கொண்டிருந்தாள்.

"உட்காருங்க சார்."

கொண்டு வந்த பத்திரத்தை எடுத்து அவரிடம் கொடுத்தேன். வாங்கின அவரின் கை விரல்களில் மூன்று மோதிரங்கள் இருந்தன.

"இப்படிக் கிழிஞ்சு கிடக்கே?"

"இதனோட நகல்தான் வேணும்."

அதை வாசிக்க முயற்சி செய்தார். "ரொம்பப் பழைய பத்திரம் போலிருக்கு. 1920-னு போட்டிருக்கு. இருக்குமான்னு தெரியலையே?"

"......................"

"இடையில் கொஞ்சம் ரிஜிஸ்தர்கள் தீப்பிடிச்சு எரிஞ்சுப் போச்சு. இதுவும் போயிருந்தாலும் போயிருக்கும்."

எனக்குப் பகிரென்றது.

"எதுக்கும் தேடிப் பார்க்கலாம். ஒரு அப்ளிகேஷன் எழுதிக் குடுத்திட்டுப் போங்க. தேடி.... இருந்தாச் சொல்லிடுவாங்க."

"இன்னிக்கு தெரிஞ்சிடுமா சார்?"

"இன்னிக்கா?" - நக்கலாகச் சிரித்தார். அவனுக்கு எத்தனை வேலை இருக்குதோ! பத்துப் பதினைஞ்சு நாளாயிடும். எழுதிக் குடுத்திட்டுப் போங்க."

எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

"அவசரமா தேவைப்படுதா?" எனக் கேட்டார்.

"ஆமாம் சார்."

"ப்யூனைக் கூப்பிட்டு ஏதாவது குடுங்க. பத்திரம் இருக்கான்னு பார்த்துச் சொல்லிடுவான். அப்படி இருந்தா ஒரு அப்ளிகேஷன் எழுதி, பணம் கட்டிட்டுப் போயிட்டீங்கன்னா ஒரு வாரத்திலே கிடைச்சிடும்!"

யோசித்தேன்.

"ப்யூன்கிட்டே சொல்லவா?"

தயக்கமாகச் சம்மதித்தேன்.

"வாங்க" என்று மறுபடி அலுவலகத்திற்கு அழைத்துப் போனார். 'கோவிந்தராஜ்' உரிமையோடு ப்யூனை அழைத்தார். அவருக்கும் நாற்பத்தி ஐந்து வயதுக்கு மேலேயே இருக்கும். கண்கள் சிவப்பாக இருந்தன. நிறைய குடிக்கிற ஆள் போலிருக்கிறது.

"சாருக்கு ஏதோ அவசரமா ஒரு தகவல் வேணுமாம். பார்த்துச் சொல்லிடு!" என்றார். அந்தப் பேச்சிலேயே ஒரு குழைவு இருந்தது. 'ஒரு ஏமாளி மாட்டிட்டான். விட்டுடாதே' என்று சொல்லி உணர்த்துவது போலிருந்தது.

ப்யூன் என்னைப் பாசமாகப் பார்த்தார்.

கொடுத்த பத்திரத்தைப் பார்த்து ஏதோ எண்ணை பேப்பரில் குறித்துக் கொண்டார்.

"ரொம்பப் பழைய பத்திரம். தேடி எடுக்கிறது கஷ்டம்" என்றார்.

"அவசியம் வேணும்ப்பா" என்றேன்.

"சரி ஃபீஸ் குடுங்க."

"எவ்வளவு?"

"குடுங்க."

இருபத்தி ஐந்து ரூபாய் கொடுத்தேன்.

முகம் சுருங்கியது. என் முகம் பார்த்து, "இது எதுக்கு?" என்றான். ஒரு புழுவைப் பார்ப்பது போல என்னைப் பார்த்தான்.



"நான் ரெண்டாவது மாடியிலிருந்து விழுந்தும் லேசான காயத்தோட தப்பிச்சிட்டேன்!"

"நல்ல வேளையாப் போச்சு! அஞ்சாவது மாடியிலிருந்து விழுந்திருந்தீன்னா 'ஜனதா தளம்' ஆகியிருப்பே!"

— டி. செல்வன்

ஒருவேளை இவன் பணம் ஏதும் வாங்காத மனுசனோ? பீஸ் என்பதை இங்கு எங்காவது பணம் கட்டி ரசீது வாங்க வேண்டுமோ என்கிற குழப்பம் வந்தது. அவன் முகத்தைப் பார்த்தேன்.

"நூறு ரூபா குடுங்க சார்!"

"நூறு ரூபாயா? என்னப்பா இது அநியாயமா இருக்கு?" வாய்விட்டுப் புலம்பி விட்டேன். என்னை ஒருமாதிரி பார்த்தான்.

"ஒரு அப்ளிகேஷன் எழுதிக் குடுத்திட்டுப் போங்க. பார்த்து வைப்பாங்க" என்றவன், "அப்ளிகேஷன் எழுதிக் குடுத்தாலும் நான்தான் தேடி எடுக்கணும்!" என்று சொல்லிவிட்டு உள்ளே போய் விட்டான். நான் அங்கேயே நின்றேன். வெளியே வந்தவன் என்னைக் கண்டு கொள்ளவேயில்லை.

நான் எழுத்தரிடம் போனேன்.

"என்னங்க... அந்த ஆள் கோவிச்சிட்டு உள்ளே போயிட்டான்?"

"எவ்வளவு குடுத்தீங்க?"

"இருபத்தி அஞ்சு ரூபா."

"அப்புறம் கோபம் வராம என்ன வரும்? அவன் நூறு ரூபாய்க்குக் கம்மியா வாங்க மாட்டான். நமக்குக் காரியம் ஆகணும்னா குடுத்துத்தான் ஆகணும் சார். இல்லேன்னா ஊறப் போட்டுடுவான். பிடிவாதம் பிடிச்ச ஆளு" என்று என்னை மேலும் கலவரப் படுத்தினார்.


"சரி... பணம் குடுங்க. சொல்லிப் பார்க்கிறேன்."

வாழ்க்கையில் ஏதோ பெரிய தப்புச் செய்கிற மாதிரியான குற்ற உணர்ச்சியோடு நூறு ரூபாயைக் கொடுத்தேன். போய் என்னவோ சொல்லிவிட்டு வந்தார்.

"கொஞ்ச நேரம் வெயிட் பண்ணுங்க. பார்த்துச் சொல்லிடுவான்" என்றார்.

அந்த 'கொஞ்ச நேரம்' என்பது மூன்று மணி நேரத்தைத் தாண்டியது. இடையில் போய்க் கேட்க, "அவசரப்பட்டா எப்படி சார்... தேடித்தானே எடுக்கணும்?" என்று முறைப்பாக பதில் வந்தது.

பசித்தது. சாப்பிடப் போகலாம் என நினைத்தேன். நான் போன நேரத்தில் இவன் வந்து தேடினால் என்ன செய்வது என்று எதிரே இருந்த பேக்கரியில் டீ மட்டும் குடித்து விட்டு வந்தேன். மூன்றரை மணிக்கு வந்து "பத்திரம் இருக்கு சார்!" என்றான்.



"திறந்தவெளி பல்கலைக் கழகத்தில் படிக்கிறேன் என்று அப்பாவிடம் சொன்னேன்."

"என்ன செய்தார்?"

"ஒரு குடை வாங்கித் தந்தார்."

– மோகன்

எழுத்தரிடம் போய் விவரம் சொன்னேன். ஒரு விண்ணப்பப் பாரத்தை எடுத்துப் பூர்த்தி செய்தார். "இன்னிக்கு சனிக்கிழமை. உள்ளே ஆபீசிலே வாங்க மாட்டாங்க. திங்கட்கிழமை காலையில நான் குடுத்துடறேன். வெள்ளிக்கிழமை வந்து பத்திரம் வாங்கிக்குங்க" என்றார். அதில் கையெழுத்திட்டேன்.

"நூத்தம்பது ரூபா பணம் குடுங்க சார்."

"நூத்தம்பதா... எதுக்கு?"

"அதான் நகல் எடுக்க சார்ஜ். ஆபீசுல கட்டணும்!"

வேறுவழியின்றிக் கொடுத்தேன்.

"ஸ்டாம்ப் பேப்பர் வேணும். இருபது ரூபாய்க்கு ஸ்டாம்ப் பேப்பரும், பத்து அடிஷனல் பேப்பரும் வாங்கிட்டு வந்துருங்க!" என்றார். வாங்கி வந்து குடுத்தேன்.

"பத்திரம் எழுதறவனுக்கு இருபது ரூபா தரணும் சார்."

"அது யார் எழுதுவா?"

"அதுக்குத் தனி ஆள் இருக்கு. குடுத்தாத்தான் சுத்தமா எழுதித் தருவான்!" – மனசு நொந்து கொடுத்துவிட்டுக் கிளம்பினேன்.

வீட்டில் வந்து அமுதாவிடம் முந்நூறு ரூபாய் செலவாயிற்று என்று புலம்பினேன்.

"சும்மா புலம்பாதீங்க. போனால் போகட்டும். வீடும் நிலமும் ரெண்டு லட்சத்திற்குத் தேறும்" என்று சமாதானம் சொன்னாள்.

வெள்ளிக்கிழமை!

வீட்டில் மனைவிக்கு உடம்பு சரியில்லை என்று பொய் சொல்லி லீவு வாங்கிக் கொண்டு ரிஜிஸ்தர் ஆபீசுக்குப் போனேன்.

என்னைக் கண்டதும் எழுத்தர் முகம் திருப்பிக் கொண்டார் – பார்க்காதவர் போல். ஒருவேளை அடையாளம் மறந்திருக்கும் என்று போய் என்னை நினைவு படுத்தினேன்.

"திங்கட்கிழமையே உங்க அப்ளிகேஷனை உள்ளே குடுத்தாச்சு!" என்று ரசீது காட்டினார். அதில் 46 ரூபாய்க்கு மட்டும் கணக்கிருந்தது.

"உள்ளே போய்க் கேளுங்க" என்றார்.

உள்ளே போய், பதில் பேசாது ஜாடை காட்டிய அதே பெண்மணியிடம் ரசீதைக் கொடுத்து, "இதனோட பத்திர நகல் வேணும் மேடம்!" என்றேன். என்னை மேலும் கீழும் ஒரு பார்வை பார்த்தார்.

"உங்களது 221வது நகல். இப்பத்தான் இருநூறாவது நகல் எழுதிட்டிருக்கேன். பத்து நாள் கழிச்சு வந்து பாருங்க" என்றார்.

"என்னங்க, இன்னிக்கு ஆகும்னு சொன்னீங்க?"

"நான் சொன்னேனா?"

"அந்த எழுத்தர் சொன்னாரே!"

"அப்ப அந்தாளையே போய்க் கேளு" – எரிந்து விழுந்தார். எனக்குள் கோபம் வந்தது.

மரியாதை தெரியாத ஜென்மமாக இருக்கிறதே? எழுத்தரிடம் போனேன்.

"என்னங்க. பத்து நாள் கழிச்சு வரச் சொல்லுது அந்தம்மா!"

"என்ன பண்றது? கவர்மெண்ட் ஆபீசு வேலை. அப்படித்தான் நடக்கும்..."

"வெள்ளிக்கிழமை கிடைக்கும்னு சொன்னீங்களே?"

"சொன்னேன்தான். இப்ப ஆகலை. என்ன பண்ண முடியும்?"

"இப்படிப் பேசினா எப்படி சார்?"

"எப்படிப் பேசறது?"

"நாற்பத்தியாறு ரூபாதானே கட்டியிருக்கு. நூத்தம்பது ரூபா கேட்டதும் மறு பேச்சு பேசாம எடுத்துக் குடுத்தேனே. இதுக்குத்தானா?"

"பணத்தை நானா வச்சுக்கிட்டேன். உள்ளே கட்டியாச்சு."

"கட்டியிருந்தா நூத்தம்பதுக்கு ரசீது குடு பார்க்கலாம்."

"இப்ப என்ன பண்ணணும்கிறீங்க?"

"எனக்கு பத்திர நகல் வேணும்."

"ரெஜிஸ்தரம்மாகிட்டே போய் நான் தூரத்திலே இருந்து வந்திருக்கேன்னு ஏதாவது சொல்லிப் பாருங்க."

"நீங்க வந்து சொல்லுங்களேன்."

"இதுக்கெல்லாம் நான் வந்து சொன்னா என் லைசென்ஸ் கேன்சலாயிடும்."

மகா எரிச்சல் வந்தது. உள்ளே சார்பதிவாளரிடம் போனேன்.

"மேடம் நான் லீவு போட்டுட்டு வந்திருக்கேன். எனக்கு லீவு கிடைக்கிறதே சிரமம். அதுவுமில்லாம பொள்ளாச்சியிலிருந்து வந்திருக்கேன்" என எனது நிலையை பொறுமையாக எடுத்துச் சொன்னேன்.

"எல்லாரும் அவசரம் அவசரம்னு ஆளுக்கொரு கதை சொல்றாங்க. எதை நம்பறது? சரஸ்வதி, இவர் பத்திரம் என்னாச்சு?"

"இன்னும் இருபது பத்திரம் எழுதணும் மேடம். ஒரேயடியா அவசரப்படறாரு."

"இங்கே எழுதறதுக்கு ஒரே ஆள்தான் இருக்கு. வேற வழியில்லை. பத்து நாள் கழிச்சு வந்து பாருங்க."

என்ன செய்வது என்று புரியவில்லை.

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 1999

பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள்:

1) **கண்ணாடியில் என்னைப் பார்த்தேன்** – ஆ. உமாசங்கர் *(அறிமுக எழுத்தாளர்)*

2) **சிவப்புக் கம்பளமும் சில பேரீச்சம் பழங்களும்** – கா.சு. வேலாயுதன்

3) **திவ்ய தரிசனம்** – காஞ்சனா தாமோதரன்

4) **மகாதாந்திரிக் மகிமை** – எஸ். கிருஷ்ணமூர்த்தி

5) **அவ படிச்சவ ஆத்தா** – ராஜலட்சுமி *(அறிமுக எழுத்தாளர்)*

6) **பயங்கள்** – ஸ்ரீகுரு

7) **வெந்து தணிந்தது** – நா. சுகந்தி

8) **அடிவாரம்** – நா. வே. அருள்

9) **பூமி இழந்திடேல்** – ஜூனியர் தேஜ்

10) **சிறு சாவு** – ஓங்காரநாத்

11) **அன்புள்ள அம்மா** – எஸ். வசந்தகுமார்

12) **அப்பாவுக்கு அஞ்சலி** – சுகன்யா

13) **ஒரு அப்பத்தாவின் கதை** – கனகராஜன்

எழுத்தரிடம் போனேன்.

“ரொம்ப அவசரமா?” என்று கேட்டார்.

“என்னால அடிக்கடி லீவு போட முடியாது. ஒருநாள் லீவு போட்டா நூறு ரூபா சம்பளம் போச்சு” என்றேன் விரக்தியாக.

“ஒரு இருநூறு ரூபாய் கொடுங்க. அந்த எழுதற அம்மாக்குக் குடுத்து இன்னிக்கே எழுதி வாங்கிடலாம்'' என்றார். ஒரு முறைப்பு முறைத்தேன் அவரை.

வயிற்றில் பசி வேறு. கோபம் கோபமாக வந்தது. எல்லாம் அரசு ஊழியர்கள். மக்கள் வரியாகத் தருகிற ஒவ்வொரு ரூபாயிலிருந்தும் சேர்கிற பணத்தை, அந்த மக்களுக்கு சேவை செய்வதற்காக, இவர்களுக்கு சம்பளமாக அள்ளி அள்ளித் தருகிறது அரசாங்கம். அதுவும் போதாது என்று இவர்கள் செய்யவேண்டிய முறையான வேலைக்கே... கடமைக்கே இப்படிப் பணம் பிடுங்குகிறார்களே என்று வேதனையாக இருந்தது.



“முக்கால் மணி நேரம் மானேஜர் கத்தித் தீர்த்துட்டாரு...”
“எதுக்கு?”
''அரைமணி நேரம் பர்மிஷன் கேட்டதுக்குத்தான்!”
- உ. ராஜாஜி

போன மாதம் முழுக்க ஓவர்டைம் பண்ணி சம்பாதித்த பணம் ஒரே நாளில் போயிற்று. இனி மறுபடியும் ஒருநாளோ... இரண்டு நாளோ லீவு எடுத்தால்தான் இதை வாங்க முடியும் போலிருக்கிறது. என்ன செய்வது?

உள்ளே போனேன்.

“எப்பத்தான் வர்றது மேடம்?”

“அடுத்த வாரம் வந்து பாருங்க. ஆகியிருந்தா வாங்கிட்டுப் போங்க.”

''என்ன இப்படிப் பொறுப்பில்லாம பதில் சொல்றீங்க?”

“என்னது?” எரிந்து விழுந்தார். “போ. போயிட்டு அடுத்த மாதம் வா!” என்றார் ஒருமையில்.

எனக்குள் கட்டுப்பாடுகள் உடைந்தன.

“மரியாதை குடுத்துப் பேசும்மா. நீ கவர்மெண்டு ஸ்டாஃப்புன்னா பெரிய கொம்புன்னு நினைப்பா?” என்றேன் சப்தமாக. பலர் திரும்பிப் பார்த்தார்கள். பதிவாளரிடம் போனேன்.

“மேடம்... இருபது நாள் ஆகும்னா... இருபது நாள் ஆகும்னு சொல்லுங்க.. இப்படிப் பொய் பேசி எங்களை அலைய வைக்காதீங்க.”

“உங்க அவசரத்துக்கு எந்த வேலையும் ஆகாது.”

“அப்புறம் எதுக்கு பணத்தைக் கைநீட்டி வாங்கினீங்க?”

“யார் வாங்கினா?”

“யார் வாங்கலை? எல்லார்க்கும் பங்கு தானே. நீங்க ஒரு நேர்மையான அதிகாரியா இருந்திருந்தா, முதலிலேயே இதான் விதிமுறை. இப்படிப் பண்ணுங்கன்னு சொல்லியிருக்கணும். நான் 46 ரூபாயைக் கட்டிட்டு பதினைஞ்சு நாளோ இருபது நாளோ கழிச்சு வந்து பார்த்திருப்பேன். எழுத்தரைப் போய்ப் பாருங்க... எல்லாம் உதவி பண்ணுவாருன்னு சொன்னீங்க. என்ன உதவி பண்ணினார்? உங்க ப்யூன் நூறு ரூபா வாங்கிட்டான். எழுத்தர் 46 ரூபாய்க்கு 190 ரூபாய் வாங்கிட்டார். கேட்டா உங்களுக்குப் பங்குன்னு சொல்றார். எதுக்கு? நான் கேட்டதைப் பண்ணித் தரத்தானே பணம் வாங்கினீங்க? இப்ப யாருமே பொறுப்பா பதில் சொல்லாம எனக்கென்னன்னு பேசினா என்ன அர்த்தம்? இன்னும் 200 ரூபாய் குடு... இன்னிக்கே பத்திரம் தர்றேன்னு புது வியாபாரம். ச்சே! முதல்லே மரியாதையா பேசக் கத்துக் குடுங்க, உங்க ஆபீஸ்ல வேலை செய்யறவங்களுக்கு. எங்கிட்டே வாங்கற வரிதான் உங்க சம்பளம்னு மனசில இருக்கட்டும்!''

ஒரு ஆண் அலுவலர் எழுந்து வந்தார்.

“என்னப்பா கத்திட்டிருக்கே? இந்தப் பக்கம் வா. மேடத்துகிட்டே இப்படி எல்லாம் பேசினா உள்ளே புடிச்சுப் போட்டுடுவாங்க” என்று என்னை அந்தப் பக்கமாக இழுத்துப் போனார்.

“என்ன பிரச்னை?”

“ஒரு பத்து ரூபா வேலைக்கு இருபது ரூபா செலவு பண்ணினா போனா போதுன்னு விட்டுடலாம். அம்பது ரூபா

வேலைக்கு மூந்நூறு ரூபா பணத்தை வாங்கிட்டு, எல்லாரும் சட்டம் பேசிட்டு இருக்கிங்க. என்ன ரூல்ஸ் தெரியுது பொது ஜனத்துக்கு. அரசாங்க ஆபீஸ் நடைமுறை இன்னதுன்னு தெரியாததினாலதானே, இஷ்டத்துக்குப் பணம் சம்பாதிச்சிட்டு இருக்கிங்க?"

"அதான் நோட்டீசு போர்டுல போட்டிருக்கே... படிச்சுத் தெரிஞ்சுக்க வேண்டியது தானே!" என்றார் எழுதுகிற பெண்மணி.

"ஏழு வருசத்துக்கு முன்னால எழுதி ஒட்டின மாதிரி இருக்கு. உன்னால ஒரு வரி அதில படிச்சு அர்த்தம் சொல்ல முடியுமா?" – பதிலுக்கு அவரிடம் எகிறினேன்.

"இப்ப என்ன பண்ணனும்கிறீங்க?"

கூட்டம் சேர்ந்து விட்டது. "ஒண்ணுமில்லே. போங்க சார்." ப்யூன் எல்லோரையும் விரட்டினான்.

"எனக்குப் பத்திர நகல் வேணும் சார். உங்களை மாதிரி எட்டாயிரம், பத்தாயிரம்னு சம்பளம் வாங்கலை நாங்கள். மாசம் மூவாயிரத்துக்குப் படாதபாடு படறோம். உங்களுக்கு நூறும், இருநூறும் சாதாரண தொகையா தெரியலாம். எங்களுக்கு அது பெரிய தொகை. ஒருநாள் லீவு எடுக்க எத்தனை பேருக்குப் பதில் சொல்லி, எத்தனை பேர் முன்னால கை கட்டி நிக்க வேண்டியிருக்கு தெரியுமா? அந்த வேதனை எல்லாம் உங்களுக்குத் தெரியாது சார். நீங்க எல்லாம் அரசாங்க ஊழியர்கள். பணத்தையும் பிடுங்கிட்டு எதுக்கு எங்களை இப்படி அலைய வைக்கறீங்க?" என்றேன். எல்லோரும் என்னையே பார்ப்பது போலிருந்தது.

"போயிட்டு செவ்வாய்க்கிழமை வாங்க சார். கண்டிப்பா உங்க பத்திரம் ரெடி பண்ணி வைக்கிறோம்" என்றார்.

பதிவாளரிடம் போனேன்.

"சாரி மேடம். ஏதோ டென்ஷன்ல கத்திட்டேன். செவ்வாய்க்கிழமையாவது பத்திரம் ரெடி பண்ணிக் குடுத்திடுங்க!" என்றேன். அவர் ஏதும் பேசாது மௌனமாக இருந்தது மனசை உறுத்தியது.

என் கோபம் தவறோ, இதன் விளைவு எதிரானதாக இருந்து விடுமோ? எல்லோர் மாதிரியும் நானும் சகித்துக் கொண்டு போயிருக்க வேண்டுமோ? கோபப்பட்டு என்ன சாதித்து விட்டேன். அடுத்த வாரம், அடுத்த வாரம் என்று இழுத்தடித்தால் என்ன செய்வது? எனக்குள் ஒரு பயம் வந்தது. வெளியே வந்து பூவரசமரத்தடியில் நின்றேன். பசித்தது. ப்யூன் என்னிடம் வந்தான். எழுத்தர் என்னை முறைத்துப் பார்த்துவிட்டுப் போனார்.

"என்ன சார் நான் பணம் வாங்கிட்டேன்னு மேடத்துக்கு முன்னால அத்தனை சத்தமா கத்தறீங்க? எனக்கா குடுத்தீங்க? உங்க காரியம் ஆகணும்தானே குடுத்தீங்க!" என்றான்.

நான் மௌனமாக நின்றேன்..

"பத்திரம் ஆபீசுக்குள்ளேதான் இருக்கு. நினைச்சா பத்திரத்தை எடுத்து எரிச்சிட்டு பத்திரமே இல்லை. பதிவு பண்ணாததுன்னு சொல்ல முடியும். என்ன பண்ணுவீங்க?



"இன்டர்வியூ நடக்கும் இடம் ரொம்ப தூரம் ஆச்சே. நடந்தே போகிறீர்களே."

"வாக் இன் இன்டர்வியூ என்று போட்டிருக்கிறார்களே!"

– மோகன்

கோர்ட்டு, கேஸ்னு போவீங்களா? போனா பத்து வருசமாயிடும் பத்திரம் வாங்கறதுக்கு. ஏதோ படிச்சவங்க மாதிரி இருக்கிங்கன்னு நினைச்சேன். இப்படிக் காட்டுத்தனமா நடந்து அசிங்கம் பண்ணிட்டீங்க. இனிமேலாவது கவர்மெண்ட் ஆபீசுக்கு போனா எப்படி நடக்கணுமோ, அப்படி நடந்துக்குங்க. இல்லேன்னா எந்த வேலையும் நடக்காது" என்று பெரிதாக அறிவுரை சொல்லி விட்டு விலகிப் போனான்.

படித்தவர்களின் இலக்கணம் இதுதான் என்று உணர்ந்ததால் எழுந்த மனவேதனை அதிகரித்தது. பஸ் நிறுத்தம் நோக்கி நடந்தேன்.

எனக்கு அந்த பத்திரம் கிடைக்குமா... இல்லையா என்பது கேள்விக்குறிதான்.

ரஜினி ரசிகர்கள் யாருக்கு வோட்டுப் போட...?

● ஆர்.பி. ஜெயசந்திரன்,
திருவெள்ளறை.

? 'கல்வியில் சரஸ்வதி இல்லை; லட்சுமி குடிபுகுந்து விட்டாள்' என்கிறாரே சேஷன்?

! சரஸ்வதியைத் தேடுவதே லட்சுமியை அட்ரஸ் விசாரிப்பதற்குத்தானே!

● எம். அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.

? பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவது கலைஞர் ஆட்சியிலும் தொடர்கிறதே?

! பத்திரிகையாளர்கள் மேல் விழுகிற ஒவ்வோர் அடியும் தம் மேல் விழுகிற அடி என்று கலைஞர் முன்பே சொல்லி விட்டார். ஆகவே அடி வாங்குவது பத்திரிகையாளர்கள் அல்ல; கலைஞர்தான்.

● ராணி குருநாதன், ஈரோடு – 3.

? டிக்கெட் பதிவுசெய்ய ஒரு ரயில்வே குமாஸ்தா, ஜவானிடம் 'ஸ்மிங்' கேட்டிருக்கிறாரே?

! எதிரிகள் நாட்டுக்கு வெளியே மட்டுமில்லை; உள்ளேதான் அதிகமாக இருக்கிறார்கள். இவர்களை இந்த ஜனங்களால் வெற்றி கொள்ள முடியவில்லையே என்று நொந்து போயிருப்பார்.



• புதுமொழி!

● கே.ஆர். ரவீந்திரன், சென்னை – 1.

? இளமை, முதுமை – எழுத்தாளனுக்குப் பெருமை சேர்ப்பது எது?

! முதிர்ந்த சிந்தனை + இளமையான எழுத்து – இந்த காம்பினேஷனே சிறப்பு!

● செ. சல்மான், பாம்பன்.

? பத்தில் ஒரு பகுதி மூளையாவது இருந்தால், இனி 'ஜெ'யுடன் அரசியல் தொடர்பு வைத்துக் கொள்ள மாட்டேன் என்று சுவாமி கூறியிருக்கிறாரே?

! கடவுளே! இதுவரை அது கூட இல்லையா?

● ஆர். சாலமோன், ஆலங்குளம்.

? 'ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டி' என்னும் பழமொழி இக்காலத்துக்கு ஒத்துவருமா?

! சோனியா, ஜெ, மமதா, மாயாவதி, சிவபார்வதி – இந்தியா போண்டியாக இது போதாதா...?!

● த. சத்தியநாராயணன்,
அயன்புரம்.

? நான் ரஜினி ரசிகன். யாருக்கு வோட்டுப் போட வேண்டும்?



• ஆழமான அர்த்தம்!

! அவர் சொதப்பி விட்டதாகச் சிலர் என்னுகிறார்கள். ஆனால், 'தேவையற்ற தேர்தல் வருவதற்குக் காரணமானவர்களைத் தண்டியுங்கள்' என்று தெளிவாகவே பேசியுள்ளார். அ.தி.மு.க. அணிக்கு வோட்டுப் போடக் கூடாது என்றால், எதிரணிக்குப் போட வேண்டும் என்றுதானே அர்த்தம்!

● வே. ஈஸ்வரன்,
இராஜபாளையம்.

? நம்பிக்கை வோட்டெடுப்பின் போது த.மா.கா. நடு நிலைமை வகித்திருந்தால் இந்தத் தேர்தல் தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்பதையும் தானே மறைமுகமாக ரஜினி கூறியுள்ளார்?

! அடேயப்பா! ரஜினியின் அறிக்கையில் இத்தனை

அர்த்தமா?!

● கே. ஆர். வெங்கடேஷ், சீர்காழி.

? மூன்றாவது அணி அமைத்துள்ளாரே மூப்பனார்; யாருக்கு அதனால் லாபம்? யாரைப் பிரதமராக நிறுத்தி வோட்டுக் கேட்கப் போகிறார்?

! ஊழலற்ற, மதச்சார்பற்ற ஒருவர் பிரதமர் பதவிக்கு வந்தால் ஆதரிப்போம்; இல்லையேல் நல்ல எதிர்க்கட்சியாக விளங்குவோம் என்று சொல்லித்தான் வோட்டுக் கேட்க வேண்டும். இதனால் நீண்ட கால நோக்கில் நேர்மை அரசியலுக்கு லாபம் உண்டு என்பதை மறுக்க முடியாது.

● ஆர். சுப்பராவ், சென்னை – 61.

? 'பார்லிமெண்ட் தொகுதிகளில் பாதி அளவு கூட போட்டியிடத் திராணியற்ற காங்கிரஸ் எப்படி நிலையான ஆட்சியைத் தர முடியும்?' என்று ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு கேட்கிறாரே?

! தனி மெஜாரிட்டி பெற்று நிலையான ஆட்சி வழங்குவது ஒரு வழி. கூட்டணியினரின் ஆரோக்கியமான ஒத்துழைப்புப் பெற்று நிலையான ஆட்சி வழங்குவது இரண்டாவது வழி. காங்கிரஸ் போகிற போக்கு இரண்டுங்கெட்டான் வழி! இதை உணர்ந்துதான் பேசுகிறார் சந்திரபாபு நாயுடு.



• மனிதர்களுக்காக....

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? நாங்கள் எப்போதும் ஏழை மக்களின் காவலராக இருப்போம் என்று ஜெயலலிதா கூறுகிறாரே?

! இன்னும் கொஞ்ச நாள் போனால், 'நாங்க கோடி கோடியா சுருட்டினது கூட ஏழைகளுக்கு உதவத்தான்' என்று கூட 'ரீல்' விடுவார். நம்ம ஜனங்க நம்பவும் செய்வாங்க!

● எஸ். அப்துல் மஜீத், நாவினிப்பட்டி.

? சார், நான் ஒரு முஸ்லிம். ஆனால் முஸ்லிம் லீகின் உறுப்பினன் இல்லை. திராவிட இயக்கங்களின் ஆதரவாளன். என் போன்று பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் மதவாதத்தை வெறுப்பது தராசுக்குத் தெரியுமா?

! தெரியுமே! அதனால்தான் மதவாத அரசியல் வேணாம் வேணாம்னு திரும்பத் திரும்பச் சொல்கிறோம்.

● ச. தங்கமணி, சத்திரப்பட்டி.

? கார்கில் வெற்றிக்கு பா.ஜ.க. உரிமை கொண்டாடுவதை அனுமதிக்க மாட்டேன் என்று சோனியா கூறியிருப்பது பற்றி?



• தாக்கப்படுபவர்!



• ஐயோ, பாவம்!



• கல்விக் கவலை!

! கார்கில் வெற்றிக்கு முழு உரிமையும் கொண்டாடக் கூடியவர்கள் முப்படையினர் மட்டுமே. தொடக்கத்தில் கவனிக்காமல் விட்டு ஏமாந்ததற்கு வேணுமானால் பி.ஜே.பி. உரிமை கொண்டாடலாம். குறிப்பாக ஜார்ஜ் பெர்னாண்டஸ். ஆனால், தேர்தல் கூட்டணியில் அவரது சமதா கட்சி ஆதரவும் தேவைப்படுவதால் பிரதமரால் அவரது ராஜினாமாவைக் கூட கோர முடியவில்லை.

● எஸ். டி. மலை, கோவை – 9.

? சீனப் போர் சமயம், பொற் கோயிலில் தீவிரவாதிகள் புகுந்த சமயம், இலங்கைக்கு நம் அமைதிப்படை அனுப்பப்பட்ட சமயம்... நம் உளவுப் படை படுதோல்வி அடைந்த சமயங்கள் இவை. அப்பொழுதெல்லாம் காங்கிரஸ்தானே ஆண்டது.

நீங்கள் கேட்டவை — தராசு

சோனியாவுக்கு இவை மறந்து விட்டதா?

! சோனியாவுக்கு மறக்கவில்லை. மக்கள் மறதியில் அவர் நம்பிக்கை வைக்கிறார். அது ஒருபுறமிருப்பினும், காங்கிரஸின் முந்தைய கவனக் குறைவுகள், தவறுகள் மூலம் இன்றைய பி.ஜே.பியின் தவறுகளை யாரும் நியாயப் படுத்திவிட முடியாது.

● ஜோம்பூர் எஸ். ராமையா, புதுவை – 8.

? அமரர் கல்கி அவர்களது பெரிய சாதனையாக நீங்கள் எதை எண்ணுகிறீர்கள்?

! சிறிதும் பெரிதுமான ஆயிரம் பணிகளுக்கிடையே அவர் மனிதர்களுக்குப் பிரத்யேகமாக நேரம் ஒதுக்கி ஆத்மார்த்தமாகப் பழகியதைத்தான்.

❑ ரூ. 50 பரிசு பெறுபவர் : வெ. ஈஸ்வரன், A64, தென்றல் நகர், ராஜபாளையம்.

ஒரே ஒரு வாரம் நான் கேஷுவல் லீவ் எடுத்துக்கிட்டா நாட்டுல எத்தனை எதிர்க் கட்சிக்காரங்க வீர அறிக்கை விட ஆரம்பிச்சிடறாங்க? 'சுமித் தமிழை' ஏற்காதீர்னு ஒரு தமிழ் ஸ்காலர் எடிடருக்கு லெட்டர் எழுதறார். வேற ஒருத்தர், 'முன்னமாதிரி ஜோக் சொல்லாத சுமியும் ஒரு சுமியா'ன்னு கூரியர் அனுப்பறார். இன்னொருத்தர் 'சிறுபத்திரிகைகள் பத்தி எழுதறேன்னு சொல்லிட்டு எட்டரை வாரமா டபாய்க்கறியே'ன்னு என் பேச்சு காய் விடறார்...

இதெல்லாம் போன ஒரு வாரம் என்னை எதிர்பார்த்து கண் பூத்து போயிட்டதோட வருத்தம் கலந்த ரியாக்ஷன்தான்னு பாஸிடிவா எடுத்துக்கறேன்.

• • •

இன்டர்நெட்ல வர்ற ரெண்டு தமிழ்ப் பத்திரிகைகளையும் அப்பப்ப வாட்ச் பண்ணிட்டு வரேன். மின்னம்பலத்துல சங்கப்பாடல்களைப் பத்தி சுஜாதா எழுதற சீரியலும் அரஸ் போடற பொலிடிகல் கார்ட்டூன்ஸும் இன்ட்ரஸ்டிங்கா இருக்கு. டெக்னாலஜி எவ்வளவோ வளர்ந்துருக்கே. கார்ட்டூனை அனிமேட் பண்ணி கொஞ்சம் ஆட, அசைய வைக்கலாமேன்னு தோணிச்சி.

சிறுகதைகளைப் பொறுத்தவரைக்கும் 'ஆறாந்திணை', அம்பலம் ரெண்டுமே ஏ கிளாஸா பண்ணிட்டிருக்காங்க. ரொம்பப் பெரிய ரைட்டர்ஸெல்லாம் இப்ப மின்கதை எழுதிட்டிருக்காங்க. மணியம் செல்வன், மாருதி படங்களோட A4 ஷீட்ல ப்ரிண்ட் அவுட் எடுத்துப் படிக்கும்போது ரைட்டர்ஸ் நமக்காக மட்டுமே எழுதி அனுப்பியிருக்காங்கன்ற மாதிரி ஒரு ஃபீலிங் வருது.

• • •

விஜய் டீவில ஒரு மணி நேர டெலிஃபிலிம் ஒண்ணு பார்த்தேன் - கார்காலம்.

கார் தயாரிப்பு கம்பெனி லாக் அவுட் ஆகி, தொழிலாளிகள் பலர் அவஸ்தைப் பட்டது, சோத்துக்கே வழியில்லாம சிலர் ஸூய்ஸைட் பண்ணிக்கிட்டது - இதைப் பின்புலமா வெச்சி ஒரு த்ரில்லர்!

ஹைவேல கார்ல போறவங்களை நிறுத்தி, லிஃப்ட் கேட்டு ஏறி, கொலை பண்ணிட்டுப் போயிடற ஒரு சைக்கோ. அவனோட செயலுக்கான பின்னணி. இதான் விஷயம்.

மினிமம் ஃபெஸிலிடீஸோட ரொம்ப நீட்டா பண்ணியிருந்தாங்க.

நல்ல சிறுகதை எழுத்தாளரா அறிமுகமாகி, பரவலா நிறைய எழுதிட்டிருந்துட்டு, திடீர்னு அப்ஸ்காண்ட் ஆயிட்ட ம.வே. சிவகுமாரை அதுல 'டைரக்டர்'னு டைட்டில்கார்டுல பார்த்தேன். ஸெகண்ட் இன்னிங்ஸ் போலருக்கு.

• • •

சிறு பத்திரிகைகளெல்லாம் ரொம்பப்



பெரிசு பெரிசா வர ஆரம்பிச்சிருக்கற ஸீஸன் இது. 'சொல் புதிது' - லேட்டஸ்ட் வரவு. பேப்பர் மசால் தோசை சைஸ்ல, நல்ல கனம்! (விஷயங்களும்) இஷ்யூல 69 சதவீத இடஒதுக்கீடு ஜெயமோகனுக்கு. நவீன மொழியியல் சம்பந்தமா அவர் எழுதியிருக்கற ஒரு கட்டுரையும் கமலாதாஸோட ஒரு ஷார்ட் ஸ்டோரியும் (மாலுமி சீருடை அணிந்த சிறுவன்) புக் ரெவ்யூஸும் பிரமாதமா வந்திருக்கு. இந்த வருஷம் கதா அவார்ட் வாங்கியிருக்கற சூத்ரதாரிதான்

இதனோட எடிட்டர். இயற்கை உரத் தயாரிப்பாளர்களும் 'டை கெமிக்கல்' ஆசாமிகளும் விளம்பரங்கள் மூலமா சிறு பத்திரிகைகளை போஷிக்க முன் வந்திருக்கறது ஆரோக்கியமான விஷயம்.

• • •

சினிமாக்காரங்க கலைநிகழ்ச்சி நடத்தினாங்க. பத்திரிகைக்காரங்க டைரக்டா நிதி கலெக்ட் பண்ணாங்க. பாலிடீஷியன்ஸ் உண்டி குலுக்கினாங்க. கோபால் பல்பொடிகாரங்க கூட விக்கற சரக்குல இத்தனை பர்ஸன்டேஜ் கார்கில் நிதிக்குன்னு அனவுன்ஸ் பண்ணாங்க.

இதெல்லாத்தை விடவும் எனக்குப் பிடிச்சது, ஓவியர்கள் பத்மவாசனும் எர்னஸ்டும் தனித்தனியா பெயின்டிங் எக்ஸிபிஷன் நடத்தி, வசூலான தொகையை கார்கில் நிதிக்கு அனுப்பினது! (பத்மவாசன் கண்காட்சில செவன்டிஃபைவ் தௌஸண்ட் கலெக்ட் ஆச்சாம்.)

மான அனுபவத்தைத் தரும். (அஃப்கோர்ஸ், அங்கங்க அவரோட ட்ரேட்மார்க் இல்லாம இல்லை.)

'சில்க் ஸ்மிதாவின் நினைவுக்கு' சமர்ப்பணமாகியிருக்கற இந்தப் புஸ்தகம் அதனோட முதல் பக்கத்திலேருந்து பல கேள்விகளை எழுப்ப ஆரம்பிக்குது. வாழ்க்கையோட நெருடலான பக்கங்களை மட்டுமே சாரு தனக்கான சப்ஜெக்டா நம்பி, எடுத்துக்கறார். தீவிரம் - உக்கிரம் - வக்கிரம்- அக்கிரமம் எல்லாத்தையும் அதனோட கடைசி எல்லை வரைக்கும் ஒரு வேட்டை நாய் மாதிரி விரட்டிட்டுப் போய் ஆராயறது அவரோட எழுத்தின் பொதுவான குணமா இருக்கு. Throughout the stories - அந்த ஹ்யூமரும் ஸடையரும் மட்டும் இல்லாட்டா, இந்தக் கதைகளைப் படிக்கறதே ஒரு ராட்சஸ அனுபவமா இருக்கும்.

நடுநடுல 'என் முதல் ஆங்கிலக் கடிதம்', 'உன் முகம்', 'மயக்கம்'னு சில சுலபமான கதைகளையும் ரிலாக்ஸ் பண்ணிக்கத் தரார்.

கட்சி மாற அழைக்கிறேன்!

கேக்கறதுக்கே சந்தோஷமான விஷயமா இல்லை? வீரர்களின் உயிர் இழப்புகள் ஈடுசெய்ய முடியாததுன்னாலும் நமக்கு எவ்ளோ தேசபக்தி இருக்குங்கறதை நமக்கே எடுத்துக்காட்ட இந்த யுத்தம் எல்லாருக்குமே ஒரு கருவியா பயன்பட்டிருக்கு. பைதவே, ரெண்டு ஆர்டிஸ்ட்ஸுக்கும் நம்ம ஹாட்ஸ் ஆஃப்!

• • •

சாரு நிவேதிதாவோட முதல் சிறு கதைத் தொகுதி 'நேநோ' வெளி வந்திருக்கு. அவரோட 'எக்ஸிஸ்டென்ஷியலிஸமும் ஃபேன்ஸி பனியனும், ஸீரோ டிகிரி நாவல்களை மட்டும் படிச்சுட்டு (அல்லது கேள்விப்பட்டு) அவரைப் பத்தி 'ஒரு மாதிரி'யான அபிப்பிராயம் வெச்சிட்டிருக்கறவங்களுக்கு இந்த கலெக்ஷன் வேற வித

அவசர உலகத்துக்கேத்த, ஒரு மாதிரி வெண்ணெய் தடவி, வழுக்கிட்டுப் போற ஸ்டைல் ஒண்ணைப் பிரத்தியேகமா வெச்சிட்டிருக்கார் சாரு. ரிப்போர்டிங் ஸ்டைலுக்கும் இதுக்கும் அரையே அரைக்கால் சென்டிமீட்டர் வித்தியாசம்தான். ஆனா, எந்த இடத்திலேயும் நேரேஷன் ரிப்போர்டிங் ஆயிடாம படு ஜாக்கிரதையா நகர்றது.


போஸ்ட் மார்டன் ரைட்டிங்ஸ் தமிழ்ல இன்னும் பரவலாகாத சூழ்நிலைல இவரோட எழுத்து வெறும் அதிர்ச்சி மதிப்புக்கானது மட்டும்'னு ஒதுக்கப்படறதுக்கு சான்ஸ் நிறைய இருக்கு. இந்தக் கதைகளுக்கு நிஜமான வால்யூ இருக்கான்றதை பத்து பதினஞ்சு வருஷம் காத்திருந்துதான் தெரிஞ்சுக்கணும். (கிரணம் வெளியீடு, 53B, திருவி.க. தெரு, போஸ்டல் ஆடிட் காலனி சின்மயா நகர், சாலிகிராமம், சென்னை - 93)

— சுபி




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

நீங்க பல்லைக் கடிச்சிட்டு இருக்க வேண்டிய நேரம் இது. காரிய தாமதங் களைத் தவிர்க்கவே முடியாது. அலைச்சலும் மன சஞ்சலமும் கூடும். வியாபாரிங்க அகலக் கால் வெக்காம இருக்கறது நல்லது. உடல் ஆரோக்கியத்துலேயும் கவனம் செலுத்தணும். சிலருக்கு உஷ்ண வியாதிகள் ஏதும் வரலாம். கணவன், மனைவி உறவு சீரா இருக்கும்னாலும் உங்க வாழ்க்கைத் துணைவி/துணைவர் ரொம்ப இடிஞ்சி போறாப்பல ஏதாவது விஷயம் நடக்க லாம். நீங்கதான் அனுசரணையா நடந்துக் கணும்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

எவ்வளவோ பிளான் பண்றீங்க. ஒண்ணும் ஒர்க் அவுட் ஆகாம மனசு சோர்ந்து போயிருக் கீங்களா? கவலைய விடுங்க. இந்த வாரம் நீங்க எதிர்பார்த்திட்டிருக்கற பெரிய வாய்ப்பு ஒண்ணு உங்களைத் தேடி வந்து கதவைத் தட்டும். வழக் குகள் சுமுகமா தீரும். சட்டம், காவல் துறை யினருக்குப் புகழ் சேரும். அடிப்படை வாழ்க்கை வசதிகள் கூடும். சிலர் வெளிநாடு போவாங்க. ஆபீஸ்ல சில்லறைப் பிரச்னைகள் கொஞ்சம் படுத்தும்னாலும் சமாளிச்சிடுவீங்க.



மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

உங்க சாமர்த்தியத்தால் பல காரியங்களை சாதிப்பீங்க. நண்பர்களும் உறவினர்களும் உதவத் தயாரா இருக்கறதால, துணிஞ்சி எந்தக் காரியத்தையும் தொடங்கலாம். பணப் பிரச்னை இருக்காது. சிறு தொழிலதிபர்களுக்கு புது ஒப்பந் தங்கள் வந்து சேரும். பேராசிரியர்களுக்கும் அறிஞர்களுக்கும் அரசு அனுகூலம் அமோகமா இருக்கும். பெண்கள் நினைச்ச காரியம் கை கூடும். சிலருக்கு உல்லாச அனுபவங்கள் கிடைக் கும். மொத்தத்துல ஓஹோ வாரம்.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

கவனமா இருக்க வேண்டிய நேரம். பேச்சுல நிதானம், செயல்ல விவேகம், சிந்தனைல தெளிவு அவசியம் வேணும். எதையும் நாலு பேர்கிட்ட கலந்து ஆலோசிக்காம செய்யாதீங்க. அலுவலகப் பணியாளர்களுக்குச் சில தர்மசங்கடமான சூழ் நிலைகள் உருவாகலாம். மேலதிகாரிகளோட அதிருப்திக்கு ஆளாகலாம். பணம் ஏராளமா செலவாகிற வாரம் இது. கடன் கொடுக்காதீங்க, வாங்காதீங்க. குறிப்பா, பெண்கள் பண விஷயத் துல எச்சரிக்கையா இல்லாட்டி, பொருளிழப் புக்கு சான்ஸ் அதிகம்.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

சாமர்த்தியமான காரியங்களைச் செய்து புகழடைவீங்க. இந்த வாரம் நீங்க ஆரம் பிக்கிற புது முயற்சிகள் நிச்சயம் வெற்றி அடை யும். பொருளாதார ரீதில நல்ல அபிவிருத்தி பார்க்கலாம். நடிக நடிகையருக்கு நிறைய அட் வான்ஸ் வந்து சேரும். எழுத்தாளர்களும் ஏற்றம் பெறுவாங்க. வீட்டுல அமைதி நிலவும். சில சுப நிகழ்ச்சிகள் நடக்கக் கூடும். நீங்க அப்பா வாகவோ, தாத்தாவாகவோ ஆக சான்ஸ் இருக்கு.




கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

திறமையும் தோற்றப் பொலிவும் கூடும். தொட்டதெல்லாம் துலங்கும் நேரம் இது. அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு ஏறும். கௌர வமும் அந்தஸ்தும் கூடும். எதிரிங்க காணாம போயிடுவாங்க. அரசாங்க நிலுவைகள் ஏதும் இருந்தா இப்ப பைசலாயிடும். சிலருக்கு நீண்ட தூரப் பிரயாணத்துக்கான வாய்ப்பு கூடி வரும்.




மகரராசிக்காரரான சூர்யா நிறையப் பொருள்கள் வாங்குவாராம். திருமண நேரம் கூட கூடிவரலாமாம்!

அநேகமா பணி மாறுதல் சம்பந்தமா இருக்கும். மெடிகல் ரெப்களுக்கு இந்த வாரம் உபயோக மானதாக இருக்கும். பெண்களுக்குப் புதுப் புடைவை யோகம் கட்டாயமா இருக்கும்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

பொருளாதார ரீதில பிரச்னையே இல்லாத வாரம். எதிர்பார்த்த பண உதவி கண்டிப்பா கிடைக்கும். புதுசா இயந்திரங்கள் வாங்கற தொழிலதிபர்களுக்கு லாபகரமான வாரமா இருக்கும். அரசாங்க அனுகூலமும் வழக்கு வெற்றிகளும் நிச்சயம். மாணவர்கள் படிப்பிலேயும் விளையாட்டுலேயும் வித்தை காட்டுவாங்க. கணிதம், எழுத்து, பத்திரிகைத் துறையினருக்குப் புகழ் கூடும் நேரம் இது. இரவுப் பயணங்களையும் ஓட்டல் உணவையும் தவிர்க்கறது இப்ப உங்க உடம்புக்கு நல்லது.



விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

மக்கள் சேவைல ஆர்வமுள்ளவர்களுக்கு நல்ல வேலை கொடுக்கற வாரம் இது! நிறைய பொதுக்காரியங்கள்ல கலந்துப்பீங்க. எழுத்தாளர்களுக்குப் புகழோட பணமும் நிறைய வரும். நீண்ட நாள் நண்பர் ஒருத்தரைப் பிரியறதும் சில புதிய நண்பர்கள் சேர்றதும் இப்ப நடக்கும். தெய்வப் பணிகளில் ஈடுபடுவீங்க. வர்த்தகம் ஓரளவுதான் ஆதாயம் தரும். அதே சமயம் கூட்டுத் தொழில் செய்யறவங்களுக்கு ஆதாயம் உறுதி. பெண்கள் செயற்கரிய செயல்கள் செய்து புகழ் சேர்த்துக்கற வாரம் இது.




தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

ஒம்பதுல சுக்கிரன் இருக்கறது அனுகூலமான விஷயம்தான். உங்க காரியங்கள்ல இப்ப ஒரு ராட்சஸ வேகம் கூடும். மனசுல அபார நம்பிக்கையும் தெளிவும் பிறக்கும். எதிர்பாராத பலர் உங்க வளர்ச்சிக்கு உதவ முன் வருவாங்க. குறிப்பா, சினிமா, இசைத் துறையினருக்கு வளர்ச்சிப் பாதை படு ஸ்மூத்தா இருக்குது. இதுவரைக்கும் வீட்டுல இருந்து வந்த குழப்பங்கள், நெருக்கடிகள் நீங்கி, நிலைமை சுமுகமாகும். வயசானவங்களுக்கு ஆன்மீக யாத்திரை போக வாய்ப்பு வரும். சில பேருக்குத் திருமண யோகமும் கூடி வரும்.



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

பிரமாதமான நேரம்னு சொல்ல முடியா விட்டாலும் பிரச்னை அதிகம் இருக்காது. சிலருக்கு திருமண நேரம் கூடிவரும். வீட்டு உபயோகப் பொருட்கள் நிறைய வாங்குவீங்க. பணப் பிரச்னை இருக்காதுன்னாலும் செலவும் அதிகமாவே இருக்கும்! மாணவர்கள் ரொம்ப கவனமா படிக்கணும். மனசு அலைபாய விடாம பாத்துக்கறது முக்கியம். அரசாங்க ஊழியர்களுக்குப் பழைய பாக்கிகள் வந்து சேரும். பொதுவா, உடல் நலத்துல அதிக அக்கறை செலுத்த வேண்டிய வாரம் இது.



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

நிர்வாகத் திறன் வெளிப்படும். கஷ்டமான வேலைகளையும் சுலபமா ஊதித் தள்ளிடுவீங்க. பலர் புகழுறாப்பல காரியங்களைச் செய்து முடிப்பீங்க. வர்த்தகம், காண்ட்ராக்ட் துறையினருக்கு ஆதாயம் கூடும். பெண்களுக்கு, மனதுக்கு இனிய செயல்கள் நிகழும். சிலருக்கு வெளி நாட்டுத் தொடர்பால ஆதாயம் கிடைக்கும். நீண்ட தூரப் பயணங்கள் இப்ப வேண்டாம். வழிப்பறி - பிக்பாக்கெட்ல பொருள் இழப்புக்கு வாய்ப்பு இருக்கு; கவனம்! உணவு விஷயத்துல கட்டுப்பாடா இருங்க. முடிஞ்சா தினமும் ஒரு 'வாக்' போறதும் நல்லது.

மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*



சில புதிய நண்பர்களால பெரிய உதவிகள் கிடைக்கும். வழக்குகள் சாதகமா தீர்ப்பாகும். பொருளாதாரம் அபிவிருத்தி அடையும். சிலருக்கு பயணத்தால ஆதாயம் உண்டு. அதே சமயம் பயணத்துல எச்சரிக்கையா இருக்கறதும் அவசியம். சட்டத் துறையினருக்கும் காவல் துறையினருக்கும் பணிச்சுமை அதிகமா இருக்கும். மத போதகர்கள் சிறப்புப் பெறுவார்கள். வீட்டுலயும் சுமுகமான சூழ்நிலை நிலவும். அக்கம் பக்கத்து வீட்டு விவகாரங்கள்ல தலையிடாம இருக்கறது நல்லது.



நடக்குமென்பார்; நடக்கும்!



• வரவேற்கக் காத்திருக்கும் பவார்!

அணைத்துக் கொண்டார் பவார். 44 சுயேச்சை எம்.எல்.ஏக்களில் நிச்சயம் முப்பது பேராவது இவர்களைப் பின் தொடருவார்கள் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை பவாருக்கு; இவர்களில் முக்காலும் பழைய காங்கிரஸ் அதிருப்தியாளர்கள்தானே? திரை போடவே நேரமில்லாமல் இந்த நாடகம் தொடரும் போலிருக்கிறது.

அனைவரையும் வரவேற்கும் பவார்!

மேடை நாடகம்

கழுதை கெட்டால் குட்டிச்சுவர் போல, எந்தக் கட்சியிலிருந்து யார் வெளியேற்றப்பட்டாலும், அவர்களை பூர்ணகும் பத்துடன் வரவேற்று, மாலை மரியாதை எல்லாம் செய்வதற்கு மேடை அமைத்திருக்கிறது சரத் பவாரின் NCP. ராணேவால் பதவி இறக்கப்பட்ட (தாங்களே ராஜினாமாச் செய்ததாக அவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள்) துக்காராம் டிகோலே, அனில் தேஷ்முக், சிவாஜி ராவ் நாயக், திலீப் ஸோபால், விஜயகுமார் கவித் என்ற ஐவரையும் இருகரம் நீட்டி

நடிக்காத நாடகம்

ஜதின் கனேகியாவைத் தெரியுமில்லையா? (ஸ்ரீமான் ஸ்ரீமதியின் "கேசு"); அந்த முகத்தைப் பார்க்காமல் டீவியில் ஒரு இந்தி காமெடி சீரியலையும் பார்க்க முடியாதே! ஷேகர் சுமனுக்கு அடுத்தபடியாக, சின்னத் திரையில் படுபிஸியான நடிகர் இவர்தான்; குஜராத்தியரிடையே மஹா பாப்புலரான மேடை நடிகர். எல்லோரையும் சிரிப்பலைகளால் தாலாட்டியவர், அனைவரையும் கண்ணீரில் மிதக்கவிட்டு, திடீரென தமது 46 வது வயதில் மறைந்து விட்டார். குஜராத்தி 'மிட்-டே' (தினசரி) இவருக்கென்று அழுத அழுகை கொஞ்ச நஞ்சமில்லை! கொடுமை என்னவென்றால், தமக்கு pancreatic cancer நாலாவது ஸ்டேஜில் இருந்ததென்பது அவருக்கே தெரிந்திருக்க வில்லை; வயிற்று வலி என்று மருத்துவமனையில் அட்மிட் ஆனவர், நர்ஸுகளிடமெல்லாம் ஜோக்கடித்து சிரித்து, தமது அடுத்த நாடகத்துக்கு அழைப்பு விடுத்துக் கொண்டிருந்திருக்கிறார்! வயிறு வலிக்கச் சிரிக்க வைத்தவருக்கு வயிற்று வலியாலே முடிவா?...




• ஜதின் கனேகியா

நடிக்கத் தெரியாத ஹீரோ

38 வயதிலேயே 'Texas geyser' ஐப் போல கரிஸ்மா கொப்பளித்துப் பாயும் ஜான் கென்னடி ஜூனியர், அது நயாகராவாகக் கொட்டிய பருவத்தில் இந்தியா வந்திருக்கிறார் தெரியுமா? அதுவும் நமது பவித்ர நகரமான வாரணாசிக்கு. அப்போது, ஹிப்பித்தனமான உடையில், சைக்கிளில் சுற்றிக் கொண்டிருப்பாராம். ஒரு பத்திரிகையாள நண்பர் விடுத்த அழைப்பின் பேரில் யூனிவர்ஸிடிக்கு சென்றிருக்கிறார். நண்பர் வருவதற்கு முன் இவர் ஆஜராகிவிட்டார். இவர் கோலத்தைப் பார்த்துவிட்டு வாட்ச்மேன் அனுமதி மறுத்திருக்கிறான். நம்மூர் வி.ஐ.பி. புதல்வர்களைப் போல் ஆர்ப்பாட்டமெல்லாம் செய்யாமல், 'தேமே' என்று நண்பர் வரும் வரையில் காத்திருந்திருக்கிறார் ஜான்! ஒரு மும்பைப் பத்திரிகையாளர் நினைவு கூர்ந்திருந்த இந்தச் சம்பவம், வாரணாசியின் கங்கையை எல்லோர் கண்களிலும் வரவழைத்து விட்டது.

— ஜெயஸ்ரீ ராஜ்





மாதா, பிதா, மாணவன் 24

வாழ்க்கையை அதன் வழியே

சுவாமி சின்மயானந்தாவின் சிஷ்யர் தான் சுவாமி தயானந்த சரஸ்வதி. சின்மயானந்தாவின் கூடவே உலகம் எங்கும் பயணம் செய்தவர். குருவைப் போலவே ஆழமான விஷய ஞானம் உடையவர். மாலை நேரங்களில் சுவாமி சின்மயானந்தாவின் சொற்பொழிவு இருக்கும். காலை நேரங்களில் சுவாமி தயானந்த சரஸ்வதியின் சொற்பொழிவுகள் இருக்கும். சின்மயானந்தாவின் சொற்பொழிவு, ஜனரஞ்சகமாக இருக்கும். அவருடைய சீடருடைய சொற்பொழிவுகளோ, ஆழமாக, சிந்தனையைத் தூண்டும் விதமாக இருக்கும்.

ஒரு கட்டத்தில், தயானந்த சரஸ்வதி, தனியாக ஆஸ்ரமம் துவக்க விரும்பினார். இந்த விஷயம் சின்மயானந்தாவின் மீது மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்த என்போன்ற பலருக்கு, இலேசான குழப்பம் ஏற்படுத்தியது. தயானந்த சரஸ்வதி தனியே பிரிந்து சென்ற பின், சின்மயாவின் வட்டத்துக்குள்ளாகவே நாங்கள் நின்று விடுவதா? அல்லது தயானந்தாவின் ஆசிரமத்துக்கும், சொற்பொழிவுகளுக்கும் செல்லலாமா? என்பதுதான் குழப்பம். இதைப் புரிந்து கொண்டவராக, சுவாமி சின்மயானந்தாவே, ''அவர் என் சிஷ்யர்தானே! நீங்கள் அவரிடம் செல்வதில் தயக்கம் ஏன்? ராமகிருஷ்ண பரமஹம்சரிடமிருந்து, ஒரு விவேகானந்தர் உருவாகவில்லையா? அதே போலத்தான்'' என்று கூறினார்.

அவரை 'படா ஸ்வாமி' என்றும், இவரை 'சோட்டா ஸ்வாமி' என்றும் எங்களுக்குள்ளே குறிப்பிட்டுக் கொள்ளுவோம்.

கடவுள் பற்றிய சுவாமி தயானந்த சரஸ்வதியின் கருத்து கூட, அனைவரையும் ஆழமாகச் சிந்திக்க வைக்கும். பொதுவாக, 'கடவுள் ஒருவரே!' என்றுதானே சொல்லுவார்கள்! ஆனால் அவர், 'எல்லாம் கடவுள்' என்பார். தண்ணீர் எப்படி, வைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தின் உருவத்தையே ஏற்றுக் கொள்ளுகிறதோ, அதுபோல நாம் காணும் ஒவ்வொன்றிலும், அதே உருவில் இறைவன் இருக்கிறான். இந்த உலகில் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர் கடவுள்' என்று சொல்லுவார் அவர்.

'வாழ்க்கையை, அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று அவர் சொல்லுவதைத்தான் நான் என் மாணவர்களுக்கும் சொல்லுவேன்.

தயானந்த சரஸ்வதி, 'சொர்க்கமான வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்ளுவதும், நரகம் போன்ற வாழ்க்கையை சொர்க்கமாக மாற்றிக் கொள்ளுவதும் உன் கையில்தான் இருக்கிறது' என்பார்.

வாழ்க்கையைப் பொறுத்தவரை, எந்த ஒரு விஷயத்திலும் நாலுவிதமான சாத்தியக் கூறுகள் உண்டு என்று அவர் சொல்லுவார். உதாரணமாக, நீங்கள் பஸ் பிடிக்கக் காத்திருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். நீங்கள் போவதற்குச் சிறிது நேரம் முன்பு, பஸ் போய் விட்டால் உங்களுக்கு ஏமாற்றம். இது எதிர்பார்ப்புக்குக் குறைந்த நிகழ்வு. நீங்கள் பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டிருக்கிறபோது, உங்கள் நண்பர் காரில் அங்கே வந்து, காரை நிறுத்தி உங்களுக்கு லிஃப்ட் கொடுக்கிறார். இது எதிர்பார்ப்புக்கு அதிகப்படியான நிகழ்வு. நீங்கள் பஸ் ஸ்டாப்பில் காத்திருக்கிறபோதே பஸ் வர, நீங்கள் ஏறிக் கொள்ளுகிறீர்கள். இது எதிர்பார்க்கிற நிகழ்வு. கடைசியாக, நீங்கள் காத்துக் கொண்டு நிற்கிறபோது, வேறு ஒரு பஸ் வந்து மோதி, அடிபட்டு, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுகிறீர்கள். இது எதிர்பார்ப்புக்கு முற்றிலும் மாறான நிகழ்வு. இந்த நாலு நிகழ்வுகளையுமே, அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். அதற்குப் பெயர்தான் 'பிரசாத புத்தி' என்று



ஏற்றுக்கொள்ள வேண்டும்!

சொல்லுவார்.

பிரசாத புத்தி என்பதை இன்னும் எளிமையாக விளக்குவார். கோவிலுக்குப் போகிறபோது, பூ, பழம், தேங்காய், மாலை என்று அவரவர் தம் விருப்பப்படி எதை எதையோ வாங்கிக் கொண்டு போகிறார்கள். இதில் வேறுபாடு இருக்கும். ஆனால், கோவிலில் எல்லாருக்கும் ஒரே மாதிரியான பிரசாதம் தானே கொடுக்கிறார்கள்! நான் இவ்வளவு கொடுத்தேனே! நீங்கள் வெறும் பிரசாதம் கொடுக்கலாமா? என்றெல்லாம் யாரும் கேட்பதில்லையே!, எது கொடுக்கப்படுகிறதோ, அதை அப்படியே, பக்தியுடன் வாங்கிக் கொள்ளுகிறோமல்லவா? அந்த மனப்பான்மைக்குப் பெயர்தான் பிரசாத புத்தி.

சுவாமி தயானந்த சரஸ்வதியும் எங்கள் பள்ளிக்குப் பல தடவை வருகை தந்திருக்கிறார். மாணவர்களுக்கு பயன்படத்தக்க விதமாய் சொற்பொழிவாற்றியிருக்கிறார். மாணவர்களின் சந்தேகங்களுக்கு எளிமையான விளக்கங்கள் சொல்லி, புரிய வைத்திருக்கிறார்.

திருமதி ஒய்.ஜி.பி

ஒருமுறை, எங்கள் பள்ளிக் கூடத்துக்கு சுவாமிஜி வந்திருந்த போது, என்னிடம், "நீங்கள், சென்னை நகரத்தில் வசதியான, படித்தவர்கள் வீட்டுக் குழந்தைகள் படிக்கிற உங்கள் பள்ளிக் கூடத்தில் புதுப்புது மெதடாலஜிகளை அறிமுகப்படுத்தி, அவற்றை வெற்றிகரமாகச் செயல்படுத்தியும் வருகிறீர்கள். ஆனால், இதையெல்லாம், ஒரு கிராமப்புறப் பள்ளிக் கூடத்தில் உங்களால் செய்து காட்ட முடியுமா?" என்று சவால் விடுவது போல் கேட்டார். "ஓ எஸ்! தாராளமாக முடியும்! ஆனால், திடீரென்று பலவித புது முயற்சிகளைத் தொடங்கினால், கிராமப்புறப் பின்னணி கொண்ட மாணவர்கள் சிரமப்படுவார்கள். ஆனாலும் படிப்படியாகச் செய்து காட்டுகிறேன்" என்றேன்.

சுவாமிஜி குறிப்பிட்ட கிராமப்புறப் பள்ளி, அவர் பிறந்த ஊரான தஞ்சை மாவட்டம் மஞ்சக்குடி என்ற கிராமத்தில் அவரது முயற்சியால் நடத்தப்படுவது. அரசு உதவி பெறும் அப்பள்ளி

யில், தமிழ் மீடியத்தில் படிப்பு சொல்லித் தரப்படுகிறது. அங்கு படிக்கும் மாணவர்களுள் முக்கால்வாசிப் பேர், ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பெற்றோர்கள் படிப்பறிவு இல்லாதவர்கள்.

சுவாமிஜி ஏற்கெனவே, எங்கள் பள்ளியில் விஞ்ஞான கண்காட்சிகள், ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் போன்றவை நடைபெறுகிற சமயத்தில், மஞ்சக்குடி பள்ளிக்கூட ஆசிரியர்கள் சிலரை அனுப்பி வைப்பது வழக்கம். இப்போது, அந்தப் பள்ளிக் கூட ஆசிரியர்கள் சிலரை வரவழைத்து, சுமார் ஒரு வார காலத்துக்கு, எங்கள் பள்ளியில் வகுப்புகள் நடைபெறும் முறைகளை கவனிக்க ஏற்பாடு செய்தோம். அதனையடுத்து, எங்கள் பள்ளிக் கூட விடுமுறை சமயத்தில், நானும் ஏழெட்டு ஆசிரியைகளுமாய் மஞ்சக்குடி சென்று, எங்கள் பள்ளிக் கூடத்தில் செயல்படுத்தப் படும் புதிய முயற்சிகள், திட்டங்கள் அனைத்தையும் அங்கே அறிமுகப்படுத்தினோம். ஆங்கிலத்தில் சரளமாய்ப் பேச வராவிட்டாலும், நாங்கள் சொன்னவற்றைப் புரிந்து கொண்டு அவர்கள் செய்து காட்டிய விதம் வியப்பூட்டியது.

எங்கள் ஆலோசனையுடன் எங்கள் பள்ளிக் கூடத்தில் செய்வதைப் போலவே ஒரு புராஜக்ட் எக்ஸிபிஷன் நடத்தினார்கள். அதை, சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வந்து பார்த்தார்கள்.


மஞ்சக்குடி பள்ளிக்குப் போய், அந்த மாணவர்களுக்கு நாங்கள் சொல்லிக் கொடுத்தது ஒருபுறம் இருக்கட்டும். அவர்களிடம் நாங்கள் கண்டு அதிசயித்த விஷயங்கள் பல. அவர்கள் கடைப்பிடிக்கிற கட்டுப்பாடு, ஒழுக்கம், அபாரமானது. சொல்லிக் கொடுக்கிறபோது, அவர்கள் முகத்தில் தெரிகிற ஆர்வம், நமக்கே இன்னும் அதிக ஈடுபாட்டை ஏற்படுத்தும்.

இப்போது மஞ்சக்குடி பள்ளியில் கம்ப்யூட்டர் வந்து விட்டது. நூற்றுக்கு நூறு சதவீதம் ரிசல்ட். இதையெல்லாம் பார்க்கிறபோது சந்தோஷமாக இருக்கிறது.

ஆங்கில மீடியத்தில் படித்தால் உசத்தி, தமிழ் மீடியம் மட்டம் என்ற கருத்துக் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். நான் அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஆங்கிலத்தில் படிக்கிற மாணவர்கள் பலருக்கு, ஒரு விஷயத்தைப் பற்றி, சொந்த வார்த்தையைப் பயன்படுத்தி நாலு வரி எழுதத் தெரியாது! காரணம் அவர்களுக்கு, கேள்விகளையும், அவற்றுக்குரிய பதில்களையும் ஆசிரியர் கொடுத்து விட, இவர்கள் அதை அப்படியே மனப்பாடம் செய்து விடுகிறார்கள். அதனால் என்ன பயன்? ஆக, மாணவர்கள் எதில் படிக்கிறார்கள் என்பதில்லை முக்கியம். என்ன படிக்கிறார்கள், எப்படி படிக்கிறார்கள்! அவர்களைச் சிந்திக்கத் தூண்டும் விதமாக படிப்பு அமைந்திருக்கிறதா என்பது தான் முக்கியம். மஞ்சக்குடி பள்ளிக் கூடம் இந்த விதத்தில்தான் மாறுபட்டிருக்கிறது.

சென்னையில் கூட எத்தனையோ மாநகராட்சிப் பள்ளிக் கூடங்கள் உள்ளன. அவற்றில் கூட, எங்கள் பள்ளியில் கடைப்பிடிக்கும் புதிய முறைகளை, செயல்படுத்த நான் தயாராக இருக்கிறேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஒரு முக்கியமான விஷயம் பற்றியும் நான் என் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நம் குழந்



தூய்மை அவசியம்!

உள்ளத்தை தூய்மையாக வைத்துக் கொண்டால் போதும். அதைத் தான் பணிவு என்றும் நமஸ்காரம் என்றும் சொல்கிறோம். தூய்மையில்லாத உள்ளத்துடன் நமஸ்கரித்தால் அதை ஓர் ஏமாற்றுச் செயல் என்று சொல்ல வேண்டும். அது ஓர் அபசாரமும் கூட.

— ஸ்ரீ ரமண மகரிஷி

தகவல் : இரா. பார்த்திபன்

தைகளின் சகவாசம். நம் குழந்தைகள் பள்ளியிலும் சரி, வீட்டிலும் சரி, யார் யாருடன் பழகுகிறார்கள் என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். இன்றைய தினம் உலகில், கெட்டுப் போவதற்கு ஏராளமான வழிகள் உள்ளன. அவற்றில் சிக்கிக் கொள்ளுவது வெகு சுலபம். ஆனால், மீண்டு வருவதுதான் சிரமம். எனவே, நம் குழந்தைகளிடம் அன்பு காட்டவும் வேண்டும். அதே சமயம், அவசியப்படும்போது கண்டிப்புக் காட்டவும் தயங்கக் கூடாது.

ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் கலந்தாலும் ஆபத்து என்பதைப் போல பத்து குழந்தைகள் மத்தியில், தீய பழக்கங்களுடன் ஒருவன் இருந்து விட்டால், பத்துப் பேர் வாழ்க்கையும் பாழாகி விடும். எனவே, நம் குழந்தைகள் மீது எப்போதுமே கண்காணிப்பு இருக்க வேண்டும். எங்கே போகிறான் (ள்), யாருடன் போகிறான் (ள்), என்ன செய்கிறான் (ள்) என்பதை எல்லாம் அவ்வப்போது கண்காணித்துக் கொண்டே இருக்க வேண்டும். எல்லை மீறுகிறபோது தடுத்து நிறுத்தி, நல்வழிகாட்ட விழிப்புடன் இருக்க வேண்டும்.

எனக்கோ வயதாகி விட்டது. எதிர்காலத்தில் பத்மா சேஷாத்ரி பள்ளி பழைய மாதிரியே சிறப்புடன் செயல்படுமா என்ற சந்தேகம் ஒரு சிலருக்கு வரக் கூடும். ஆனால் எனக்கு அது பற்றிய சந்தேகம் எதுவும் கிடையாது. காரணம், நிர்வாகத் திறமை கொண்ட ஆசிரியர்கள் யார் யார் என்று நான் கவனித்து வைத்திருப்பேன். அவர்களுடைய ஆர்வம், ஈடுபாடு இவற்றின் அடிப்படையில், வாய்ப்புக் கிடைக்கிறபோது, அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்க மாட்டேன். இதற்கு, எங்கள் பள்ளியிலிருந்து பல உதாரணங்களை என்னால் சொல்ல முடியும்.

இன்னொரு விஷயம் தெரியுமா? இன்று சென்னை நகரில் உள்ள பல்வேறு பள்ளிக் கூடங்களிலும், தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள், பத்மா சேஷாத்ரி பள்ளியில் பணியாற்றிய முன்னாள் டீச்சர்கள்தான்! எங்களிடம் திறமைக்குக் குறைச்சலே கிடையாது. எனவே கல்வியின் தரத்துக்குக் குறைவே கிடையாது!

(முற்றும்)

சந்திப்பும் தொகுப்பும் : **எஸ். சந்திரமௌலி**

குறையொன்றுமில்லை

28

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சாரியார்

விவேகம், நிர்வேதம் என்ற இரு படிக்கட்டுகளைக் கடந்ததும் மூன்றாவதாக வருவது வைராக்கியம்.

வைராக்கியம் என்றால் என்ன...? 'எல்லாவற்றையும் விடுவது வைராக்கியம்' என்று ஒருவர் தீர்மானம் பண்ணிக்கொண்டு மொத்தத்தையும் விட்டு விடுகிறார்.

"இப்போது என்ன பண்ணிக் கொண்டிருக்கிறீர்...?"

"எதுக்கும் நான் போறதில்லை. யாரோடும் நான் பேசுவதில்லை. எல்லாவற்றையும் விட்டு விட்டேன்."

"விட்டு விட்டு என்ன பண்ணுகிறீர்?"

"வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். ஒன்றும் பண்ணாமல் உட்கார்ந்திருக்கிறேன்."

– இதுவா வைராக்கியம்? இது வைராக்கியம் ஆகாது! எல்லாவற்றையும் விடுவது அல்ல வைராக்கியம். விட்ட ஸ்தானத்திலே என்ன பண்ணினாய் என்று கேட்டால், 'அவன் திருவடியைப் பற்றினேன்' என்று பதில் கூற முடிய வேண்டும். அதுதான் வைராக்கியம்.

அகங்கார மமகாரங்களை மொத்தம் அழித்து, இதெல்லாம் –உலக விஷயமெல்லாம் – ஒரு மின்னல் மின்னுகிற மாதிரி அழியக்கூடியது என்று உணர்ந்து, இந்த பிரபஞ்சம் இருக்கிறதே, அது மழை பெய்யும்போது எழும் நீர்க்குமிழி போன்றது என்பதை உணர வேண்டும்.

மழை பெய்கிறபோது தெருவிலே நீர் ஓடும். அதிலே நீர்த்துளி விழும். விழுந்தால் அதில் ஒரு குமிழி எழும். அது கொஞ்ச தூரம் போய் 'டப்'பென்று வெடித்து விடும் – இல்லாமல் போய்விடும்! அந்த மாதிரி இந்த உலகமே அவ்வளவுதான் – அழியக் கூடியது – என்று உணர்ந்து அவன் திருவடியை கெட்டியாகப் பிடித்துக் கொள்வதுதான் வைராக்கியம்.

இந்த வைராக்கியம், எல்லாம் இருக்கிறபோதே வர வேண்டும். நம்மை விட்டு எல்லாம் போன பிற்பாடு வைராக்கியம் வந்தால் பிரயோஜனமில்லை.

ஒருமுறை மன்னார்குடியிலே ஸ்ரீமத் அழகியசிங்கர் எழுந்தருளியிருந்தார். அங்கே அஹோபில மடத்திலே ஆராதனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

அன்றைக்கு ஸ்ரீஜயந்தி – கோகுலாஷ்டமி. அன்று என்ன பண்ணுவார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். உப்புச்சீடை, வெல்லச்சீடை எல்லாம் பண்ணியிருக்கிறது.

ஒருத்தர் அங்கேயிருந்து வந்தார். சுவாமியை சேவித்தார். சேவிக்கிற நேரம் அவர் திருவாராதனத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவரிடம் போய், "நான் சீடையே சாப்பிடறதில்லை; சீடையே பிடிக்காது" என்றார்.

உடனே சுவாமி, "இதென்ன அக்கிரமம்! பகவானே சாப்பிடுகிறானே! ஸ்ரீஜயந்தி என்றால் அந்த பக்ஷணத்தை எல்லோரும் சாப்பிட வேண்டுமே" என்றார். "எல்லோரது கிருஹங்களிலும் பண்ணிக் கொண்டிருக்கிறார்களே" என்றார். "உமக்கு ஏன் அந்த சீடையிலே அவ்வளவு வெறுப்பு வந்து விட்டது?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை! ஒரு பல் கூட இல்லாமல் நான் எப்படிச் சாப்பிடுவேன்?" என்றார் அவர்!

இதை ஓர் உதாரணமாக நாம் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பொருளிடத்தில் ஏன் வெறுப்பு வந்தது என்று கேட்டால், 'அதை அனுபவிக்க முடியாது என்பதால் வெறுப்பு வந்தது' எனச் சொல்வது வைராக்கியம் ஆகுமா? ஆகவே ஆகாது!

வைராக்கியம் வந்து விட்டதானால் எல்லாவற்றையும் அனுபவிப்

பதற்கு உடம்பிலே தெம்பும் சக்தியும் பலமும் இருக்கிற போதே அனுபவிக்காமல் விட்டு விட வேண்டும் - விட்டு விடத் தயாராக வேண்டும்.

எல்லாம் போன பிற்பாடு வைராக்கியம் வரட்டும் என்று இருந்தால் அதுவே இவரை விட்டு விடுகிறதே! அப்புறம் இவர் என்ன விடுவது! 'அதை விட்டேன், இதை விட்டேன்' என்று சொல்வதில் பிரயோஜனம் என்ன! கைக்கு அத்தனையும் கிடைத்துக் கொண்டிருக்கிற நேரத்தில் எல்லாவற்றையும் விட்டு விட வேண்டும். விட்டஸ்தானத்தில் அவனை நாம் பற்றிக் கொள்ள வேண்டும். அதுதான் வைராக்கியம்!

தாமரை இலை மேல் இருக்கும்படியான நீர்த்துளியானது எப்படி ஒட்டிக் கொள்ளாமல் இருக்கிறதோ அந்த மாதிரி உலகியல் வஸ்துக்களிலே நாட்டமில்லாமல் இருந்து கொண்டிருக்க வேண்டும்.

ஒட்டிக் கொள்ளக் கூடாது என்றால் என்ன...?

உலகத்திலே நாம் வாழ வேண்டாமா?

வாழ்வதற்கு ஒட்டுதல் வேண்டாமா?

உலகத்தில் நாம் நன்றாகவே வாழ வேண்டும் என்று



சாஸ்திரம் சொல்கிறது. பூரணமாக வாழ வேண்டும் என்கிறது. அப்படி வாழாது போனால் வாழ்த்திச் சொல்லும் மந்திரங்களுக்கு என்ன அர்த்தம் இருக்கும். பெரிய பெரிய மந்திரமெல்லாம் சொல்லி ஆசிர்வாதம் பண்ணுகிறோமே! 'எதற்காக இந்த

உலகம்?' என்று கேள்வி வந்து விட்டால் அப்புறம் ஆசீர்வாதம் மட்டும் எதற்கு?!

பூரணமாக இந்த உலகத்திலே நாம் இருக்க வேண்டும். கர்மானுஷ்டமான தர்மங்கள் எல்லாம் பூரணமாகப் பண்ண வேண்டும். அதைத்தான், சாஸ்திரம் வலியுறுத்துகிறது. அதற்காகத்தான் பூரண ஆயுளுடன் இரு என்று சாஸ்திரம் சொல்கிறது.

ஆனால் உலக வஸ்துக்களுடைய நாட்டம் உன்னுள்ளே புகலாமா என்றால் புகக் கூடாது! அதை உள்ளுக்குள்ளே புகுத்தாமல் உலகத்திலே இருக்க முடிந்தால் எத்தனை நாள் வேண்டுமானாலும் இருக்கலாம். – இதைத்தான் சாஸ்திரம் சொல்கிறது.

ஒரு கப்பல் இருக்கிறது. அது சமுத்திரத்திலே போகிறது. சமுத்திரத்தில் அது போனால்தான் வாணிபம் பெருகும். பல பேர் பல இடத்துக்குப் போவார்கள்.

கப்பல் சமுத்திரத்திலே போகலாமா என்றால், நன்றாகப் போகலாம்.

சமுத்திர ஜலம் கப்பலுக்குள் வரலாமா? – இது அடுத்த கேள்வி!

வந்தால் என்ன ஆகும்? அவ்வளவுதான்!

அதைப் போல்தான் இந்த உலகத்திலே நாம் இருக்கலாமா? என்றால் இருக்கலாம்!

ஆனால் உலக வஸ்துக்கள் நம்முள் நுழையலாமா என்றால், அந்தக் கப்பலுக்கு என்ன ஆகுமோ அதுதான் நமக்கும்!

நாம் இதிலே மூழ்கிப் போய் விட்டோமானால் மறுபடியும் கரையேறுவது எப்போது...?!

அரிது அரிது, மானிடராய்ப் பிறப்பது அரிது, நமக்குக் கிடைத்திருக்கிற இந்த ஜன்மாவை வீணடிக்கலாமா? இந்த மாதிரி ஜன்மா நமக்கு மீண்டும் அமையுமா? எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!

ஆகையினாலே, வைராக்கியம் என்றால் எல்லாவற்றையும் விட்டுவிட்டுப் போய்விடு என்று அர்த்தமில்லை.

பகவத் பாஷ்யக்காரர் ராமானுஜர் பதினெட்டு நாட்கள் கீதை உபன்யாசம் பண்ணினார்; அவரிருந்த காலத்தில் எல்லோரும் வந்து கூடியிருந்து கேட்டார்கள்.

ஒரு கிருஹஸ்தர் தினமும் வந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

பதினெட்டாம் நாள், ராமானுஜர் கீதையை முடித்து விட்டுக் கிளம்பினார்.

அப்போது அந்த கிருஹஸ்தர் என்ன பண்ணினார்... "அடியேனும் கூட வருகிறேன். என்னையும் உங்களோடு அழைத்துக்கொண்டு போய் விடுங்கள்" என்றார்.

உடனே சுவாமி எம்பெருமானார் உட்கார்ந்து விட்டார்.

"பதினெட்டும் சொல்லி திருத்த வேண்டியதாயிற்றே!" என்று வருத்தப்பட்டார்.

"பதினெட்டு நாள் கீதை கேட்டதன் பலனே இல்லையே உங்களிடத்திலே. நான் தான் சன்னியாசி. எல்லாவற்றையும் விட்டவன். எங்கே வேண்டுமானாலும் போவேன். உமக்குப் பொறுப்பு இருக்கிறதே" என்றார்.

சன்யாசம் மேற்கொள்பவர்கள் ஜலத்திலே நின்றுகொண்டு, சூரியனைப் பார்த்துக்கொண்டு,

'ஐச்வர்யத்தை விட்டேன்;
பூமியிலே இருக்கிற பற்றை விட்டேன்;
ஸ்த்ரீ சம்பந்தத்தை விட்டேன்!'

என்று சத்தியப் பிரதிக்ஞை பண்ண வேண்டும்.

அதற்கப்புறம்தான் காஷாயம் தரிக்க வேண்டும்.

இப்படி பிரதிக்ஞை எடுத்துக் கொண்டவர் ராமானுஜர். அவர் தம்முடன் வருவதாக ஒரு இல்லறத்தான் சொல்லவும் அவனுக்கு எடுத்துக் கூறினார்.

அருள்வாக்கு

கழுதை மேலே உப்புப் பொதி போட்டுக்கொண்டு ஒருத்தன் வேற்று ஊர் சந்தைக்குப் போனான். அந்தக் காலத்தில் உப்பு மூட்டையை மாட்டு மேலே, கழுதை மேலேதான் போட்டுக்கொண்டு போவார்கள். அப்படிப் போனான் இந்த வியாபாரி. போகிறபோது வழியில் திடீரென்று மழை பிடித்துக்கொண்டு வெளுத்துக் கட்டி விட்டது. உப்புப் பொதி என்ன ஆகிறது? எல்லாம் அப்படியே கரைந்து போயிற்று. வியாபாரிக்கு ஸ்வாமி மேலே மகா கோபம் வந்துவிட்டது. 'ஏழை என் வயிற்றில் இப்படி இந்தத் தெய்வம் அடித்து விட்டதே. கருணையில்லாத சாமியை இனிமேல் கும்பிடுவதில்லை' என்று முடிவு பண்ணிவிட்டான். வீட்டுக்குத் திரும்ப நடையைக் கட்டினான். வருகிற வழி காட்டு வழி. இருந்தாலும் இவன் மாதிரி பல வியாபாரிகள் கூட வந்த தைரியத்தில் காட்டு வழியாக வந்தான். காட்டிலே திருடர்கள் இவர்களை எதிர்பார்த்துக் கொண்டு மறைந்திருந்தார்கள்.

'சந்தையிலே விற்பனை நடத்தி வியாபாரிகள் நிறையப் பணம் கொண்டு வருவார்கள். துப்பாக்கியால் சுட்டு அவர்களிடம் இருக்கிற பணத்தை எல்லாம் பிடுங்கிக் கொள்ளலாம்' என்று திருடர்கள் ஆசை

யாகக் காத்துக் கொண்டிருந் தார்கள். துப்பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறவர்களிடம் வியாபாரிகள் எத்தனை பேர் சேர்ந்திருந்தாலும் என்ன செய்ய முடியும்? எல்லாரும் நடுநடுங்கிப் போனார்கள். அந்தக் காலத்திலே தோட்டா துப்பாக்கி கிடையாது. வெடி மருந்து கெட்டித்துத்தான் அதை வைத்துச் சுடுவார்கள். துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளே அகப்பட்டாலும் சரி; இல்லாவிட்டாலும் அவரவரும் உடைமைகளைப் போட்டு விட்டுத் திக்குக்கு ஒருத்தராக ஓடி விடுவார்கள், எப்படியானாலும் திருடர்களுக்கு வேட்டைதான்! இன்றைக்கும் இப்படி மருந்து போட்டுச் சுட்டார்கள். ஆனால் மருந்து வெடிக்கவேயில்லை. பெரிதாக மழை பெய்திருந்தது அல்லவா? தோட்டாவாக இருந்தால் எந்த மழைக்கும் ஈரம் காக்காது. மருந்து அப்படியில்லை. ஈரம் ஜாஸ்தியானால் வெடிக்காது. துப்பாக்கியால் சுட்டதெல்லாம் வெறும் புஸ்வாணமாயிற்று. இப்போது ஆயுத பலம் இல்லாத திருடர்களுக்குப் பயம் எடுத்தது. வியாபாரிகள் பணத்தைப் போட்டு விட்டு ஓடுவதற்குப் பதில், திருடர்களே துப்பாக்கிகளைப் போட்டு விட்டு ஓட்டம் பிடித்தார்கள். முதலில் சொன்னேனே, அந்த



வியாபாரிக்கு இப்போதுதான் தெய்வத்தை நிந்தித்தது எத்தனை தப்பு என்று தெரிந்தது. 'மழை வந்ததால் உப்பு தான் போச்சு; மழை வரா விட்டால் உயிரே போயிருக்கும். இந்த மழையினால் சின்னக் கஷ்டத்தைத் தந்து, அதே காரணத்தால் பெரிய கஷ்டத்திலிருந்து தப்புவித்தாய். உன் கருணையை என்னவென்று சொல்வது?' என்று ரொம்பவும் மனசு உருகி வேண்டிக் கொண்டான். இப்படிக் கதை.

முந்தி என்ன, பிந்தி என்ன என்று தெரியாமல் கஷ்டம் வருகிற சமயத்தை மட்டும் பார்க்கிறோம். அம்பாளுக்குக் கருணை இருந்தால் ஏன் கஷ்டம் வருகிறது என்று கேள்வி போடுகிறோம். முந்தி நாம் செய்த கர்மம், பிந்தி நமக்கு இந்தக் கஷ்டத்தாலேயே வரப்போகிற நன்மை இவை மட்டும் தெரிந்து விட்டால் நாம் இப்படிச் செய்ய மாட்டோம். அது தெரியாதபடி மனிதனை வைத்திருக்கிறாள். அதுவும் அவள் விளையாட்டுத் தான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

"உன் பத்னி, குழந்தைகளெல்லாம் இருக்கிறார்கள். கடமைகளெல்லாம் இருக்கிறதே. அதை முடிக்காமல் என்னோடு வர வேண்டும் என்கிறாயே அது தர்மமா? கீதை என்ன சொல்கிறது...? உனக்கென்று விதித்த தர்மத்தை நன்கு முடித்து அதன் பிறகு பகவத் சரணாரவிந்தத்தை அடைய முடியும். அதனூடே – கடமையினூடே பகவத்சரணாரவிந்தத்தைத் தேடினாலும் கடமைகளை விடலாகாது. அதையெல்லாம் விட்டுவிட்டுப் போவேன் என்றால் அது எவ்வளவு அதர்மம்! பகவத்சரணாரவிந்தத்தை ஒருநாளும் விடலாகாது; கடமைகளையும் விடலாகாது..." என்றார் ராமானுஜர்.

ஆகவே, வைராக்கியம் என்றால் எல்லாவற்றையும் விட்டு விட்டுப் போய் விட வேண்டும் என்று அர்த்தமில்லை.

சுவாமி தேசிகன் அழகாக, பூரணமாக கிருஹஸ்தாசிரமத்திலே இருந்துகொண்டே பரம வைராக்ய நிதியாக விளங்கினார்.

தினமும் பிக்ஷாடனம் பண்ணி ஆங்காங்கே கிடைத்த அரிசியைக் கொண்டு அவர் கிருஹத்தை நடத்தினார் என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறேன்.

அவர் இப்படி வீதி வீதியாக வருவதா என்று வருத்தப்பட்டு சிலர் தங்கத்தால் அரிசி செய்து பிக்ஷையிட்டதையும், 'நிவேதனம் பண்ண வேண்டிய அரிசியிலே புழு இருக்கிறதே' என்று அவர் அந்த இரண்டு படி தங்க அரிசியையும் அந்த வீட்டு வாசலிலேயே கொட்டி விட்டு வந்ததையும் சொல்லியிருக்கிறேன்.

பிக்ஷா பாத்திரத்தில் ஒட்டிக் கொண்டிருந்த ஒரே ஒரு பொன்னரிசியை அவருடைய மனைவி 'இது என்னது?' என்று கேட்ட விந்தையையும் சொல்லியிருக்கிறேன்.

பொன் எப்படியிருக்கும் என்று தெரியவும் தெரியாது. அதன் மீது பற்றும் கிடையாது!

இல்லறத்தாருக்கும் இந்த நிலை சாத்திய மானது.

(தொடரும்)

ஆனால் என் ஆசைகளையும் லட்சி யங்களையும் குழி தோண்டிப் புதைக்க வேண்டும். மாதம் 75ரூபாய் அலவன்ஸ். வெறுமனே மீட்டிங்குக்குப் போக வேண்டும். இதுதான் என் வேலை. என்னை அனுப்பி வைத்து விடுவீர்களா?

இல்லை.

வேண்டாம். சென்னையில் பதினைந்து நாட்கள் சுற்றி அலைந்து மிகவும் பாடுபட்ட பின் தான் 150 ரூபாய் சம்பளமுள்ள அந்த செக்ரட்டரி உத்தியோகத்தை நான் வாங்கினேன்.

பிரத்தியேக சிபாரிசுடன். என் உடல் நிலை சிறுவர்களோடு மாரடிப்பதற்கு உகந்த தல்ல. எனக்கு 'மிஸ்ட்ரஸ்' வேலை இஷ்ட மில்லை. பி.4. கோர்ஸ் பிடிக்கவில்லை. இப்படி எத்தனை முறை அழுதுகொண்டே தொண்டை கரகரக்கச் சொல்லி இருக் கிறேன்!

சென்னையிலே 150 ரூபாய் சம்பளத்திற்கு என்னை அனுப்பி வைப்பீர்களா?

இல்லை.

இதை எல்லாம் சகிக்கலாம்.

இனி?

எனக்குக் கல் யாணம் செய்து அனுப்பி விட வேண்டுமென்ற உத்தேசம் அப் பாவுக்கு உண்டா? மற்ற வர்களுக்கு? எனில் அது அசாத் தியமான காரியமாய் விட்டதா?

அண்ணா! எனக்கு வெட்கமில்லை. நான் ஒருபோதும் கைவிடாது இருந்த என் சுயமரியாதை! தெய்வத்தின் முன் னால் நின்று நான் தலை குனிந்ததில்லை. அநாவசியமாக.

'நிகரற்றவள்' என்ற பெயர் எனக்கு உண்டு. இன்று அது காற்றிலே பறந்து விட் டது. போகட்டும்! அண்ணா நீ என்னை வெறுக்கக் கூடாது.

பாதிக்கப்படாமல் முழுசாக இதைப் படித்துத் தீர்க்கவும். என்னால் பலமுறை அழுதிருக்கிற ஒரே நபர் நீ தான். மீண்டும் ஒருமுறை அழு. அந்த ஈர நீர் என் இதயத் தைக் குளிரச் செய்யட்டும்.

உண்மையில் எனக்குக் கல்யாணம் செய்து வைக்க அப்பாவுக்கு எண்ணம் இருந் ததா? இப்போதைய அவர் மனப்போக்கு எனக்குத் தெரியாது.

கருணோட்டன் என்னை மணந்து கொள்ள 'எக்ஸ்சேஞ்ச்' இல்லாமலேயே ஆலோசித்திருந்தாரே!

கருணோட்டன் எவ்வளவு பாடுபட்டு ஆர்.கே. நாயரைத் திருமணத்திற்குச் சம் மதிக்க வைத்தார். இருபத்திரண்டு வயசான மகளுடைய திருமணத்தை விட.

போகட்டும். இதையெல்லாம் சாதிக் கதைகள் சொல்லி ஒதுக்கித் தள்ளிவிட்டார்.

எனில், ஸ்ரீ ராதா கிருஷ்ணன் நாயர் அட் வகேட் (நம்முடைய சாதி) சௌமினியை அல்ல; என்னை வேண்டுமானால் திருமணம் செய்து கொள்வதாகச் சொல்லி அனுப்பினாரே?

ராமநாதன் விஷயம் உண்மையில் அப் பாவின் அலட்சியத்தால்- எந்த ஒரு கடிதமும் அது சம்பந்தமாக ஓராண்டுக் காலம் போடாததால்-அல்லவா அது தட்டிப் போய் விட்டது?

வடக்காஞ்சேரியிலே ஒரு மனிதர் (எனக்குப் பெயர் தெரியவில்லை) எத்தனை முறை எனக்காக இங்கே நடையாக நடந் தார்?

ஒரு காதல் ஊரே

வயசு வித்தியாசம்? உனக்கும் அண்ணிக் கும் இடையில் எத்தனை வயசு வித்தியாசம் உண்டு? ஐந்தாறு வயசு வித்தியாசம் போதாது இல்லையா?

இதனால் எல்லாம் எனக்கு பரிதவிப்பு உண்டாகவில்லை. என்னை நான் விரும்பிய வேலைக்கு அனுப்பி வைத்திருந்தால்... என் னைப் போல் ஒரு நபரை இந்த வயசில் மண முடித்ததற்காக வருந்துவேன் என்று நினைப் பது தவறு.

கல்யாணச் சந்தையில் விலை கூடிய

காலம் இது. பார்த்திருப்பாயே, அப்புமான் பதின்மூன்று வயசான அந்தப் பெண்ணை கல்யாணம் செய்து கொடுத்ததை.

என் கல்யாண காலம் ஏறக் குறைய கழிந்து விட்டது. அதில் வேறு வழிகளான 'எக்ஸ்சேஞ்ச்' வாய்ப்புகளும் முடிந்து விட்டன. அரசுப் பணிகளுக்கான வாய்ப்பு அதிகம் தாமதிக்காமல் நீங்கிவிடும்.

சதையும் ரத்தமும் மானமும் உள்ள என்னுடைய இன்றைய ஸ்திதியைக் கேட்க வேண்டுமா?

இதய சூன்யமுள்ள அண்ணன்மாரே! உங்களோடு எத்தனை முறை நான் சொல்லி இருக்கிறேன். எனக்கு பி.டி.கோர்ஸ் விருப்பமில்லை; இங்கே வாழ்க்கை பிடிக்கவில்லை என்று.

நீங்கள் யாராவது அதைக் காது கொடுத்துக் கேட்டீர்களா? உங்களில் யாரும் என்னை அழைத்துச் செல்லத் தயாராய் இல்லை. நான் எதற்காக' உங்களைக் குற்றம் சொல்ல வேண்டும்? என் சொந்தத் தந்தையே



வைக்கம் முகம்மது பஷீர்

தமிழில்: மையவன்


22

இவ்வளவு இரக்கமின்றி நடந்து கொண்டார். அதைவிட மேலானவர்களா அண்ணன்மார்?

என் எதிர்காலமும் எனக்குத் தெரியும். பெரியண்ணாவின் மனோபாவம் தெரியும். நீங்கள் ஒவ்வொருவரும் அதேபோல் ஆகிவிடுவீர்களோ என்று சந்தேகம் வேண்டாம். நேசமில்லாமை அன்று. பிராப்தங்கள் ஆகும். உலக சுபாவம்.

எல்லாரும் அவரவர் காரியத்தைப் பார்க்க வேண்டும். ஆனால் நான் அப்படிப்பட்ட ஒரு கேவலமான சுயநலக்காரி அல்ல. மற்றவர்களுக்காக இன்று நான் சாகத் தயாராகிவிட்டேன்.

என் இன்றைய நிலையைக் கேட்டுக் கொள். நான் இன்று ஒரு விலை போகாத சரக்கு.



"ஏறி வந்த ஏணியை ஏன் இப்படி எட்டி உதைக்கிறீங்க?"

"இனிமே இறங்கக் கூடாதுன்னு தான்!"

– பர்வதவர்த்தினி

இங்கே பலரும் வருவார்கள். ஒரு வியாபாரியான பட்டர். ஸர்வேஷாரடி (சௌமினி கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்று பேச்சு வந்தது. அப்போதே அந்த ஆனின் மனைவி வீட்டிற்குத் திரும்பி வந்தாள். தெய்வமே! தூக்கிட்டுச் சாகும் தைரியத்தை எனக்குக் கொடு. இந்த அவமானம் நிறைந்த நரகத்தில் இருந்து என்னைக் காப்பாற்று) கருணேட்டன் நம்முடைய மனைக்கல் நம்பூதிரி. இப்படிப் பலரும் வருவார்கள்.

அதில் கருணேட்டன் மட்டும் ஒரு 'ஜெண்டில் மேன்'. மற்றவர்கள்? அவர்களிடம் கூட அம்மா எப்படியாவது எனக்காக ஒரு வரனைக் கொண்டு வரச் சொல்வாள்!

அவர்களுடைய பரிகாசம் நிறைந்த பார்வைகள்! எனது பழிவாங்கும் வஞ்சம்! என் சுயமரியாதையை அநாவசியமாக இந்த அளவு சுட்டுப் பொசுக்கும் ஒவ்வொருவரையும் நான் உமித்தீயில் சுட்டெரிப்பேன்!

நிரபராதியும், களங்கமற்றவளுமான ஒரு பெண்ணை எந்த ஒரு வாத்சல்யத்தின் பேராலும் இப்படி அவமதிப்பது கூடாது. தந்தைக்கும் தாய்க்கும் அண்ணன் மார்களுக்கும் தலை வணங்கி வாழ வேண்டுமென்று விரும்பியது தான் அவள் செய்த மிகப் பெரிய தவறு.

நம்பூதிரி! அந்த ஆனின் தோழர்களிடமும் தோழியர்களிடமும் நான் அப்படி ஒரு பரிகாச பாத்திரம். என் மார்பில் கத்தியால் குத்திக் கொல்வது அதை விட மேலாக இருந்திருக்கும்.

என் கல்யாணச் சந்தை இவ்வளவு விலை ஏறாத காலத்தில் விற்றிருக்கலாமே! கருணேட்டன் முன்பு கேட்ட சுயசாதி இல்லாத ஒரு நாயர் பையனை ஏற்க இஷ்டமா என்று கேட்டாரே!

அன்று நான் தயார் அல்ல என்று பதில் எழுதினேன்! பாவம் கருணேட்டன்! ஓர் யதார்த்த அண்ணன்! சுயநலமின்றி நேசிக்கிற ஒரு சகோதரன்.

"பொல்லாத வீட்டுக்காரர்கள். தங்கம், நீ இங்கே பிறந்திருக்க வேண்டியவள் அல்ல" என்று அவர் எழுதினார்.

இதை எல்லாம் மனப்பூர்வமாகத் தூக்கி எறிந்து விட்டு இன்று நான் விற்பனைப் பொருளாக ஒரு ஷாப்பிலே என்றபடி இங்கே வசித்துக் கொண்டு இருக்க வேண்டும். அப்படித்தானே!

இதைவிட உத்தமமான வழி; ஒரு நல்ல 'சில்க்' பாலஸில் கொண்டு போய் என்னை விளம்பரத்திற்கு வைத்திருக்கலாம். இருபத்து நான்கு வயதான கல்வியறிவுள்ள ஒரு பெண்– ஒரு கிராஜுவேட்டை வைத்து காட்டிச் செய்யும் குல்மால்கள்.

இருபத்தி நான்கு வயசு ஒரு பெண்ணுக்கு மிகவும் அதிகம். நான் இன்று மனவியலை சரியாகப் படித்த ஒருத்தி. பி.டி. காலேஜை ஒரு யதார்த்தப் படிப்பு.

என் இதுவரையான வாழ்வை தாறுமாறாக்கிய சூழ்நிலைகளோடும் நபர்களோடும் எனக்கு தீவிரமான சினம் உண்டு. வைக்கிற அரிசி விஷயத்தில் கூட என் தாய் மீது நம்பிக்கையற்ற ஒரு பின்புலம்! நான் அந்த நரகில் கிடந்து உழல வேண்டும்! அழ வேண்டும்! எல்லாவற்றையும் நான் சகித்துக்

கொண்டிருப்பேன். நான் ஒரு விற்பனைப் பொருளாக காட்சிக்கு வைக்கப் படாதிருந்தால்! சென்னையில் வேலைக்காவது அனுப்பி வைத்திருந்தால்!

நான் சாகத் தயார். யார் என்னவெல்லாம் செய்து தந்தாலும் ஒருபோதும் இந்த வாழ்வில் எனக்குச் சுகம் கிட்டப் போவதில்லை. நான் அந்த அளவு வெந்து கருகி விட்டேன். நான் அந்த அளவு கொள்கைப் பிடிப்பு உள்ளவளாக இருந்து விட்டேன். ஐந்தாறு ஆண்டுகள் எந்த ஒரு மரியாதைக் கேடோ கெட்ட பேரோ இல்லாமல் இளைஞர்களிடையே நான் வாழ்ந்து விட்டேன்.

நான் இன்றும் வரலாற்றுக் களங்கம் இல்லாத பெண் தான். மரணத்தைப் பற்றிச் சொல்லும்போது அந்த விஷயத்தைச் சந்தேகிக்கக் கூடாது என்பதற்காகச் சொல்லுகிறேன்.

பரிமாறுவதற்கு மோர் இல்லை என்ற நிலையிலும் வீட்டிலே எனக்குக் கிட்டுவது கட்டித் தயிர். மற்றவர்கள் பால் இல்லாத கருங்காப்பி குடிக்கும்போது நான் எஸ்ஸென்ஸ் காப்பி குடிக்கிறேன். சொந்தப் பிள்ளைகள் இடையேயும் இவ்வளவு வித்தியாசம். அந்த நேசப்பிரவாகம்.


என் தாய் நான் சாக அனுமதிக்க மாட்டாள். ஆனால் இந்த செத்துப் பிழைத்தல் சாத்தியம் அல்ல. நான் சாவதே நல்லது. என் பழிவாங்கும் வெறி தலை தூக்கித் தாண்டவம் ஆடிய காலத்தில் சென்னையில் இருந்து வந்த உடனே ஒருமுறை அப்பா என்னிடம் சொன்னார்: ''ஒரு கணவனைக் கண்டு பிடிக்க வேண்டுமானால் நீ வார்தாவுக்குப் போய்விடு.''

ஒரு தந்தை ஒரு மகளிடம் சொல்ல வேண்டிய வார்த்தைகள்! குறிப்பாக என்னோடு. அப்பாவின் ஒவ்வொரு மருமகள்களின் 'மொராலிடி'யையும் நான் கேள்வி கேட்கிறேன். அவர்கள் ஒவ்வொருவரும் சிறிது காலமாவது நடத்தை பிசகியவர்கள் தானே! குழந்தைகளைக் கருச் சிதைவு செய்தவர்கள் தானே!

அவர்கள் இன்று பூஜிக்கப்படுகிறார்கள்.

எதற்காக எனினும் என் வாழ்வைத் தியாகம் செய்ய நான் தயாராக இருந்தேன். இன்றும் தயார். அதற்காக அந்த சரித்திரத்திற்காக இன்று உங்களை எல்லாம் தியாகம் செய்யத் தயாராகி விட்டேன். ஆம் நான் பதிதை ஆவேன்!

என் தீவிரமான சினத்தை என்னால் அடக்க முடியவில்லை. எந்த சாதியின்



''என்னுடைய ஒருமாத சம்பளத்தை கார்கில் நிதிக்குக் கொடுக்கலாம்னு நினைக்கிறேன்.''

''கொடுக்க வேண்டியதுதானே?''

''யாரும் வேலை தர மாட்டேங்கிறாங்களே!''

– என். உஷாதேவி

சாந்நித்தியத்தின் மாசைத் துடைத்தெறிய ராணா பிரதாப் யமுனா நதி தீரத்திலே சரணம் கோரினாரோ அந்த சாதியில் ஒருவரை–இந்துக்கள் மிலேச்ச சாதி என்று சொல்லும் ஒருவரை நான் நேசிக்கிறேன். ஒரு முகம்மதியரை!

இரும்பு காந்தத்தை ஆகர்ஷிப்பது போல அல்ல. தீப்பொறி ஒன்று உலர்ந்த சரீரத்தை நெருங்கியது போல நான் ஆகர்ஷித்தேன். என் மிருக இச்சையான காம வெறியைத் திருப்திப் படுத்திக் கொள்ள அல்ல.

நான் இன்றும் ஒழுக்கம் கெடாதவள் தான். ஆனால் எந்த உணர்ச்சிகளும் இல்லாதவள் என்பது அல்ல அதன் அர்த்தம். எனக்கு அசாதாரணமான சகிப்புத் தன்மை உண்டு.

நானும் அவரும் பழகத் தொடங்கினோம். என் வாழ்வின் பெரும் பகுதியை எழுதித் தள்ளிய, என்னைக் கதறக் கதற விடும் நிலையை உண்டாக்கிய சாதியோடு மட்டும் அல்ல; ஒவ்வொரு பிரிவினையோடும் எனக்கு வஞ்சம் தீர்க்கும் எண்ணத்தோடுதான் நான் அவரிடம் பழகத் தொடங்கினேன்.

அந்த மனிதர் ஒரு பணக்காரர் அல்ல. மனித வாழ்வை யதார்த்தமாகப் படித்து வைத்திருக்கிற கலைஞர் அவர்.

என் உறவைத் துண்டித்துவிட முடிந்ததெல்லாம் செய்தார். சமுதாயம், சொத்துரிமை முதலிய எல்லா எதிர் விளைவுகளையும் அவர் சுட்டிக் காட்டினார்.

(அடுத்த இதழில் முடியும்)



விளையாட்டுப் போல ஒரு மாதம் ஓடி விட்டது. சரஸ்வதியைப் பார்க்கப் போக வில்லை. எதிரில் இருக்கும் மெடிகல் ஷாப் புக்கு 'ஃபோன் செய்ய வேண்டாம்' என்று ஒரு தடவை சொல்லியிருந்தாள்.

"எதுனா பிரச்னையா சரசு?"

"இல்லே."

"பின்னே... ஃபோன் செய்ய வேணாம்னு சொல்றியே!"

"வேணாம்னா... விட்டுரேன்."

"இல்லே சரசு. எதுவும் அவசரம்னா இந்த ஃபோன் ரொம்ப வசதியா இருக்கு. அதனாலதான்."

"விட்டுரு. நேர்ல பார்த்து பேசிக்குவோம்."

கவலைப்பட்ட மாதிரியே ஆகிவிட்டது.

ஃபோன் மிக வசதி. நேரில் போகாத குறையைத் தீர்த்து விடும். அதுவும் வேண்டாம் என்று ஒதுக்கியதால், நேரி லும் போக இயலாமல் போக, சரசுவைப் பார்த்து இன் றோடு ஒரு மாதம்.

எப்படி இருக்கிறாள்? வசந்தி மேலும் கவலைப் பட்டாள்.

சரசுவின் கணவன்

சரியாய் ஒரே வார இடைவெளியில் இரண்டு பேருக்கும் திருமணம்.

வசந்தி கல்யாணத்திற்கு சரசு தன் கணவனுடன் வந்திருந்தாள்.

நிகோடின் கறை படிந்த உதடுகள். பார்வை இலக்கின்றி அலை பாய்ந்தது.

சரசுவை இழுத்து தன்னருகே நிறுத்திக் கொண்டாள்.

"ஏண்டி... எப்படி உன் ஹப்பி?"

சரஸ்வதியின் முகம் எப்போதும் போல மலர்ந்திருந்தது.

"உனக்கு சிகரெட் புகையே பிடிக்காதே?"

அதற்கும் புன்சிரிப்புத்தான்.

"உனக்கு சந்தோஷமா... சரசு?"

இந்தக் கேள்வியை அன்று ஏன் கேட்கத் தோன்றியது என்பதற்கு இன்றுவரை மனசுக் குள் அர்த்தமாகவில்லை.

உள்ளூர ஏதோ தன்னை அச்சுறுத்தி இருக்கிறது. அது கவலையாக, பயமாக, ஒரு கேள்வியாக வெளிப்பட்டு விட்டது.

அப்போது மெடிகல் ஷாப்பிற்கு ஃபோன் செய்து கொண்டிருந்த காலம்.

தற்செயலாகத்தான் சரசுவை அழைத்

தான்.

"லைன்ல இருக்கீங்களா. பையன் போய் அழைச்சுக்கிட்டு வரணும்."

"கட் பண்ணிடறேன். அஞ்சு நிமிஷத்துல மறுபடி கூப்பிடறேன்" என்றாள்.

சரசுவின் குரல் கேட்டதும் சந்தோஷமாய் இருந்தது. நேரில் விட ஃபோனில் அவள் குரல் கூடுதலாய் இனிக்கும். ஏன் அது போல உணர்கிறாள் என்று புரியவில்லை. சரசுவிடமே சொல்லியிருக்கிறாள்.

"சரசு.... இந்த ஸண்டே நீயும் அவரும் எங்க வீட்டுக்கு சாப்பிட வரீங்க... சரியா?"

எதிர்முனை மௌனமாய் இருந்தது.

"சரசு."

"ம்..."

குரல் கேட்டதும்தான் ஆசுவாசமானது.

"என்னடி பதிலே இல்லே?"

"வரலை. வர முடியாது."

குரல் திணறிப் போய் வந்தது.

"ஏன்?"

"நேர்ல வா. பேசிக்கலாம். வச்சுடறேன்."

வசந்தியின் பதிலை எதிர்பாராது வைத்து விட்ட சப்தம் கேட்டது.

அடுத்த ஒரு மணி நேரத்தில் வசந்தி சரசுவின் வீட்டில் இருந்தாள்.


"என்னடி?"

வழி நெடுக யோசித்து வந்ததை எல்லாம் தூக்கிச் சாப்பிடுகிற மாதிரியான ஒரு குண்டைப் போட்டாள் சரஸ்வதி.

"அவர் இப்ப என்னோட இல்லை..."

"என்ன..."

"ரெண்டு வாரமாச்சு. ஏற்கெனவே ஒரு தொடர்பு இருக்காம். சாதாரண பழக்கம்னு நினைச்சாராம். நெருக்கமாவே இருந்திருக்காங்க. என்னோட கல்யாணம் ஆனதும்தான் புரிஞ்சுதாம். அவளை மறக்க முடியலைன்னு. என்னை விட அவதான் கூடுதலா மனசுல நிக்கிறாளாம்."



வசந்திக்கு வாய் உலர்ந்து போனது.

என்ன மனுஷன் இவன். ஏதோ இரண்டு உடுப்புகளுக்கு இடையே செலக்ஷன் செய்வது போல....

"நீ பேசாம விட்டியா?" என்றாள் எரிச்சலுடன்.

"வேற என்ன செய்ய? நேர்மையா ஒப்புக்கிட்டாரு. அவரைக் கட்டிப் போட்டா வைக்க முடியும்?"

"ஏய்... இது உன்னோட வாழ்க்கை..."

"அதனாலதான் மேல மேல குழப்பிக் கொள்ளாம அவரை அனுப்பிச்சிட்டேன்" என்றாள் அமைதியாக.

என்ன சொல்வது என்று புலப்படாமல் சரஸ்வதியையே வெறித்தாள்.

"ஸாரிடி. ஸண்டே நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து விருந்துக்கு வரமுடியாது."

"போடி..." வசந்தி தன்னையும் மீறி குமுறினாள்.

எத்தனை இயல்பாய் எடுத்துக் கொள்கிறாள். இழப்பு இவளைப் பாதிக்கவில்லையா?

ரிஷபன்

இசைக் குழுவில் நமது இசைப்புயல்!



மூன்றாம் உலக நாடுகளில் வறுமையால் வாடும் குழந்தைகளுக்காக நிதி திரட்டுகிறது, இங்கிலாந்தைச் சேர்ந்த டிரிபியூட் மானேஜ்மெண்ட் எனும் நிறுவனம். இதற்காக ஹாலிவுட்டின் பிரபல நட்சத்திரங்கள், பாடகர்களைக் கொண்டு உலகம் முழுவதும் இசை நிகழ்ச்சிகளை நடத்துகிறது- இந்த இசைப் பயணத்துக்கு 'Listen' என்று பெயர். இக்குழு நவம்பர் 20-ம் தேதி நம் நாட்டிலும் இசை நிகழ்ச்சி நடத்தவுள்ளது. இதிலெல்லாம் என்ன விசேஷமிருக்கிறது என்கிறீர்களா? இந்த இசைக் குழுவில் நமது ஏ.ஆர். ரஹ்மானும் இடம் பெற்றிருக்கிறார். நிகழ்ச்சியில் பீத்தோவனின் 'சிம்பொனி'யை மேலும் நவீனப்படுத்தி வழங்கப் போகிறாராம் ரஹ்மான்.

— பி.எம்.எஸ்.

"ஸ்கூல்ல மறுபடி வேலை கேட்டுப் போகணும். கல்யாணத்தப்ப வேலைக்குப் போக வேண்டாம்னு இவர் சொன்னதை நம்பி விட்டாச்சு. ம்ஹூம்... அவங்க என்ன சொல்லப் போறாங்களோ..."

"நான் வேணா... இவரை அனுப்பி உங்க வீட்டுக்காரரை... நியாயம் கேட்டு..."

வசந்தி முடிக்கவில்லை.

"எதுக்கு? அதான் முடிஞ்சு போச்சே."

ஒரு மாதம் ஆனது. வசந்தி தன்னிலைக்கு வர. நினைக்க நினைக்க எரிச்சல் மேலிட்டுக் கொண்டு போனது சரஸ்வதியே இயல்பாய் எடுத்துக் கொண்ட போதிலும்.

பிறகுதான் மெடிகல் ஷாப்பிற்கு ஃபோன் செய்ய வேண்டாம் என்றது. நேரில் போக வசதிப்படாமல் ஏதாவது ஒரு வேலை தடுத்தது.

மெடிகல் ஷாப்பில் கூட்டம் இல்லை போலும் நிதானமாய்ப் பேசினார்.

"இருக்காங்களான்னு பார்த்தா போதும் ஸார். நான் நேர்ல வந்து பேசிக்கறேன்" என்றாள்.

"அவங்க வீட்டைக் காலி பண்ணிக்கிட்டு போயிட்டாங்களே..."

"எப்ப?" என்றாள் திடுக்கிடலுடன்.

"ஞாபகம் இல்லீங்க. வச்சுரவா."

தனக்குக் கூட தெரிவிக்கவில்லை. சிநேகிதி என்கிற முறையில் என்ன செய்திருக்கிறாள். தெரிவிக்க அவசியம் இல்லை என்று நினைத்து விட்டாளா?

இரவு கணவன் வீடு திரும்பியதும் அரற்றித் தீர்த்து விட்டாள்.

"எப்படிப் பழகினோம். வீட்டைக் காலி பண்றதைக் கூட சொல்லலே... பாருங்க..."

பேசாமல் உணவை விழுங்கிக் கொண்டிருந்தான்.

"அவ புருஷன் விட்டுட்டுப் போனதும் எப்படி தவிச்சுப் போயிட்டேன். என் படபடப்பு எனக்குத்தான் தெரியும்."

விடாமல் புலம்பவும் குறுக்கிட்டான்.

"இங்கே பாரு... அவ உன் ஃப்ரெண்ட்தான். ஆனா, வேற ரகம். நான் சொல்ல வேணாம்னு பார்த்தேன். அவளுக்குப் புருஷனே அவசியம் இல்லே."

என்ன சொல்கிறான்... திகைப்புடன் பார்த்தாள்.

"தப்பான அர்த்தத்துல சொல்லலே. கணவன், குடும்பம்னு ஒரு அமைப்புல வாழற ரகம் இல்லே. எல்லாம் தனக்குத் தெரியும்னு காலர் விடைச்சுக்கிற டைப். இதுவே நீயா இருந்தா ஆடிப் போயிருப்பே... அவ பாரு... எதுவுமே நடக்காத மாதிரி... வேலைக்குப் போறா. வேற வீடு பார்க்கிறா. குடும்பத்துல அடங்கற பொம்பளை இல்லே..."

'தன்னால முடியும்' என்று நிமிர்ந்து நிற்பவளின் முதுகு ஒடித்துப் பார்க்கும் தன் கணவனின் பேச்சில் அதிர்ந்து போய்ப் பார்த்தாள் வசந்தி.

தட்டு சாதம் அப்படியே வைத்திருந்தாள் வசந்தி. சாப்பிடத் தோன்றவில்லை. ○

வட்டமேஜை

கல்கியின் தனித்துவம்!

✉ 'தோல்வியின் நாயகன்' அருமையாக இருந்தது. மற்ற ஏடுகள் அனைத்தும் பாகிஸ்தானை சாடியபடி இருக்க, கல்கி மட்டும் அந் நாட்டின் பொருளாதார நிலை, மனிதவள மேம்பாடு, மகளிர் கல்வி போன்ற நிலைமை களைக் குறித்து எழுதியிருப்பது அத னுடைய தனித்துவத்தைக் காட்டுகிறது!

குட்டலாடம்பட்டி, கே. மூர்த்தி.

✉ ஒரே கேள்வி என்று நீங்கள் ஒரு டஜன் பேரிடம் கேட்டிருந்தாலும் 'நச்'சென்று பதில் சொல்லியது பாண்டிய ராஜன்தான். ஒரு டஜன் பேரிலும் சொதப்பியது வெண்ணிற ஆடை மூர்த்தி தான். சினிமாவில் பேசத் தொடங்கினால் நிறுத்தாத மூர்த்தி, நாட்டு நடப்பு அறியா தது விந்தையே!

சென்னை - 28, ஏ.எஸ். தீபன்.

✉ இராஸ்சயாவின் கமலஹாசன் பற்றிய கருத்துக்களை வரவேற்கிறேன். மேலும், கமல் மதிக்கும் பெரியாரை மட்டும் ஈ.வெ.ரா. என்றோ ராமசாமி நாயக்கர் என்றோ குறிப்பிடாமல் பெரி யார் என்று அழைப்பதன் காரணம் என்ன? வேறு எவரும் அந்தப் பட்டத்துக்கு உரியவராகக் கூடாதென்ற எண்ணமா, அல்லது தைரிய மின்மையா?

சென்னை - 17, ரா. நரசிம்மன்.

✉ தர்மம் தலைகாக்கும் என்பதற்கு மீசை புராணம் மிகச் சிறந்த உதாரணம். வளர்ப் புக் காளைகள் உயிர் காத்த 'கல்லூத்து' அதிசயம் மெய்சிலிர்க்கச் செய்தது!

திருவண்ணாமலை, ஆர். ராமசாமி.

✉ தேர்தல் முடிவுகளில் ஆச்சர்யக் குறி ஏற்படுத்தி, தேர்தலுக்குப் பின்பு த.மா.கா. கேள்விக் குறி எழுப்பாமலிருந்தால், நிச் சயம் மதுரை மாநாடு வைத்தது முற்றுப் புள்ளிதான் என்று நம்பலாம்!

புனே, ஜெ. ரஜினி ராம்கி.

✉ வைரமுத்துவின் 'பெய்யெனப் பெய்யும் மழை' கவிதை நூல் வெளி யீட்டு விழாவில் நடந்தேறிய சுவாரஸ்ய மான விஷயங்களைத் தொகுப்பாக்கி யிருந்த விதம், விழா வுக்கு நேரில் சென்று வந்த உணர்வை ஏற்படுத்தியிருந்தது. வெல்டன்.

மொரட்டுப்பாளையம், க.நா. இராஜேஸ்வரன்.

✉ எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்து கணக்கில் புலியாகத் திகழும் ரங்கசாமியைப் பற்றிப் படித்தவுடன் வியப்பாக இருந்தது.

மங்கநல்லூர், எல். துர்காதேவி.

✉ இவ்வார கல்கி என்ன சாதனையாளர் கள் சிறப்பிதழா? அமரர் கல்கி, கவிஞர் வைரமுத்து, கணித மேதை ரங்கசாமி, கண்களின் காதலர் சிவராம்ஜி, கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள் போன்றோரது செய்தி களாகப் போட்டு அசத்தி விட்டீர்களே!

நெய்வேலி - 3, க. சுந்தர்.

✉ குட்டிக்குட்டி கதை கள் மூலம்.... 'பணம்' கட்டுரையில் பல விஷயங்களை உணர வைத்திருந்தார், சுவாமி சுகபோதானந்தா!

திருச்செங்கோடு, டி.ஏ.சி. பிரகாஷ்.

✉ காதலர் தினம் படத்தின் விமர்சனம் அருமையாக இருந்தது.

அரசர்குளம், அ. ரஹீம்கஸாலி ஷமீம்.

✉ பால் மணம் மாறாத பச்சிளங் குழந் தைகளிடையே பேத உணர்ச்சியோ மற்றும் காழ்ப்பு உணர்ச்சியோ எப்பொழு தும் இடையாது என்ற உண்மையைப் பெற்றோர் உணர வேண்டும் என்ற கருத் தில் நந்தன் புனைந்திருக்கும் 'குழந்தைகள், பெண்கள், அம்மாக்கள்' என்னும் சிறுகதை மனதிற்குள் இதமளித்தது.

விழுப்புரம், வை. வெங்கடேசன்.

சீர்காழி கோவிந்தராஜனின் மகனான சிவசிதம்பரம் இன்று திரையுலகில் அவ்வளவாகப் பாடாவிட்டாலும் இசை மேடைகளில் வெளுத்துக் கட்டிக் கொண்டிருக்கிறார். சாதனைகளுக்குப் பின்னாலிருக்கும் உழைப்பும் முயற்சியும் ஒரு பக்கமிருக்க, ஏழு வருடம் முன்பு நடந்த ஒரு விபத்து, இனி இவரை மேடையில் பார்க்க முடியுமா என்ற ஏக்கத்தையே ரசிகர்களுக்கு உண்டு பண்ணியது. மறுபடி உயிர்த்து எழுந்து வருவதற்கு இவர் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல!

சாதாரணமாகச் சென்னையைவிட்டு நீண்ட தூரம் போக வேண்டும் என்றால் ரயிலிலோ, விமானத்திலோ செல்வது சிவசிதம்பரத்தின் வழக்கம். ஆனால் துரதிருஷ்டவசமாக கடந்த 92-ம் ஆண்டு நவம்பர் 13-ம் தேதி அவரது இந்த வழக்கம் மாறியது.



அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் செனட் கூட்டத்தில் கலந்து கொள்ள (அப்போது அவர் அண்ணாமலை பல்கலைக் கழக செனட் உறுப்பினராக இருந்தார்) செல்லவிருந்த அவருக்கு, ரயிலில் டிக்கெட் கிடைக்கவில்லை. ஆகவே காரில் செல்ல முடிவெடுத்தார். அன்றைய தினம் சிதம்பரத்தில் ஒரு இசை நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததால் தமது குழுவினரை ரயிலில் அனுப்பி வைத்த சிவசிதம்பரம், 13-ம் தேதி காலை காரில் புறப்பட்டார்.

வழியில் உப்பிலியப்பன் கோயிலுக்கும் சென்று வழிபட்டு வரலாம் என்கிற எண்ணத்துடன் சென்று கொண்டிருந்த போதுதான் அந்த விபத்து நடந்தது.

வண்டலூர் அருகே மெதுவாகச் சென்று கொண்டிருந்த அவரது கார் மீது சென்னையை நோக்கி வந்து கொண்டிருந்த வேன் ஒன்று பலமாக மோதியது. கண்ணிமைக்கும் நேரத்தில், தலையிலும் தொடையிலும் பலத்த காயமடைந்து விழுந்தார் சிவசிதம்பரம். அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இசையுலகமே கலங்கிய சம்பவம் அது! மீண்டும் பழைய ஆற்றலைப் பெற்று அவர் மீண்டுவர வேண்டுமே என்று இறைவனை வேண்டாதார் இல்லை.

இத்தனை களேபரத்திலும் ஒருத்தர் மட்டும் கலங்கவே இல்லை. அது சிவசிதம்பரமேதான்! அவரது மன உறுதி மட்டுமே அன்று உயிரைக் காத்தது!

டாக்டர்களின் தீவிர சிகிச்சையும் இணைய, உயிர் பிழைத்த சிவசிதம்பரம், சிறிது நாட்கள் மருத்துவமனையிலும் வீட்டிலும் ஓய்வெடுக்க வேண்டி இருந்தது. இந்த நாட்களில் கூட சிறிதளவு நேரத்தையும் வீணாக்கவில்லை அவர். கம்ப்யூட்டரில் சிறந்து விளங்கும் மாணவர் ஒருவரை வீட்டுக்கு அழைத்து வந்து அதில் பயிற்சி எடுத்தார். அத்துடன் தமது

இரு கண்களாக நினைத்து வரும் சங்கீதத்தையும் வைத்தியத் துறையையும் இணைக்கும் வகையில் "ஆனந்த பைரவி ராகமும் ரத்த அழுத்தமும்" எனும் ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதினார்! தமிழிசையில் தம் ஆற்றலைப் பெருக்கும் வகையில் பல நூல்களைப் படித்தார்.

எல்லாம் ஓரிரு மாதங்களுக்குத்தான். தன்னால் ஓரளவு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடியும் என்ற நிலை வந்ததும் வீல் சேர் மற்றும் வாக்கிங் ஸ்டிக்கின் உதவியுடன் கச்சேரிகளில் கலந்து கொள்ளத் தொடங்கினார். ஐரோப்பிய நாடுகளுக்குக் கூட வாக்கிங் ஸ்டிக்குடன் சென்று நிகழ்ச்சிகளை நடத்தினார்.

"ஒரு கலைஞன் தூங்கும்போது கூட காலாட்டிக் கொண்டு இருக்க வேண்டும் என்று என் அப்பா அடிக்கடி கூறுவார். நான் விபத்தில் விழுந்தபோது எனக்கு இந்த வரிகள்தான் அடிக்கடி ஞாபகம் வந்தது. எனவே எத்தனை கஷ்டம் வந்தபோதும் - பாடுவது என முடிவெடுத்தேன்" என்கிறார்

சங்கீதக் கொடி மகன்!

சிவசிதம்பரம்.

விபத்துக்குப் பிறகு தாம் மீண்டும் உயிர்த்து வந்த விஷயம் மற்றவர்களுக்கு வேண்டுமானால் மறு பிறவியாகத் தெரியலாமே தவிர, தமக்கு அப்படித் தோன்றவில்லை என்கிறார். "ஒரு கலைஞனின் வாழ்க்கையைப் பொறுத்த வரை, அவன் சோதனைகளைக் கடந்து மக்கள் மத்தியில் பிரபலமாவதையே மறு பிறவி என்று கூற வேண்டும். அந்த வகையில் பார்த்தால் நான் மறு பிறவி எடுத்ததாகச் சொல்ல முடியாது. அந்த விபத்தை ஒரு சாதாரண சம்பவமாகவே நினைக்கிறேன். இருப்பினும் என்னை நன்றாக உணர்ந்துகொள்ள அந்த விபத்து ஒரு காரணமாக விளங்கியது. அதுவரையில் பரந்து கிடந்த நோக்கங்களை வலுப்படுத்திக் கொண்டு, நல்ல முயற்சிகளுக்கு மட்டுமே என் ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ளும் முடிவை எடுக்க 92-ல் நடந்த விபத்து ஒரு காரணமாய் இருந்தது. அதைத் தொடர்ந்து என் தந்தையாரின் பாதையிலேயே என் பாதையையும் இணைத்துக் கொண்டு இசையுலகில் நடை போடுகிறேன்" என்கிறார்.

திரையுலகில் கணீர் குரல்களுக்கு இருந்த வரவேற்பு போனதால் இவருக்கு சினிமாவில் பாடும் வாய்ப்புகள் குறைந்து விட்டன. இதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், மேடைக் கச்சேரிகளில் கவனம் செலுத்தி வரும் இவருக்கு 'ஜோடி' படத்தின் மூலம் மறுவாய்ப்புக் கொடுத்துள்ளார் ஏ.ஆர். ரஹ்மான். இப்படத்தில் வரும் 'அஞ்சாதே ஜீவா' எனும் பாடலைப் பாடியிருக்கிறார். அத்துடன் 'சேரன், சோழன், பாண்டியன்' எனும் படத்திலும் இரண்டு பாடல்கள்.

"சினிமாவில் அதிகம் சான்ஸ் கிடைக்காததற்காக நான் என்றுமே கலங்கியதில்லை. என் கையில் தேசியக் கொடிக்கு நிகரான ஒரு கொடி இருக்கிறது. அதுதான் என் தந்தையார் சீர்காழி கோவிந்தராஜனின் புகழ்க் கொடி! அதைப் பிடித்துக் கொண்டு முன்னேறுவேன்" என்று கூறும் சிவசிதம்பரத்துக்கு இப்போதுள்ள இசையமைப்பாளர்களில் மிகவும் பிடித்தவர் ஏ.ஆர். ரஹ்மான்.

"இன்றைய இசையமைப்பாளர்களில் எல்லா தரப்பு இசைக்கலைஞர்களையும் வைத்து வேலை வாங்கும் திறமை அவருக்கு உண்டு" என்கிறார் சிவசிதம்பரம்.

— பி.எம். சுதிர்

படம் : ஸ்ரீஹரி

— சீர்காழி சிவசிதம்பரம்



Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1900/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 950/- (Air Mail)

ஸ்ரீ:

ஸ்ரீமந் நடனகோபால நாயக்யை நம:



"ராணி சாரீஸ்"

"RANEE SAREES"

MADURAI

SPECIAL QUALITY

COLOURS ARE GUARANTEED

FOR DHOBI WASH

COPY RIGHT REGD. A-52846/95

சேலைகளின்
நிறம்
அது நிரந்தரம்
அதுவே...
ராணி சாரீஸ்
தரம்!

மதுரை **ராணி சாரீஸ்** சுங்குடிப் புடைவைகளுக்கு

சென்னையில் நிரந்தர தனி ஷோரூம்

- 5.40 மீட்டர் முதல் 9.20 மீட்டர் வரை ராணி சாரீஸ் கிடைக்கும்.
- மதுரை Special cotton Sundhar Sarees, பெங்கால் காட்டன், பாலி காட்டன், நெகமம், வேங்கடகிரி, கோடம்பாக்கம், அனைத்துரக பேன்ஸி காட்டன் மற்றும் அனைத்து ரக சுங்குடி சேலைகள் கிடைக்கும்.
- சல்வார், சூடிதார் மெட்டீரியல்ஸ் கிடைக்கும்.
- திருமண விசேஷங்களுக்கான உயர்தர வேஷ்டிகள் கிடைக்கும்
- சென்னையில் ஒரிஜினல் ராணி சாரீஸ் இங்கு மட்டுமே உண்டு.

மற்றவை நம் தயாரிப்பல்ல

ராணி சாரீஸ் எக்ஸ்குளூஸிவ் ஷாப்பி

கோல்டு கிரஸ்ட் காம்ப்ளக்ஸ் முதல் மாடி

54 & 55 வடக்கு உஸ்மான் ரோடு, தி. நகர், பனகல் பார்க்,

(ஸ்ரீ சாரதா வித்யாலயா பள்ளி எதிரில்)

சென்னை – 17 Ph: 8225778

SNC MDY

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / MS (S) M4392 /99" Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 " Registered as a Newspaper in Srilanka